இதழ் 214

# மண்

ஜேர்மனி / 2022
ஆடி - ஆவணி / July - August



அகிலம் போற்றும்
அன்னை திரேசா
பிறந்தநாள்
26.08.1910 -
05.09.1997




















”மண்” சஞ்சிகையின் மனிதநேய செயற்பாட்டாளர் திருமதி சிவதர்சினி பிராங்ளின் அவர்களின் பிறந்த நாளையொட்டி 24.05.2022 அன்றையதினம் இவரின் நிதிப்பங்களிப்பில் முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காயிலுள்ள ஒளிரும் இல்லத்தின் சிறுவர்பாடசாலை மாணவர்களுக்கு மண் சஞ்சிகையின் அனுசரணையுடன் சிற்றுண்டி, மதிய உணவு, பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர் போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

015254799233

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

இலங்கையில் அண்மைக் காலமாக இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்திருப்பதாகவும், தற்போது மதுபானங்களின் விலை அதிகரித்துள்ளதால் கஞ்சா கலந்த போதையை தூண்டும் போதைவஸ்துகளின் பயன்பாடு அதிகரித்திருப்பதாகவும் சிறீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ஞானதாச பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார். எனவே அத்தகைய போதைவஸ்துகளை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாகவே முன்னெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

போதைப் பொருட்கள் பண்டைக்காலம் முதல் பாவனையில் இருந்து வந்துள்ளன. அபின், கஞ்சா, கள், சாராயம், கசிப்பு, பீடி, சிகரெட், சுருட்டு என்பன மக்களால் பாவிக்கப்பட்டு வந்தன. விஞ்ஞான வளர்ச்சி காரணமாக பண்டைக்கால போதைவஸ்துக்கள் நவீன உருவிலும் இலகுவான தன்மையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

இளைஞர்கள் குறுக்கு வழியில் இன்பம் அனுபவிக்க போதைப் பொருட்களை உட்கொள்கின்றனர். இலங்கையில் தற்போது இலட்சக்கணக்கானோர் போதைவஸ்துக்கு அடிமையாக உள்ளனர் என்று ஒரு தகவல் தெரிவிக்கின்றது. போதைவஸ்து பாவனை உலகை நீண்ட காலமாக அச்சுறுத்தி வருகின்றது. இவற்றைப் பாவிப்பதால் மக்கள் பல்வேறு நோய்களுக்கு உட்படுவதோடு தனது குடும்பத்துக்கு கெட்ட பெயர் உண்டாக்குவதும் பிறருக்கு தீங்கு விளைவிப்பவராகவும் மாறுகின்றனர்.

இலங்கையிலும் போதைவஸ்து கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு கடும் தண்டனை அளிப்பதன் மூலமே போதைவஸ்து பாவிப்பதனால் ஏற்படும் தீங்குகளில் இருந்து எமது நாட்டு சமுதாயத்தை பாதுகாக்க முடியும். குடும்ப வாழ்வை சீரழிக்கும், நாட்டை குட்டிச் சுவராக்கும் போதைவஸ்து பாவனையை வேரோடு களைய ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூணுதல் அவசியம். இதற்காக போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபை போதைப் பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் அக்கறையுடன் செயற்படுகிறது.

"போதைவஸ்து பாவனைக்கு அடிமையானோரை அதிலிருந்து மீட்டெடுப்பது, புதிதாக போதைவஸ்து பாவனைக்கு அடிமைப்படாமல் இளம் சந்ததியினரை பாதுகாப்பது" என்ற இலக்கில் அரசாங்கம் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது பாராட்டத்தக்கது. கெட்ட பழக்கங்களை முளையிலேயே கிள்ளி விடுவது இலகுவான காரியமாகும். பெற்றோர் தங்களது பிள்ளைகளின் மீது மிகுந்த அவதானம் இருப்பின் இவ்வாறான கெட்ட விடயங்களில் இருந்து தங்களது பிள்ளைகளை காப்பாற்ற முடியும்.

பெற்றோர் அளவுக்கதிகமாக சுதந்திரமும் பணமும் அளிப்பதன் மூலமே பிள்ளைகள் கெடுவதற்கு வாய்ப்பு அதிகமாக காணப்படுகிறது. எனவே பெற்றோர் பிள்ளைகள் மீது மிகுந்த கவனம் செலுத்துதல் மூலம் இவ்வாறான கெட்ட செயல்களில் இருந்து பிள்ளைகளை நாட்டின் நற்பிரஜைகளாக உருவாக்க முடியும்.

தங்களது பிள்ளைகளிடத்தில் தன்னம்பிக்கை குறைதல், படிப்பில் ஆர்வம் குறைதல், விளையாட்டுக்களில் ஆர்வம் குறைதல், சோம்பல், சற்று ஆர்வம் குறைந்த தோற்றம், பெற்றோரிடம் வாக்குவாதம் செய்வது, ஆசிரியரிடம் அதிக வாக்குவாதம் செய்வது காணப்பட்டால் பெற்றோர் கூடிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட நிலையில் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும் மருந்துகளேயாயினும் அளவுக்கு மீறி எடுத்துக் கொள்வது ஆபத்தில் முடியும் என்பதை பிள்ளைகளுக்கு பெற்றோர் விளக்கமளிக்க வேண்டும். தங்களது பிள்ளைகள் யாராவது போதைவஸ்து பாவனைக்கு அடிமையாகி இருப்பது தெரிந்தால் உடனடியாக மருத்துவமனை, போதைப் பொருட்கள் அடிமைத்தனத்தை போக்கும் இடங்களுக்கு அழைத்துச் சென்று தீவிர சிகிச்சை அளிப்பது முக்கியமானதும் அவசியமானதுமான விடயமாகும்.

போதைவஸ்து பாவனையை முற்றாக ஒழிப்பதற்கு முதலாவது அரசாங்கம் போதைவஸ்து கடத்தல்காரர்களுக்கு உடனடி கடும் தண்டனை அளிக்க வேண்டும். இரண்டாவது பெற்றோர் தங்களது பிள்ளைகளை தீய நண்பர்களின் சகவாசத்திலிருந்து பாதுகாத்து அவதானத்துடன் வளர்த்தெடுக்க வேண்டும்.

இன்று நாடே அரசியல், பொருளாதாரம், எரிபொருள் போன்ற பல நெருக்கடிகளால் சீர்குலைந்து காணப்படுகின்றது. எங்கும் விலை ஏற்றம், தட்டுப்பாடு, பதுக்கல், கள்ளச்சந்தை, பாலியல், கொலை, கொள்ளை என குற்றச் செயல்கள் அதிகரித்தவண்ணமே காணப்படுகின்றது. இவ்வளவு துன்ப துயர வாழ்விலும் போதைபொருட்கள் கடத்தல்காரர்கள், வியாபாரிகள், பாவிப்போர் தொகையும் அதிகரித்துள்ளது. குறிப்பாக பாடசாலை மாணவர்களிடத்திலும் இந்தப் பழக்கம் அதிகரித்துவருவதாகப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

நாட்டின் எதிர்காலச் தலைவர்கள், நாட்டை வழிநடத்துபவர்கள் இந்த மாணவச் செல்வங்கள்தான். அப்படிப்பட்ட மாணவமணிகள் இப்படிப் போதைகளில் அடிமையாகிச் சீர்குலைய நாம்விடமுடியுமா?.. புலம்பெயர் நாடுகளிலிருந்து வழங்கும் உதவிப்பணம் கூட இளைய சமூகத்தின் சீரழிவுக்குக் காரணம் என்றும் கூறப்படுகின்றது.

இப்படிப்பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டாலும், அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்தாலும் இந்தப் பழக்கத்துக்கு அடிமையாகி வருபவர்களை மீட்டெடுத்து ஆரோக்கியமான சமூகத்தைப் படைக்கவேண்டிய பொறுப்பு அனைத்துத் தரப்பினருக்கும் உண்டே!.. **-ஆசிரியர்- 01.07.2022**

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

### அஃகம் சுருக்கேல்...

நெல், பயறு, உழுந்து, துவரை போன்ற தானியங்கள் நாம் உணவு தயாரிக்கத் தேவைப்படும். இல்லையா?..இவைகளை எல்லோருமே பயிர் செய்து பெறமுடியாது. கடைகளில்தான் வாங்க வேண்டும். வியாபாரிகளைத்தான் நம்பி இருக்க வேண்டும். மக்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களைப் பதுக்காதே என்கிறோமில்லையா, இன்று?..இதை அன்றைக்கே அவ்வை இரண்டே வார்த்தைகளில் அழகாகக் கூறினார். எல்லோருக்கும் பயன்படும் தானியங்களை உள்ளே வைத்துக்கொண்டு இல்லை என்று கூறாதே, அதிக விலைக்கு விற்காதே, அளவைக் குறைத்துக் கொடுத்து ஏமாற்றாதே என்று வியாபாரிகளுக்கு அறிவுரை வழங்குகின்றார் தமிழ்ப்பாட்டி. இரண்டே வார்த்தைகளில் அ.்.கம் - தானியம் - சுருங்கேல் - குறைக்காதே, பதுக்காதே.

### கண்டு ஒன்று சொல்லேல்...

பள்ளிக்கூட வகுப்பறை. ஆசிரியர் இன்று வரவில்லை. பாலு ஒரு மாணவனின் பென்சிலைத் திருடி விடுகிறான். கிட்டு அதைப் பார்த்துவிடுகிறான். கிட்டு பாலுவின் நண்பன். ஆசிரியர் வருகிறார். திருட்டுக் கொடுத்த பையன், ஆசிரியரிடம் கூறுகிறான். ஆசிரியர் விசாரிக்க கோபுதான் எடுத்தான் எனப்பொய் சொல்கிறான் கிட்டு. கோபுவிற்குத் தண்டனை கிடைக்கின்றது. குற்றவாளி பாலு.. தண்டனை பெற்றது கோபு..இதற்குக் காரணம் யார்?..கிட்டுதானே?... அவன் உண்மையைக் கூறியிருந்தால் கோபுவிற்குத் தண்டனை கிடைத்திருக்காது. ஆகையால்தான் அவ்வையார் கூறுகிறார், கண்ணால் கண்டதற்கு மாறாகப் பொய்ச் சாட்சி சொல்லாதே என்று...

## ஆமாம்!...ஆமாம்!..

கவிஞர் கண்ணதாசன்ஒரு கல்லூரிக் கவியரங்கத்தில் கலந்துகொண்டு கவிதையை வாசிக்க ஆரம்பித்தார். அரங்கத்தில் உற்சாக ஆரவாரம் எழுந்தது. அவர் கவிதை வாசிக்கும்போது ஒவ்வொரு வரிக்கும் பலத்த கைதட்டல் எழுந்தது. வாசித்து முடிந்ததும் கரவொலி அடங்க வெகுநேரம் பிடித்தது.

கைதட்டல்கள் முடிந்ததும், கண்ணதாசன்சொன்னார், "இன்று நான் வாசித்த கவிதை நான் எழுதியது அல்ல. உங்கள் கல்லூரி மாணவர் ஒருவர் நேற்று ஒரு கவிதை எடுத்துக்கொண்டு வந்து என்னிடம் காண்பித்தார். அது மிக நன்றாக இருந்தது. எனவே நான் எழுதியகவிதையை அவரை வாசிக்கச் சொல்லிவிட்டு அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தேன்.

என் கவிதையை அவர் வாசிக்கும்போது எந்தவித ஆரவாரமும் இல்லை. அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தபோது பலத்த வரவேற்பு. ஆக "சொல்பவன் யார் என்பதைத்தான் உலகம் பார்க்கிறதே ஒழிய,சொல்லும் பொருளைப்பற்றிக் கவலைப்படுவதில்லை." என்பதுதான் உண்மை என்று புரிகிறது.

ஒரு பிரபலமானவன் "முயலுக்கு மூன்று கால்கள்" மட்டும்தான் என்று சொன்னாலும் ஆமாம்!..ஆமாம்!.. என்று சொல்லும் சமுதாயத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்..!!

## சிறந்த மாணவன்!..

டீச்சர் கேட்டார்...
பார்வதி ஏன் சிவபெருமானை மணந்தார்?
மாணவனின் பதில்...
சிவன் துணிகள் உடுப்பதில்லை அதனால் துவைக்கும் வேலை குறைவு
எப்பவும் தலையில் சந்திரன் இருப்பதால் வெளிச்சமாக இருக்கும் ..
ஜடாமுடியிலிருந்து கங்கை கொட்டுவதால் மோட்டார் போட்டு டேங்க்கில் தண்ணீர் ஏற்ற வேண்டாம்....
சிவன் பச்சை காய்கறி சாப்பிடுவதால் சமைத்து கொட்ட வேண்டாம்
சிவனுக்கு அம்மா அப்பா இல்லாததால் மாமியார் தொல்லை இல்லை.
மயங்கி விழுந்த டீச்சர் எழுந்திருக்கவேயில்லை...

# தெனாலி ராமன் கதைகள்... (Thenali Raman Stories)



## தெனாலி ராமன் கதைகள் - நீர் இறைத்த திருடர்கள்

ஒரு சமயம் விஜயநகர ராஜ்யத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. பருவ மழை தவறி விட்டதால் குளம், குட்டை, ஏரி எல்லாம் வற்றிவிட்டது. தெனாலிராமன் வீட்டுக் கிணற்றிலும் நீர் குறைந்து அதிக ஆழத்திற்குப் போய்விட்டது. இதனால் தினமும் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச மிகவும் சிரமப்பட்டான் தெனாலிராமன்.

இந்த சமயத்தில் ஒரு நாள் இரவு நான்கு திருடர்கள் தன் தோட்டத்தில் பதுங்கி இருப்பதைக் கண்டான். உடனே வீட்டிற்கு வந்து தன் மனைவியிடம், "அடியே, நம் நாட்டில் பருவ மழை தவறிவிட்டதால், பஞ்சம் ஏற்பட்டு விட்டது. எனவே நிறைய திருட்டு நடக்க ஆரம்பித்து விட்டது. பஞ்ச காலம் முடியும் வரை நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எனவே நாம் ஒரு காரியம் செய்வோம்" என்று வெளியே பதுங்கியிருந்த திருடர்களுக்கு கேட்கும் வண்ணம் உரத்த குரலில் பேசினான்.

"அதற்கு என்ன செய்யலாம்?" என்று தெனாலிராமனின் மனைவி கேட்டாள். "வீட்டிலுள்ள நகை, மற்றும் விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் இந்தப் பெட்டியில் போட்டு பூட்டு. நாம் இந்தப் பெட்டியை யாருக்கும் தெரியாமல் கிணற்றில் போட்டு விடலாம். பஞ்சம் தீர்ந்து திருட்டுப் பயம் ஒழிந்ததும் மீண்டும் கிணற்றிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்" என்று முன்போலவே உரக்கக் கூறினான் தெனாலிராமன். திருடர்களும் இதைக் கேட்டனர்.

அதே சமயம் ரகசியமாக தெனாலிராமன் தன் மனைவியிடம் திருடர்கள் ஒளிந்திருப்பதைக் கூறி ஒரு பழைய பெட்டியில் கல், மண், பழைய பொருட்களை எல்லாம் போட்டு மூடினான். அந்தப் பெட்டியைத் தூ க்க முடியாமல் தூக்கி வந்து கிணற்றுக்குள் "தொப்"பென்று போட்டு விட்டு வீட்டுக்கு திரும்பிவிட்டான் தெனாலிராமன்.

திருடர்களும், "தெனாலிராமன், வீட்டிற்குள் புகுந்து திருடும் நம் வேலையை சுலபமாக்கிவிட்டான். நாம் எளிதாக கிணற்றிலிருந்து பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்" என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

பெட்டியை எடுக்க கிணற்றுக்கு அருகே வந்தனர் திருடர்கள். கிணறு ஆழமாக இருந்ததால் உள்ளே இறங்கப் பயந்த திருடன் ஒருவன், "அண்ணே! தண்ணீர் குறைவாகத்தான் உள்ளது. நாம் நால்வரும் ஏற்றம் மூலம் மாற்றி மாற்றி நீரை இறைத்து விட்டால் சுலபமாகப் பெட்டியை எடுத்துக் கொண்டு போகலாம்" என்று கூறினான். அதைக்கேட்ட மற்றவர்களும் அவன் திட்டத்துக்கு ஒப்புக்கொண்டனர். அதன்படி ஒருவர் மாற்றி ஒருவர் ஏற்றம் மூலம் நீர் இறைக்கத் தொடங்கினர்.

சற்று நேரம் கழித்து வேறு வழியாக தோட்டத்திற்கு சென்ற தெனாலிராமன், திருடர்கள் இறைத்து ஊற்றிய நீரை தன் தோட்டத்தில் உள்ள செடிகளுக்கும், கொடிகளுக்கும், பயிர்களுக்கும் பாயுமாறு கால்வாயைத் திருப்பி விட்டான். இப்படியே பொழுது விடிந்தது விட்டது. ஆனால் கிணற்றில் தண்ணீர் குறையவில்லை. இதனால் திருடர்களும், "நாளை இரவு மீண்டும் வந்து நீரை இறைத்து விட்டு பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்" என்று பேசிக் கொண்டு சென்றனர்.

அப்போது தோட்டத்திலிருந்து வந்த தெனாலிராமன் அவர்களைப் பார்த்து, "நாளைக்கு வரவேண்டாம். நீங்கள் இறைத்த தண்ணீர் இன்னும் மூன்று தினங்களுக்குப் போதும். எனவே மூன்று தினங்கள் கழித்து வந்தால் போதும். உங்கள் உதவிக்கு நன்றி நண்பர்களே!" என்று கூறினான்.

திருடர்களுக்கு இதைக் கேட்டதும் மிகவும் அவமானமாய் போய்விட்டது. தங்களை ஏமாற்றி நீர் இறைக்கச் செய்த தெனாலிராமனின் அறிவை மனத்திற்குள் எண்ணி வியந்தனர். மேலும் அங்கே இருந்தால் எங்கே மாட்டிக் கொள்வோமோ என்ற அச்சத்தில் திரும்பிப் பார்க்காமல் ஓட்டம் பிடித்தனர் திருடர்கள்!...

# பணிவே உயர்வு தரும்!...

ஒரு ஆசிரியர் இருந்தார். அவரிடத்தில்பல மாணவர்கள் படித்து வந்தனர்.ஒவ்வொரு நல்ல அறிவாளிகளாக இருந்தனர் .அதில் ஒரு மாணவன் எல்லோரையும்விட மிருந்த புத்திசாலியாக விளங்கினான். ஓயாத ஆர்வத்தோடு ஒவ்வொரு நாளிலும் புதிய புதிய காரியங்களைக் கற்றுக்கொண்டான்.இதனால் அங்கிருந்த அனைத்து மாணவர்களிலும் அவனேசிறந்தவனாகத் திகழ்ந்தான் .

ஆசிரியரும் அவனிடம் தனிப்பட்டஅன்பும் , கவனமும் செலுத்தினார். சிறிது காலம் சென்றது. அவனிடம்பல மாறுதல்கள் தெரிய ஆரம்பித்தன. அவன் எல்லோரையும் ஏளனமாகநோக்க ஆரம்பித்தான். தன்னைவிட மூத்த மாணவர்களைக் கூடமதிப்பதில்லை . பலருக்கு மத்தியில்மூத்த மாணவர்களிடம் கடினமாகக்கேள்வி கேட்டு, அவர்கள் விடைதெரியாமல் விழிப்பதைப் பார்த்து கைகொட்டிச் சிரித்து, அவர்கள்அவமானத்தில் அழும்வரை கேலிசெய்யத் தொடங்கினான்.

ஆசிரியரின் காதுகளுக்கு இந்த விஷயம் எட்டிவிட்டது. இந்த அகம்பாவம் அவனை அழித்து விடும் என்பதை உணர்ந்தார். ஒரு நல்ல மாணவன் நாசமாவதை அவர் விரும்பவில்லை.அவனது பிழையை அவனுக்குஉணர்த்த விரும்பினார். நேரடியாக அறிவுரை சொன்னால் அவன் கண்ணை மறைக்கும் அகம்பாவத்தில் அவரையேகூட எதிர்த்துப் பேசக் கூடும். வேறொரு வழியை யோசித்தார்.

மறுநாள் அவனை அழைத்தார். "மகனே! இன்று அதிகாலையில், பக்கத்து கிராமத்தில் உள்ள என் நண்பர் ஒருவர் இறந்து விட்டார். அவர் தர்க்க சாஸ்திரத்தை கரைத்துக் குடித்தவர். இரு நூறுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியவர். பத்து முறை அரசாங்கத்தால் சிறந்த அறிஞருக்கான விருதினைப் பெற்றவர் . பல அயல் நாடுகளிலும் கூட இவரது மாணவர்கள் உண்டு. நீ போய் பக்கத்துத் தெருவிலுள்ள தச்சு ஆசாரியிடம் விவரத்தைச் சொல்லி ஒரு தரமான சவப்பெட்டியை செய்து வைக்கச் சொல். இன்று மதியம் அவரது அடக்கத்திற்குத் தேவைப்படுகிறது. இதை உன்னால் மட்டுமே சிறப்பாகச் செய்ய முடியும் "என்றார்.

கடைசியாக அவர் அவனை உயர்த்திச் சொன்ன வார்த்தைகள் அவனை மிகவும் உற்சாகப்படுத்திவிட்டன.""இதோ உடனே

செய்து முடிக்கிறேன்ஜயா" என்று சொல்லிவிட்டு ஆசாரிவீட்டுக்கு விரைந்தான். ஆசாரி அவனை வரவேற்று அவன் வந்த விஷயத்தைக் கேட்டார். அவனும் மதியத்திற்குள் ஒரு தரமான சவப்பெட்டி வேண்டுமென்ற விஷயத்தை சொன்னான்.

ஆசாரி இறந்து போனவரைக் குறித்தவிபரங்களைக் கேட்டார்.அவனும் ஆசிரியர் சொன்னபடியே,"அவர் தர்க்க சாஸ்"திரத்தை கரைத்துக்குடித்தவர். இரு நூறுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியவர். பத்து முறை அரசாங்கத்தால் சிறந்த அறிஞருக்கான விருதினைப் பெற்றவர். பல அயல்நாடுகளிலும் கூட இவரது மாணவர்கள்உண்டு."

அவன் சொல்லி முடிப்பதற்குள் ஆசாரி சூடாகி விட்டார். "ஏன்டா ! இன்னிக்கு நீ பொழுது போக்க நான்தான் கிடைச்சேனா? செத்த பிணத்தோட விவரம் சொல்லாம வேறென்னமோ உளறுகிறியே! நீ படிச்சவன்தானா?" என்றார்.இந்தக் கேள்வி அவனை ஆத்திரமூட்டியது. "அவரைப் பற்றி இவ்வளவுசொல்லியும் புரியல்லை என்று சொன்னா நீங்கதான் ஒரு அடி முட்டாள் " என்றான்.

ஆசாரி "அடேய் அறிவு கெட்டவனே! என்னதான் படிச்சிருந்தாலும்,விருதெல்லாம் வாங்கி இருந்தாலும் எனக்கு அது பிணந்தான். எனக்கு வேண்டியது அதோட உயர, அகலந்தான். நீங்க படிக்கிற படிப்பெல்லாம் உடம்புல உயிர் இருக்கிற வரைக்கும் தான். உனக்குப்பெட்டி வேணும்னா மரியாதையாபோய் அளவெடுத்திட்டு வா" என்றார்.எங்கோ பளீரென்று அடி விழுந்ததுஅவனுக்கு.

"மனித அறிவு இவ்வளவுதானா? இதுக்காகவா இத்தனை பேரை அவமானப்படுத்தினேன்? "அவமானம் பொங்கியது. கூனிக் குறுகியபடியே ஆசியரின் முன்னால் போய் நின்றான். ஆசிரியர் சிரித்துக் கொண்டே கேட்டார், " என்னப்பா! சவப்பெட்டி அடிச்சாச்சா?"அவன் பதில் சொன்னான். "அடிச்சாச்சு. என்னோட தலை கனத்துக்கு."ஆசிரியர் சொன்னார், "செல்லமே! என்னதான் படித்தாலும் இது அழியப் போகிற சரீரந்தான். இதை உணர்ந்து பணிவுடன் நடப்பதே உண்மையான ஞானம்...!

எனவே நமக்கு எவ்வளவு பணம் இருந்தாலும் படிப்பு இருந்தாலும் வசதி வாய்ப்புகள் இருந்தாலும் நாம் பணிவுடன் நடந்துகொள்வோமானால் வாழ்க்கையில் நல்லவையே நடக்கும் என்பதை மனதில் கொள்வோம்!..

# நல்நெறி பற்றி......

-வி நந்தகுமார்-

கோபம் கஷ்டங்களை கூட்டுகிறது
கோபம் இனிமையான இன்ப வாழ்வை இழக்கிறது.
கோபம் ஆரம்பம் துன்பத்தின் தொடக்கம்.
கோபம் குடும்பத்தில் குழப்பத்தைக் கூட்டுகிறது.
கோபம் அடிக்கடி அழிவுகளை ஏற்படுத்துகிறது.
கோபம் வரும் வார்த்தைகள் கோலம் குறி மாறும்.
கோபம் குற்றங்களை பெருக்கி, தீமைகளை தொடுக்கிறது.
கோபம் கொடூரம் அறிந்தவர்கள் திருந்துகிறார்கள்.
கோபம் கொடுமை அறியாதவர்கள் அழிகிறார்கள்.
கோபம் தொன்று தொட்டு இருந்து வரும் தீராத பிரச்சனை.
கோபம் நரகத்தின் நடுப் பாதையை திறந்து விடுகிறது.
கோபம் எழுந்திருப்பவன் நட்டத்தோடு தூங்குகிறான்.
கோபம் வெற்றியை விலக்கி தோல்வியைத் தழுவ வைக்கிறது.
கோபம் இருந்து ஒருபோதும் ஞானம் வெளிப்படுவதில்லை.
கோபம் குறைத்தால் நிதானத்தின் நிறைவை எட்ட முடியும்.
கோபம் தீயில் நட்பு நெருங்காது, ஒதுங்கி நிற்கும்.
கோபம் காலத்தில் அறிவும், ஆற்றலும், துளிர்விடத் தயங்குகிறது.
கோபம் தவறு என்று தெரிந்த பின்பும், தப்புச்செய்யத் தூண்டுகிறது.
கோபம் கொடுமையைக் கொண்டு வந்து இரத்தத்தைக் கெடுக்கிறது.
கோபம் அற்புதமான ஆனந்தம், அமைதி, அழிக்கப்படுகிறது.
கோபம் உணர்ச்சி அதிகமாகும்போது, கேட்டுக்குள் தள்ளப்படுகிறாய்.
கோபம் முக்கியத்துவம் கொடுப்பதால், முழுநாளும் இருட்டாகிறது.
கோபம் அழிந்து போன அரசர்களும், அரசுகளும் அதிகம்.
கோபம் ஆராய்ச்சி செய்யலாம், ஆனால் ஆட்சி செய்ய ஏலாது.
கோபம் விதி சிக்கிக் கொள்ளும்போது வீழ்ச்சி அடைகிறோம்.
கோபம் இதயத்தின் அமைதியை அழித்து நின்மதியை துரத்துகிறது.
கோபம் உணர்ச்சியில் உதவாதவற்றை உரம் போட்டு வளர்க்கிறோம்.
கோபம் அலையில் மனம் மாசுபட்டு உடல் ஊனமடைகிறது.
கோபம் உனது வீரத்தை விலக்கி வீணர்கள் காலடியில் விழவைக்கிறது.
கோபம் நிமிர்ந்துநின்று அடிவாங்கும், ஞானம் பணிந்து வெற்றி கொள்ளும்.
கோபம் அடக்காத பாவங்கள், அவர்களை சுற்றி வந்து தீர்வு செய்யும்.
கோபம் நமக்குத்தெரியாமல் நம்முள்இருப்பது, நம்மை நசுக்குவதற்காகவே.
கோபம் பாவம் செய்தபின், தெய்வத்திடம்பணிந்து பலன்ஏதும்வந்து விடாது.

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 31

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | 3 | | | | |
| | | | | 7 | 4 | | 5 | |
| | | | | | | | | |
| | | 4 | | | 6 | | | 8 |
| 2 | | | | 8 | | | | 9 |
| | 6 | | 1 | | 2 | 4 | | |
| | | 5 | 7 | | | 9 | | 3 |
| 9 | 8 | | | | | | | 5 |
| | | 1 | | 6 | 5 | | | 4 |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 125
## (ஆடி -ஆவணி 2022)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ-வ

01-03 மாணவர்கள் இதை முழுமையாகப் பெறவேண்டும்.

09-12 இன்றைய கல்வியில் இது பெற்றால்தான் முன்னேற்றம் உண்டு.

வ-இ

08-05 என்ன வேலையைச் செய்தாலும் இது போட்டுச் செய்தால் அதிகபலன்

16-14 நேரில் காணும் தெய்வம்.

கீ-மே

08-04 அரங்கில் காணப்படுவது.

13-05 இது படுபவனுக்குப் புத்தி மத்திமம் என்று கூறுவார்கள்.

மே-கீ

03-15 வட்டத்தின் அரைப்பங்கு இப்படி அழைப்பர்.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

## ஒரே எழுத்து விடுகதைகள்...

1-வரவேற்கும் ஒரே எழுத்து
2-பறக்கும் ”
3-சோலையாகும் ”
4-பசு வாகும் ”
5-மணமுள்ள ”
6-பாட்டாகும் ”
7-குயிலின் குரலாகும் ”
8-தூய்மை குறிக்கும் ”
9-முக்கனிகளில் ஒன்றாகும் ”
10-சுவைக்கும், பேசும் ”

11-முன்னிலை குறிக்கும் ஒரே எழுத்து
12-தரச்சொல்லும் ”
13-வினை பல புரியும் ”
14-எதனையும் சாம்பலாக்கும் ”
15-கண்ணுக்கு அழகுதரும் ”
16-வாங்கியதைப் போட்டுக்கொள்ள ”
17-தமிழ் மாதத்தைக் குறிக்கும் ”
18-அரசனைக் குறிக்கும் ”
19-சிவப்பு நிறத்தைக் குறிக்கும் ”
20-பெரிய பொருள்தரும் ”

விடைகள்:-

**1-வா 2-ஈ 3-கா 4-ஆ 5-பூ 6-பா 7-கூ 8-தூ 9-மா 10-நா**
**11-நீ 12-தா 13-கை 14-தீ 15-மை 16-பை 17-தை 18-கோ 19-சே 20-மா**

### சேர்த்தெழுதுதல்

1-தென்னை + ஓலை -தென்னோலை
2-குரல் + ஓசை - குரலோசை
3-மா + இலை - மாவிலை
4-ஆல் + இலை - ஆலிலை
5-கடல் + ஓரம் - கடலோரம்
6-பலா + இலை - பலாவிலை
7-பனை + ஓலை - பனையோலை
8-பட்டு + ஆடை - பட்டாடை
9-கடல் + அலை - கடலலை
10-மீன் + இனம் - மீனினம்

### பிரித்தெழுதுதல்

1-மண்ணரிப்பு - மண் + அரிப்பு
2-வானொலி - வான் + ஒலி
3-தேனமுது - தேன; + அமுது
4-மாலையோரம் - மாலை + ஓரம்
5-புற்றீசல் - புற்று + ஈசல்
6-குயிலோசை - குயில் + ஓசை
7-சாக்கோட்டம் - சாக்கு + ஓட்டம்
8-விளக்கேற்றி - விளக்கு + ஏற்றி
9-உள்ளமுருகி -உள்ளம் + உருகி
10-வீட்டுக்கூரை - வீடு + கூரை

## மரபுப் பெயர்கள்..

1-ஆடு மேய்ப்பவன் - இடையன்
2-வாகனம் செலுத்துபவன் - சாரதி, ஓட்டுநர்
3-தேர் செலுத்துபவன் - பாகன்
4-விமானம் செலுத்துபவன் - வலவன், விமானி
5-கட்டடவேலை செய்பவன் - கொத்தன்
6-கப்பல் ஓட்டுபவன் - மாலுமி, பீகாமன்
7-யானையைப் பராமரிப்பவன் - பாகன்

## மரபுத்தொடர்களின் அர்த்தம்..

1-ஆழம்பார்த்தல் - ஒருவரின் தகுதி பற்றி ஆராய்தல்
2-ஆயிரங்காலத்துப் பயிர் - நெடுங்காலம் நிலைத்திருத்தல்
3-ஆட்கொள்ளல் - அடிமை கொள்ளல்
4-ஆகாயக்கோட்டை - மிதமிஞ்சிய கர்ப்பனை
5-இலைமறை காய் - வெளிப்படாது மறைந்திருத்தல்
6-இட்டுக் கட்டுதல் - இல்லாததைச் சொல்லுதல்
7-இலவுகாத்த கிளி - காத்திருந்து ஏமாறுதல்
8-இரண்டு தோணியில் கால்வைத்தல் - ஒரே நேரங்களில் இருசெயல்களில் ஈடுபடுதல்
9-ஈடேறுதல் - உயர்வடைதல்
10-உள்ளங்கை நெல்லிக்கனி - வெளிப்படையாகத் தெரிதல் தெரிதல்

## எதிர்க்கருத்துச் சொற்கள்

1-அடி - முடி
2-அச்சம் - துணிவு
3-அனுகூலம் - பிரதிகூலம்
4-அமிலம் - காரம்
5-அகம் - புறம்
6-அகங்கை - புறங்கை
7-அடைப்பு - திறப்பு
8-அசல் - நகல்
9-அண்மை - சேய்மை
10-அணு - மலை

## எதிர்பாற்சொற்கள்

1-கணவன் - மனைவி
2-கள்ளன் - கள்ளி
3-கிழவன் - கிழவி
4-குமரன் - குமரி
5-குரு - குருபத்தினி
6-குறவன் - குறத்தி
7-சங்கரன் - சங்கரி
8-சிற்றப்பன் - சின்னம்மை
9-சீமான் - சீமாட்டி
10-சுந்தரன் - சுந்தரி

## பழமொழிகளும் விளக்கங்களும்...

**1-ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்...**

ஊரான் வீட்டுப்பிள்ளையாகிய உன் கர்பிணி மனைவியைப் பாசத்துடன் ஊட்டி வளர்த்தால் அவள் வயிற்றில் இருக்கும் உன் குழந்தையும் ஆரோக்கியமாக தானே வளரும் என்பதே உண்மையான பொருள்..

**2-கழுதைக்குத் தெரியுமா கற்பூரவாசனை...**

கழு என்பது ஒருவகை கோரைப்புல். அதில் பாய் தைத்து படுத்துப் பார்த்தால் கற்பூரவாசனை தெரியும் என்பதே சரியான விளக்கம்.

**3-ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன் ஆவான்...**

ஆயிரம் வேரை கொண்டவன் அரை வைத்தியன் ஆவான். நோயைப் போக்க ஆயிரம் வேரைக்கொண்டு மருந்து கொடுப்பவன் அரை வைத்தியன் ஆவான்.

**4-களவும் கற்று மற...**

களவும் கத்து மற..களவு - திருடுதல், கத்து - பொய் சொல்லுதல் தீய பழக்கமான திருடுதல், பொய்சொல்லுதல் இவற்றை ஒருவர் தன் வாழ்நாளில் மறந்து ஒழுக்கமாக இருக்க வேண்டும்.

**5-சேலை கட்டிய பெண்ணை நம்பாதே...**

சேல் என்பது கண்ணைக் குறிக்கும். கணவன் உடனிருக்கும்போது (சேல்) கண்ணை அடிக்கடி வேறொருவனை பார்க்கும் பெண்ணை நம்பக்கூடாது.

## பழமொழிகளில் உணவு...

1-சீரகம் இல்லாத உணவு சிறக்காது
2-தன்காயம் காக்க வெங்காயம்
3-வாழை வாழ வைக்கும்
4-அவசரச் சோறு ஆபத்து
5-இரைப்பை புண்ணுக்கு எலுமிச்சை
6-இரத்தக் கொதிப்புக்கு அகதிக்கீரை
7-இருமலைப்போக்கும் வெந்தயக்கீரை
8-உண்ணாநோன்பு ஆயுளைக் கூட்டும்
9-உஷ்ணம் தவிர்க்க கப்பங்களி
10-கல்லீரல் பலம்பெற கொய்யாப்பழம்
11-சித்தம் தெளிய வில்வம்
12-சிறுநீர் கடுப்புக்கு அன்னாசி
13-சூட்டைத்தணிக்க கருணைக்கிழங்கு
14-ஜீரணசக்திக்கு சுண்டைக்காய்
15-கொழுப்பைக் குறைக்க பன்னீர் -திராட்சை

## விடுகதைகள்...

1-ஒரு தட்டில் பன்னிரண்டு இட்லிக் கரண்டிகள் அது என்ன?..
2- பார்ப்பதற்கு 5 கால் எண்ணுறதுக்கு 4 கால் அது என்ன?..
3-இரண்டு வீட்டுக்கும் ஒரே முற்றம் அது என்ன?..
4-கறுப்புச் சட்டைக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன் அது என்ன?..
5-பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள் அது என்ன?..
6-உரச..உரச குழைவான் பூசப்பூச மணப்பான் அவன் யார்?..
7-கிண்ணம்போல பூப்பூக்கும் பானை போல காய்காய்க்கும் அது என்ன?..
8-விடிய விடிய வேலை செய்பவனுக்கு ஒரு கை சின்னதாம் அது என்ன?..
9-முள்ளுக்குள்ளே முத்துக் குவலயம் அது என்ன?..
10-முக்கண்ணன் சந்தைக்குப் போகிறான் அவன் யார்?..

**1-கடிகாரம் 2-யானை 3-மூக்கு 4-பூட்டு 5-வெண்டிக்காய்**
**6-சந்தனம் 7-பூசனிக்காய் 8-கடிகாரம் 9- பலாப்பழம் 10-தேங்காய்**

## சிரி...சிரி...சிரிப்பு...

1-ஆசிரியர்:- கண்ணகி மதுரையை எரித்தாள் இது என்ன காலம்?..
மாணவன்:- (Fire Service) தீயணைப்பு சேவை இல்லாத காலம்..
2-மகள்:- அப்பா கலர் ரி வி வேண்டப் போறார்..
பாட்டி:- சாயம் போகாத ரி வியை வேண்டச் சொல்லு பிள்ளை..
3-கள்ளன் 1:- வீடுதான் பெரிசாக்கிடக்குது சுருட்டுவதற்கு ஒன்றுமில்லையா?..
கள்ளன் 2:- ஏன் அத்தனை பெரியவீடு படுக்கப் பாய்கூட இல்லையா?..
4-அப்பா:- ஏனடா நல்லாயிருந்த கரண்டியைப் பாதியாக உடைத்தனி..
மகன்:- டொக்டர்தானே சொன்னவர் அரைக்கரண்டி மருந்து குடிக்கும்படி?..
5-ஒருவர்:- எங்கட தலைவர் நிறைய மீட்டிங்கில பேசியே அந்த வீட்டைக் கட்டினார்..
மற்றவர்:- மீட்டிங்கில அவ்வளவு கல்லா வந்து விழுந்தது..
6-ஜானகி:- தலையில் பேன் தொல்லை தாங்கமுடியல்லை டாக்டர்..
டாக்டர்:- இந்தாங்க தூங்கும்போது இந்த மருந்தைப் போட்டுவிடுங்க..
ஜானகி:- பேன் எப்படித் தூங்கும்?..எப்படி டாக்டர் கண்டுபிடிப்பது?..
7-குகன்:- பஸ்சில் ஏறியவுடன் தூக்கம் கண்ணைக்கட்டிக்கொண்டு வருகுது..
டாக்டர்:- வந்தால் தூங்கவேண்டியதுதானே..
குகன்:- நான் தூங்கினால் பிறகு பஸ்ஸை யார்? ஓட்டுகிறது டாக்டர்?..

## பேசாதே!..பேசாதே!..

1-ஏழைகளுக்கு முன்னால் நின்றுகொண்டு உன் செல்வம் பற்றிப் பேசாதே..
2-நோயாளிக்கு முன்னால் நின்றுகொண்டு உன் ஆரோக்கியம்பற்றிப் பேசாதே..
3-பலவீனனுக்கு முன்னால் நின்றுகொண்டு உன் வீரம் பற்றிப் பேசாதே..
4-மகிழ்ச்சியை இழந்தவனுக்கு முன்னால் நின்றுகொண்டு உன் சந்தோஷம் பற்றிப் பேசாதே..
5-சிறைக்கைதிக்கு முன்னால் நின்றுகொண்டு உன் சுதந்திரம் பற்றிப் பேசாதே..
6-குழந்தைப் பாக்கியமற்றவனுக்கு முன்னால் நின்றுகொண்டு உன் குழந்தைகளைப் பற்றிப் பேசாதே..
7-ஆதரவற்றோருக்கு முன்னால் நின்றுகொண்டு உன் தாய் தந்தை பற்றிப் பேசாதே..

## குழந்தைகள் பலவிதம்!..

1-குறை கூறி வளர்க்கப்படும் குழந்தை வெறுக்கக் கற்றுக்கொள்கின்றது.
2-குறைகளைக் காட்டாமல் வளர்க்கப்படும் குழந்தை குற்றவாளியாகின்றது.
3-அடக்கி வளர்க்கப்படும் குழந்தை சண்டையிடக் கற்றுக்கொள்கின்றது.
4-கேலி செய்யப்படும் குழந்தை வெட்கத்தோடு வளர்கின்றது.
5-அவமானப்படுத்தப்படும் குழந்தை குற்றவாளியாகின்றது.
6-ஊக்குவிக்கப்படும் குழந்தை மனவலிமை பெறுகின்றது.
7-புகழப்படும் குழந்தை பிறரை மெச்சக் கற்றுக்கொள்கின்றது.
8-சகிப்போடு வாழும் குழந்தை பொறுமையைக் கடைப்பிடிக்கின்றது.
9-நேர்மையோடு வளரும் குழந்தை நியாயத்தைக் கற்றுக்கொள்கின்றது.
10-நட்போடு வளரும் குழந்தை உலகத்தை நேசிக்கின்றது.

## ஆட்டம் போடுவார்கள்!..

புத்தகங்கள் அமைதியாக இருக்கும் படித்தவர்கள் ஆட்டம் போடுவார்கள்.
போத்தல் அமைதியாக இருக்கும் குடித்தவர்கள் ஆட்டம் போடுவார்கள்.
பணம் அமைதியாக இருக்கும் வைத்திருப்பவர்கள் ஆட்டம் போடுவார்கள்.
அறிவாளிகள் அமைதியாகஇருப்பார்கள் அறிவிலிகள்ஆட்டம்போடுவார்கள்.
பிணம் அமைதியாகக் கிடக்கும் தூக்கியவர்கள் ஆட்டம் போடுவார்கள்.

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## உறுத்தல்....

சூரியனைப் பார்த்து நிலம் கத்தியது....நீ செய்வது சரிதானா?.. சூரியன் அதிர்ச்சியுற்றான். இதுவரை என்னை யாருமே கேட்டதில்லை. "என்ன சொல்கிறாய்" இருளை நீ மறைக்கலாம்...அழகான விண்மீன்களை எப்படி நீ மறைக்கலாம்?..சூரியன் திடுக்கிட்டான். "ஒவ்வொரு ஒளியிலும் ஒவ்வொரு அழகு இருக்கின்றது..உனக்குத் தெரியுமா?..ஞாயிறு முகிலுள் ஒளிதான். நிலத்தின் குரல் அவன் காதில் ஓங்கி ஒலித்தது.

"வெளிச்சத்தை மறைக்கலாமா? வெளிச்சம்"

## கறை.....

கடை...தராசில் பொருட்களை ஏற்றும்போதெல்லாம் தட்டு ஒரு பக்கம் சாய்ந்தது. படிக்கல் இருக்கும் தட்டு மேலேயே நின்றது. உருளைக்கிழங்குகளும் வெங்காயங்களும் இதை உற்றுக் கவனித்தன. "ஓ" இது கொடுமை" என்று கத்தியது உருளைக்கிழங்கு. வெளியே தலை நீட்டிக்கொண்டிருந்தவெங்காயமும் "இது பச்சைத் திருட்டு" என்று வயிற்றெரிச்சலைக் கொட்டியது. இரண்டும் குரல் எழுப்பின..

"தராசை முதலில் எடை போடு"

## புடம்.....

காட்டிலிருந்த மூங்கில் ஒரு நாள் கத்தியால் வெட்டப்பட்டது. நெருப்புக்கம்பி தன்னைத் துளைத்தபோது "ஐயோ உடல் புண்ணாகிறதே" என்று கதறி அழுதது. "கொஞ்சம் பொறுமையாக இரு" என்று மூங்கிலைப் பார்த்து ஆறுதல் சொன்னது காற்று. மூங்கில் புல்லாங்குழல் ஆனது. மேடையில்.. உலகமே மயக்கும் இசையை அள்ளிப் பொழிந்து கொண்டிருந்த புல்லாங்குழலைப் பார்த்து மேனி சிலிர்த்தது காற்று. அது சொன்னது...

"புண் பட்டவன் பண்பட்டவன்"..

# குறளும் பொருளும்...

## ஒற்றாடல்:-

581. ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண்.

582. எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்று
வல்லறிதல் வேந்தன் றொழில்.

583. ஒற்றினா னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.

584. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையு மாராய்வ தொற்று.

585. கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று.

586. துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று.

587. மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று.

588. ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோ
ரொற்றினா லொற்றிக் கொளல்.

589. ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும்.

590. சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை.

# குறளும் பொருளும்...

## வேவு விடுத்து வினை அறிதல்..

581. ஒற்றரையும், சிறந்த நீதி நூல்களையும் அரசன் இரு கண்களாகக் கருத வேண்டும்.

582. எல்லாக் காலத்திலும், எல்லோரிடத்திலும் நிகழ்கின்ற எல்லா நிகழ்ச்சிகளையும் ஒற்றரைக்கொண்டு அறிதல் அரசரின் கடமையாகும்.

583. நாட்டில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் ஒற்றரால் அறிந்து அவற்றின் பயனை உணராத அரசன் வெற்றிபெறுவதற்கு ஏற்ற வழி வேறு இல்லை.

584. தம் தொழிலைச் செய்கின்றவர் தம் சுற்றத்தார் பகைவர் ஆகிய எல்லோரையும் ஆராய்ந்து பார்ப்பவரே ஒற்றர் ஆவார்.

585. பிறர் கண்டு ஐயப்படாத உருவுடனும் அஞ்சாமலும் மனதில் உள்ளதை எங்கும் வெளிப்படுத்தாமலும் இருக்கும் வல்லமை உடையவனே ஒற்றனாவான்

586. துறவு வடிவு தாங்கி அரிய இடங்களில் சென்று ஐயப்பட்டவர் சோதனைக்குச் சோர்ந்து விடாது தம்மை வெளிப்படுத்தாமல் வேவு பார்ப்பவரே ஒற்றர் ஆவார்.

587. ஒற்றப்பட்டார் மறைத்த செய்தியை அவருக்கு உள்ளானவர் மூலமாகக் கேட்க வல்லவனாயும், கேட்டறிந்த செயல்களில் ஐயப்பாடு இல்லாமல் அறியும் வல்லமையுள்ளவனாய் உள்ளவனே ஒற்றன் ஆவான்.

588. ஓர் ஒற்றர் அறிந்து வந்த செய்திகளை மற்றோர் ஒற்றரிடம் கேட்டறிந்து ஒப்புமை கண்டுகொள்ள வேண்டும்.

589. வேவு பார்க்க ஒருவரை மற்றவர் அறியாதபடி விவேண்டும்.. ஒரு நிகழ்ச்சியின் மேல் வேறுவேறான மூன்று ஒற்றர்கள் சொல்வதன் பயன் ஒன்றே ஆனால் அது உண்மை என்று உணரவேண்டும்.

590. ஒற்றருக்குச் செய்யும் சிறப்பைப் பிறர் அறியாமல் செய்ய வேண்டும். பிறர் அறியும்படி செய்தால் மறை பொருளைத்தானே வெளிப்படுதியாகும்.


## சிறீலங்காவைப் பற்றியன!..

1-சுதந்திரமடைந்த ஆண்டு - 1948 மாசி 4ம் திகதி.
2-தேசியக்கொடி - வாளேந்திய சிங்கம்
3-தேசிய கீதம் - சிறீ லங்கா தாயே
4-தேசிய கீதத்தை இயற்றியவர் - ஆனந்த சமரக்கோன்
5-தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் மு.நல்லதம்பி.
6-தேசிய கீதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் தி.கன்னங்கரா
7-தேசியப் பறவை காட்டுக்கோழி
8-தேசிய மரம் நாகமரம்
9-தேசிய விளையாட்டு கரப்பந்தாட்டம்
10-தேசியப் பூ நீலோற்பலம்

## 1- கணக்குப்புதிர்..

| | | | | |
|---|---|---|---|---|
| | 18 | | | 15 |
| 17 | | 25 | 14 | |
| | 24 | | 7 | |
| | 12 | | | 4 |
| 11 | | 19 | | 22 |

## 2-படங்களைக் கண்டு பிடியுங்கள் (Sudoku)



1-வெற்றிடமாகவுள்ள பெட்டிகளில் 1 - 25 வரையிலான எண்களை எழுதலாம். ஆனால் ஒருமுறை எழுதிய எண் திரும்ப வரக்கூடாது. எந்தப் பக்கத்தால் கூட்டினாலும் மொத்தம் 65 வரவேண்டும்.

2-வெற்றிடமாகவுள்ள சதுரங்களில் வரவேண்டிய படங்களைக் கண்டுபிடித்தல் வேண்டும்.
(முயற்சி செய்து பாருங்கள்...முடியாவிடின் பக்கங்களைப் புரட்டினால் விடை கிடைக்கும்)

# குறுக்கெழுத்துப்போட்டி-188
(ஆடி-ஆவணி - 2022)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-05 இலங்கை மக்களின் வாழ்வு தினம்..தினம் இதுவாகிவிட்டது.
09-11 இப்படியான குணம் கொண்டவர்களுக்குப் புத்தி மத்திமம் என்பார்கள்.
18-20 நம்நாட்டில் நீர் இறைக்கப் பயன்படுவது.
37-39 பல்வேறு நெருக்கடியால் இலங்கை நாட்டின் இது சீரழிந்துவிட்டது.
வ-இ
07-05 இசைக்கருவி ஒன்று.
14-11 நாம் என்ன செய்தாலும் இதுபோட்டுச் செய்தால் அதிக பலன்.
26-23 வன்னி நிலப்பரப்பில் பெரி ஒரு நகரம்.
32-30 இது இருப்பதால்தான் பூமியின் உயிரினங்கள் நீண்டு நிலைக்கின்றன.
49-45 இலங்கையில் இதன் தட்டுப்பாட்டால் அனைத்துத் துறைகளும் செயலிழந்துள்ளன.
கீ.மே
26-05 வடிவங்களில் ஒன்று.
37-16 இராகங்களில் ஒன்று.
41-20 தூக்கத்தில் சிலரின் இந்தத் தொல்லை தாங்கமுடியாது.
44-30 பொழுது ஒன்று.
மே-கீ
01-43 இலங்கையின் வறுமையால் இத்துறையும் சீரழிந்துள்ளது.
07-42 தென்னிலங்கையில் ஓர் சைவ வழிபாட்டுத்தலம்.
17-24 மாதங்களில் ஒன்று.
26-40 சிலர் இது வேண்டியும் பிழைப்பு நடாத்துவார்கள்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

## பரதேசி!..

பழத்தை தேடி பறவைகள்
மரம் விட்டு மரம் பறக்குது
இரையை தேடி விலங்குகள்
யாவும் பாய்ந்து திரியுது
இன்று சோற்றை தேடி மனிதனும்
அலைந்து அலைந்து பரதேசியாகி
விட்டான்பணம் இருந்தாலும் புசிக்க
உணவு இல்லாட்டி
பணத்தை சாப்பிட முடியாது...

தங்கம் விலை ஏறிட்டு என
தலையில் கை வைப்போர் ஒரு
புறம் எண்ணெய் இல்லாமல்
பொரியல் இல்லாமல்
புலம்புவோர் மறு புறம்
காலிருந்தும் நடக்க மறந்த
பலருக்கு இன்று
பெற்றோல் இல்லாமல் அந்தரம்...

கொரோனா படுத்துது ஒரு புறம்
பஞ்சம் பசி பட்டினி வருகுது
மறுபுறம்இரண்டு பேருசண்டையிலே
பார்த்தவர் மண்டை உடைவது
போலே இரண்டு நாடுகள்
போடுற யுத்தத்திலே
உலகமெங்கும் கூச்சலும்கூப்பாடும்
உலகம் போற போக்கை பாரு
எங்கு பார்த்தாலும் அவலம்
அவனிக்கு ஏன் வந்தது
இந்தக் கோலம்
ஏன் வந்தது இந்த கோலம்?

**கவி மீனா**

## குன்றில் விளக்காய்....

(ஆடி அமாவாசை நினைவுக் கவி)

தந்தையென்னும் பெரும் கொடையே
உறவின் உயிர்ப்பில் முதல்நிலையே
முதன்மை சுமையின் முதலாளி
முழுமை தாங்கும் தொழிலாளி
அறிவின் தீபம் ஆலயமாய்
அன்பின் காக்கும் தந்தையரே

உருகும் திரியாய் விளக்கேற்றி
உறவைக் காக்கும் வழிகாட்டி
செம்மை வாழ்வை சீராக்கி
சேய்கள் நிமிர்வின் சுமைதாங்கி

அல்லும் பகலும் அறிவூட்டி
ஒளிரும் வாழ்வின் காற்றாடி
எங்கும் நிறையுது பேரன்பு
எதிலும் தந்தை முதலெழுத்து

கண்ணாய் காப்பார் கருத்தோடு
கண்ணியம் காப்பார் வாழ்வோடு
உண்மை அன்பின் உறவாளி
மேன்மை போற்றும் பண்பாளி

அப்பா என்னும் அன்போடு
என்றும் மெய்ப்பட
வாழ்வோம் பண்போடு
குன்றில் விளக்கே நீங்களப்பா
கூடியே வாழ்ந்த வள்ளலப்பா.
ஆடி அமாவாசையில் நாம்
கூடியே நினைவு கொள்வோம்!..

**வசந்தா ஜெகதீசன்**



## கண்ணீர் அஞ்சலி !

## கவிஞர் கோசல்யா சொர்ணலிங்கம் பேர்மனி...

இரா. சம்பந்தன்

பௌர்ணமியாய் மேடைகளை
அலங்கரித்த பாவையே !
பைந்தமிழ் நூல்கள்
பல நெய்த பூவையே !

எத்தனை மேடைகளைக் கண்டோம்
அத்தனை மேடைகளிலும் - உன்
ஆளுமையின் நிமிர்வு !

வானலையில் - உன்
வளமார்ந்த பாக்கள் மிதந்து
திசையெங்கும் தித்திப்பை வார்க்கும்
.
அரும்பணி ஆசிரியப்பணி
அப்பணியில் கோலோச்சி
பெரும்பணி யாற்றிய பெண்ணே !
பெண் விடுதலைக்காய்ப்
போராடிய கண்ணே !

உன்னைச் சிலர்
வசைபாடுவ துண்டு
அந்த வசைகளை
இசைகளாய் மாற்றியவள் நீ !

கவிஞருக்கு இயற்கையாய்
தோன்றுமொரு மிடுக்கு - அதை
உன்னிடத்தில் யான் கண்டேன் !

கவியரங்க மேடைகளில் - நாம்
கைகுலுக்கிய பொழுதுகளை
நினைவி லிருத்திப் பார்க்கிறேன்
அற்புதப் பொழுதுகள்
மீளாமல் போனதென்ன !

இறுதியாய் நாமிணைந்த
மேடையிலே
உறுதியாய் முன்மொழிந்தாய்
என் தலைமையில் கவிபாட
உன் விருப்பம் தெரிவித்தாய் !
அவ்வாசை நிறைவேறா ஆசையா?

கவிஞர்கள் மறைவதில்லை !
புவியது சுற்றும்வரை
பூந்தென்றல் ஓயும்வரை
கவிஞர்களும் வாழ்ந்திருப்பர் .

இறைவனின் திருவடிகளில்
இளைப்பாறு தாயே ! - உன்
கணவனைப் பிரிந்த
கவலைகள் தீரட்டும் .

# இலங்கைத்தீவு!...

-ப பசுபதிராசா-

இலங்கை ஒரு பௌத்த ஜனநாயக சோஷலிசக் குடியரசு???
கேந்திர அமைவால் உலக தனித்துவம் கொண்ட தனியரசு
நாலா பக்கமும் அலைவந்து அள்ளித்தாலாட்டும் கடற்பரப்பு
மீளாத்துயரில் வாங்கிய கடன் வாட்டுது எங்கும் ஆர்ப்பரிப்பு!..

கோதுமைக்கும் வழியற்று வறுமைக்கோட்டுக்குள் கீழே நாடு
தேவையற்ற பாதுகாப்புக்கு அள்ளி இறைத்த பணக்கேடு
சண்டித்தனம் மட்டும் தலைமையை சரியாய் இனங்காட்டாது
உண்மையான உழைப்பே உயர்வைக் காட்டும் வழிக்காட்டு!..

கூலிகேட்ட தொடர் போராட்டங்களால் வருமான தேயிலை காலி
சர்வதேச விலைநிர்ணயத்தால் உள்ளூர் ஆடைகள் மோசடி விலை
கொரோனாவால் உல்லாசப் பிரயாணிகளுக்கு இறுக்கமான வேலி
குடும்ப ஆட்சிகளால் ஏழரையாய் பிடித்தது எம்மைக் கலி!..

கடன்களைக் கை நீட்டி வாங்கிக் கட்டியது மட்டும் வட்டி
மிஞ்சியதெல்லாம் ஆடம்பரச் செலவாய் ஆட்டம்போட்டது குட்டி
தட்டிக்கேட்க யாருமற்ற சுயநலங்களின் போட்டா போட்டி
ஏழைகளின் காய்ந்த வயிறுகள் எல்லாம் நடுவீதியில் எரியுது தீப்பற்றி!..

இனவாதமும் மதவாதமும் இலங்கையின் இரண்டு கண்கள்
பொருளாதாரம் எடுப்பார் கைப்பிள்ளையாய் நலிந்த தூண்கள்
விலைவாசியும் பதுக்கலும் நாளாந்தம் எகிறித்தொடும் விண்
பேய்கள் அரசாண்டால் பிணந்தின்னும் கொடிய சாஸ்த்திரம் காண்!..

கடன் வாங்குவது போல் ஒரு கேவலச் செயல் இல்லை
நெஞ்சை இலகுவாகத் தாக்கும் பலவீனமதன் இறுதி எல்லை
விரலுக்கு ஏற்ப வீக்கம் அறிவுடையோர்களிடம் வராது தொல்லை
கடனை சுமப்பது எதிர்காலப் பரம்பரை இது நல்லது இல்லை!...

## உடன்பிறப்பா!...

அப்பன் முருகன் பேரைச் சொல்லி
ஆளை ஏய்க்கிறாங்க !
அம்மை சக்தி அவளின் பேரால்
வயிற்றை வளர்க்குறாங்க !
சுப்பனுக்கோ இதுவும் தெரியும்
சும்மா இருக்கான் உள்ளே !
சோதனைக்குள் இறங்கி விட்டால்
உடைஞ்சுபோகும் பல்லே !

காவி வேட்டிக் கட்டிக்கொண்டு
கதைப்ப தெல்லாம் பொய்யே
கையில் சாட்டை வைத்து மிரட்டிக்
கத்தித் தொலைப்பார் மெய்யை
ஆவி முழுதும் பிரியும் வரையில்
அடித்துத் துவைப்போம் நாயை
ஆன்மீகத்தை அசிங்கப்படுத்தும்
அற்பரெல்லாம் பேயே !

சிவனும் இவனும் உடன்பிறப்பா
சிரிச்சுச் சிரிச்சுப் பேச ?
சிவப்புச் சேலை கட்டிக்கொண்டால்
காளி வருமா கூட ?
எவனோ சொல்லும் எதையோ கேட்டே
இழக்கலாமா காசை !
ஏச்சுப் பிழைப்போர் எவராய் இருந்தும்
இறுக்கிப் பிடிப்போம் மூச்சை !

**பாவலர் கோவதன்.**

## பனி!...

ஏழைகளின் கண்ணீரை
நெஞ்ச துயரத்தைப்
பிரபஞ்சம் ரசிப்பதில்லை
இருள்
அவர்களின் பழுதுபட்ட
பார்வைக்குப்
பால் வார்க்கும்..!
காலைப் பனியில்
கன்னம் துடைக்கும்
வண்ண மலர்கள்..
காலைப் பனியைச்
சப்பி சுவைக்கும்
சிட்டுக்குருவிகள்..!
ஏழைகளின் காலடி ஓசையைத்
தாய் உலகம் கவனமாகப்
பதிவு செய்யும்..
அவர் கால்கள் இடறாமல்
கண்காணிக்கும்...!
ஏழையர் தூக்கத்திற்குப்
பனிமூட்டம்
மெல்லிய வெள்ளாடை போர்த்தும்
அவர் துக்கத்திற்கு
ஆறுதல் வார்த்தை கூறும்..!
பருவக் காலங்களை எதிர்பார்த்து
அதிகாலை பனி
படர்வதில்லை..
மனிதத் துயரின்
மார்க்கம் அறியாதவர்
தன் சாபத்தை
நரகத்தில் புதைக்கின்றார்..!

**சத்யா பிரான்சிஸ்**

# ஆடியமாவாசை தேடித் தீர்க்கிறது கூட்டியே பாசத்தை...

- மேரி திரேஸ் - லண்டன் -

மாதா பிதா எனும் வரிசையே
மனிதருள் மாணிக்கமாய்
மண்ணுலகில் வாழ
மனித அறிவுக்கண்களை
அகலந்திறந்து அகிலத்தையே
அவரது தோளில்ச்சுமந்து காட்டி
அருளொளி வீசவைத்த
விருட்சமான விந்தை தந்தை

அமைதியாய் அன்றாடம் வியர்க்க
விறுவிறுக்க காய்ந்துபோன கைகள்
ஆனாலும் அலட்டிக்கொள்ளாமல்
அன்று ஆண் சகோதரனாய்
அடுத்துத் தந்தையாய் மாமாவாயென
அனைவருக்காகவும் வாழும்
வையகத்தின் தெய்வம்

நாற்பதுவயதுவரை தங்கைகளுக்கு
நாலுபேர் பார்க்கக் கல்யாணஞ்செய்ய
மாடாய் உழைத்து மொட்டையும்
மெல்ல எட்டிப்பார்க்க இயந்திரமாய்
உழைத்துப் பின்பு திருமணத்திற்காய்க்
காத்திருந்து காலமும்போக
கல்யாணமும்
கட்டாமல் கரையேறவும் முடியாமல்
அப்பாவாகாமலே முடிந்தவர்கள்
அப்பப்பா ! பரிதாபம் எத்தனைபேர்

பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலுமாய்
பூவுலகுள்ளவரை பந்தாடப்பட்டாலும்
பந்தா காட்டாத ஆரவாரமில்லா
ஆலமரமாய் அனைவரும் இளைப்பாற
அளப்பரிய நிழலாய் நித்தமும்
நிற்க வைப்பவர்

ஆடியமவாசையில்
அந்தக் கடவுளர்களை
அர்ப்பணிப்புடன்
அகத்திலெண்ணித்
தலைவாழையிலை எடுத்துக்
காத்தோண்டிக்காயையும்
கசக்கக் கசக்க உண்பது அது
காற்றை வயிற்றிலிருந்து
வெளியேற்றவாமென
இறந்தாலும் இருங்கள்
மருந்தில்லாமலென உணர்த்திய
மருத்துவ மகோன்னதன்

அடுத்தவருக்கும் பகிர்ந்து
அதனைக் காகத்திற்கும்
கட்டாயம் வைத்து இம்மையிலேயே
இழப்பின் வலிநீக்குகின்றோம்
காசியிலோ காமேஸ்வரத்திலோ
கடலிலோ இறந்த ஐயாக்களை
இதயத்திலெண்ணித் திதிகொடுத்து
நீராடிக் கடமைகளை செய்து
பூசையும் செய்து
புண்ணியமாய் பூர்வீகப்பலன்களை
பெற்றுப் பெரும் பேறடைகிறோம்
பெற்றவர்களைப் போற்றியே

மோட்சத்தில்க் கடவுளர்களோடு
கலந்து களிக்க அறியாமல்ச் செய்த
பாவங்கள் நீங்க

நிவாரணமாய்ப் பாரம்பரியமாகக்
கடன்செய்து பரிசுத்த
சாந்தியடையப் பிதிர்க்கடன்களாயே
செய்கிறோம் சூரியக்கதிர்களுக்கு

ஆத்மசாந்தியடைந்து எமக்காகவும்
எல்லோருக்காகவும்
என்றுமே எங்களுக்குள்ச்
சங்கமமாகி வாழுகிறீர்கள்
உடலோடுல்லாவிட்டாலும் உன்னத
உயிரான உணர்வுகளோடே
இரண்டறக்கலந்து இன்பமாய்
இவ்வையகமுள்ளவரையென
இனிதாய் நம்புகின்றோம்!...

## அகிலம் போற்றும் அன்னை!...

அகிலம் போற்றிடும் அன்னை திரேசாவே
அன்புள்ளத்தால் ஆதரவற்றோரை
அணைத்தாய்தொழு நோய் பிடித்தோரின்
துயர் துடைத்தாய் தொட்டுத் தடவிப்
பெரும் தொண்டு செய்தாய்
அவதிப்பட்டோர்க் கெல்லாம்
அன்னையாய் தெய்வமாய்
அரும் பாடுபட்டு தாதி போல் நோய்
தீர்த்தாய் எத்தனை துன்பங்கள் தினம்
வந்து நேரிடினும்அத்தனையும் சவாலாக்கி
அருந்தொண்டு செய்தாய்
எத்தனை ஆண்டு நினைதனை
எண்ணிப்பார்க்கையிலே
எளிமையாக வாழ்ந்து செய்த
எண்ணிலடங்கா பணிதன்னை
எட்டுத்திசையும் வாழும் உலக மக்கள்
உனைப்போற்றிட
எல்லா ஆண்டும் உன் நினைவுகள்
வந்து போகும் அன்னையே
உன் ஆத்மா சாந்தி பெற இறைவனை
வேண்டி நிற்கின்றோம்!....-**இராஜேஸ்வரி**-

ஆடி அமாவாசை விரதத்தில்....

## ஒழுக்கத்தை ஊட்டியவரே!..

அந்தி பகல் பாராதுஎந்தையும்
எந்திரமாய் உழைத்துக்
காத்திடுவார்
சுந்தரத் தமிழால் சுடரொளி தந்தே
சிந்தனைச் சிகரமாய் நன்றே
ஆக்கிடுவார்!...

குடும்ப பாரந்தனைச்
சுமக்கையிலே
குழைந்து மனம் ஏங்கி
நொந்திடாது
குலம் வாழ நல்ல
குலமகனாய் என்றும்
குணவாளனாய் குடும்பத்தைக்
காத்திடுவார்!...


ஒற்றுமையாய் நாம்
ஒன்றிணையவே
ஒழுக்கம் பண்பினையும்
ஊட்டிடுவார்
தான்பெற்ற அனுபவங்கள்
அனைத்தையுமே
தலைமுறைக்கு நன்கு
பகிர்ந்தளிப்பார்!...

கல்வி கற்கும் பள்ளிப்
பருவமதிலே
பல்லறிவோடு பாசத்தையும்
ஊட்டிடுவார்
நல்லவராய் நம் வாழ்வு நலம்
பெறவே
நல்லாசியும் வழங்கிடுவார்
அன்புத் தந்தை!...

-**இராஜேஸ்வரி**-

## மண் சஞ்சிகை (வைகாசி-ஆனி) இதழ்- 213க்கான அட்டைப்படக் கவிதை

கூட்டமாய்க் குழுக்களாய் கூடிவாழ்ந்த இனம்
குதுாகலத்தில் பூரிப்பினைக் கூட்டியது தினம்
ஊட்டமாய் உணவுடன் உறையுளானது வனம்
உறவாக உணர்வுகளுடன் ஒன்றானது யனம்
ஆட்டமாய் களிப்பினில் அமிழ்ந்தியது சனம்
அன்புடன் நேசத்தையும் அறுத்தத்து பணம்




ஓட்டமாய் பொழுதுகள் உலர்ந்திடும் கணம்
உலகெங்கும் பரந்தே விரிந்ததில் அணம்
தேட்டமாய்க் கல்வியில் தெளிவான தனம்
தேர்விலும் உழைப்பிலும் தேயாத அணம்
நாட்டமாய் அறிவியலில் நாடியது புனம்
நாளெல்லாம் விரிந்து நகர்ந்திட்ட கனம்

காட்டமாய் கண்டிட்ட கண்டங்களில் தணம்
கையகப் படுத்தல்களில் காட்டத்தில் சினம்
போட்டியால் பொருதிடும் போராட்டக் நனம்
பொய்மையை சூதினை புதைத்திடும் உனம்
வேட்டையில் தொடங்கிய விலங்கின் குணம்
விசையுறு மாந்தரையே வீழ்த்திடலில் பிணம்

காட்டினில் தொடங்கிய கடுமையின் ரணம்
கண்ணீரினில் எழுதிட்ட காயங்களில் நிணம்
ஈட்டிய பொருள்களையே ஈய்ந்திடாத மனம்
எழுச்சியாயல் புரட்சியால் எரிந்திடும் சுணம்
நாட்டுக்குள் பதுக்கலில் நாடுகின்றது துனம்
நலிந்தின்று கருகுகின்ற மனிதத்தின் மணம்.

**-அம்பலவன் புவனேந்திரன்..**

# இருள் துடைக்க சுடரேவா.!

-அம்பலவன்புவனேந்திரன்..

சோலையா யிருந்தபூமி
சுடுகாடா யானதற்கு
வேடதாரிகள் விளையாட்டாய்
உறிஞ்சியதே னுயிர்நாடி..
பாலையின் பக்கத்தில்
பள்ளிகொள்ள வைத்தபின்னே
திருப்பள்ளியெழுச்சி பாடித்
திருப்பமும் வந்துவிடுமோ..?

விலைவாசி விண்ணைமுட்ட
வேலையின்றித் தேசம்தவிக்க
உலையரியு மில்லாததினால்
உயிரை உறிஞ்சிக்குடிப்பதுவோ?

கொடியின்கீழ் வாழ்ந்தவரின்
கொடுமையில் குடிகளெல்லாம்
நெடுவாழ்வை தொலைத்தின்று
நிற்கதியாய் நிற்பதுவோ..?
கொடிநிழலில் வாழ்பவர்க்கு
குவிந்திடும் கொடுமைகளாய்
வறுமையின்வலிகளையுணர
வாய்ப்பேது பிரஜை ஏது..?

பட்டினிப்பேய் புசிக்கும்வலி
பட்டவர்க்கே பாதகமாய்
கட்டாந் தரைகளென்ன
கால்வயிற்றை நிரப்பிடுமோ..?

பட்டமரமாகிப் பாதியுயிராகி
பவனிவரும் பாலகரும்
நட்டநடு வீதிகளிலெல்லாம்
நடைப்பிணமாய்ப் பேருலா..

கோடரிகளின் குடியிருப்புக்
குலைகின்றநாள் வரைக்கும்
கொத்துக்கொத்தாய் மானிடம்
குடல்வற்றியே மாய்வதுவோ..?

எத்தனைநாள்தா னிப்படியே
இருளோடு நகர்ந்திடுமோ
பெட்டகங்களில் பூட்டியவரைப்
பெயர்த்திடவே நாள்வருமோ..?

நாசமாய் நாட்டையாக்கி
நல்லவற்றை அபகரித்த
வேசங்களை அறிந்தவர்மேல்
விஷமிகளை ஏவுவதோ..?
சட்டங்களை மாற்றினாலே
சல்லிகள் குவிந்திடுமோ
சாபங்களும் பாவங்களும்
சண்டாளரைப் பொசுக்கிடாதோ..?

கோசங்களின் குரல்வற்றிடக்
கொடியவர்கள் வலைவீசித்
தேசத்தை நிமிர்த்துவதாய்
நிழல்யுத்தம் நடத்துவதோ..?

எல்லைகள் தாண்டிவிட்ட
எரிமலைகுமுறிக் குழம்பாகி
தொல்லைகள் தருபவரைத்
துவம்சம் செய்வதென்னாளோ..?

எரிகின்ற உதரங்களும்
ஏமாற்றின் நலிவுகளும்
திரியானதீபம் விரிந்து
தீப்பிழம்பாய் யெரித்திடுமே..!
கள்ளத்தை யுள்ளேவைத்து
கபடத்தை மறைத்திட்டாலும்
வெள்ளத்தனைய மலராய்
விரிந்திடுமே நீதி நிமிர்ந்து..!

## இளையோரைக் காப்போம்!..

பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தைகள்
பாலியல் ரீதியாக படுகுழியில் தள்ளும்
பாதகர்களின் படு கேவலச் செயலால்
நீதி தவறிப்போய் செயற்படுகின்றது
வளரும் சமுதாயம் வளர் பருவத்தில்
நஞ்சை விதைக்கின்ற நயவஞ்சகர்கள்
நடைபிணமாக்கப்பட்டு அனாதையாகின்றார்
மனஅழுத்தத்திற்குப் பலர் ஆளாகின்றார்
துன்பியல்செய்வோரைக் தண்டிக்கவேண்டும்
பெண்களைமிதிப்போரை கண்டிக்கவேண்டும்
தாயக நிலத்தில் இடம்பெறும் சங்கதிகள்
ஏமாந்த நெஞ்சத்துடன் நலிந்துபோனார்கள்
எம்மிடமின்று எதிர்காலம் நம்பிக்கையில்
மனம் நிறைந்த வாழ்வை
உலகில் தேடுகின்றோம்!..

**ஜெயா நடேசன்.**

### சாக்கடை!..

சாதனைகளை இன்னும்
சாதிப்பதில் அவனுக்கு
தடையாய் இருப்பது
சாதி என்னும் சாக்கடை!...

### வலை!...

குடும்பம் வறுமையில்
வெளிநாடு செல்லும் தாய்
இளவயதுச் சிறுமிகள்
காமுகர் வலையில்!...

**- சிவா -**

## ஆபிரகாம் லிங்கனுக்குரிய 7 நாட்கள்!....

அமெரிக்காவின் ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர்தான் ஆபிரகாம் லிங்கன். இவரின் ஆட்சிக்காலம் பொற்காலம் என இன்றுவரை அமெரிக்க மக்கள் மட்டுமல்லாமல் உலகப் பாமர மக்களால் போற்றப்படுகின்றது இவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட மிக முக்கிய சம்பவங்கள் சுவாரஸ்யமாகத்தான் இருக்கின்றன.

1-ஞாயிறு - பிறந்தநாள்
2-திங்கள் - அமெரிக்க அதிபராகத் தெரிவுசெய்யப்பட்ட நாள்.
3-செவ்வாய் - இரண்டாவது தடவையாக அதிபராகத் தெரிவுசெய்யப்பட்ட நாள்.
4-புதன் - வழக்கறிஞராகப் பதவி ஏற்ற நாள்.
5-வியாளன் - பிரசித்தி பெற்ற உரையை (கெட்டிஸ்பாக்) ஆற்றிய நாள்.
6-வெள்ளி - கொலையாளியால் சுடப்பட்ட நாள்
7-சனி - இவ்வுலகைவிட்டு உயிர் நீத்த நாள்.

**- ஜெயா நடேசன் -**

## தெரிந்துகொள்வோம்!..

1-உடலில் இரத்தோட்டம் இல்லாத பூச்சி - கரப்பான்பூச்சி
2-தலை குனிந்து தண்ணீர் குடிக்கக்கூடிய பறவை - புறா
3-காது இல்லா உயிரினம் - பாம்பு
4-வயிறு இல்லாத உயிரினம் - ஈசல்
5-வாய் இல்லாத உயிரினம் - வண்ணத்துப்பூச்சி
6-தலை இல்லாத உயிரினம் - நண்டு
7-முட்டையிட்டதும் இறக்கும் உயிரினம் - நண்டு
8-சிறிய இதயம் உள்ள உயிரினம் - சிங்கம்
9-நீல நிறக்குருதியுள்ள நீர்வாழ் உயிரினங்கள் - நண்டு, இறால்
10-கீழ்த்தாடையை அசைக்கமுடியாத உயிரினம் - முதலை

## அறிந்துகொள்வோம்!..

சூழலில் பிராணிகள் புரியும் நன்மைகள்...
1-ஆந்தை - தீமை செய்யும் பிராணிகளை பிடித்து உண்ணுதல்.
2-தேனீ - மகரந்தச் சேர்க்கைக்கு உதவுதல்.
3-காகம் - அழுக்குகளை உட்கொண்டு சுத்தம் பேணல்.
4-கறையான் - உக்கல் அடையச் செய்தல்.
5-வௌவால் - வித்துப் பரம்பலுக்கு உதவுதல்
6-செண்பகம் - விவசாயத்திற்கு தீங்குசெய்யும் பூச்சிகளை உண்ணுதல்.
7-ஓணான் - விவசாயத்துக்கு தீங்குசெய்யும் பூச்சிகளை உண்ணுதல்
8-வண்ணத்துப்பூச்சி - மகரந்தச் சேர்க்கைக்கு உதவுதல்.
9-மண்புழு - நிலத்திலுள்ள கிருமிகளை உண்டு விவசாயத்திற்கு உதவுதல்.
10-பூச்சி இனங்கள் - கிருமிகளை அழித்து சுற்றாடலைப்பாதுகாக்க உதவுதல்.

## பொன்மொழிகள்!..

(1) நண்பர்கள் தவறுசெய்தால் மன்னித்துவிடாதே..மறந்துவிடு.. ஏனெனில் அவர்கள் உறவுகளல்ல உணர்வுகள்...

(2) நெருக்கடியின் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது மிகப் பெரிய பலம்.

(3) நல்ல பழக்கங்களைச் சொல்ல வேண்டாம் உன் செயலில் காட்டு.

# விரதம் என்று சொல்லி!...

(கவி மீனா)

விரதம் என்று சொல்லி பல பேரு மற்றவர்களையும் தங்களையும் ஏமாற்றிக் கொண்டே வாழுகிறார்கள், இதை நீங்கள் கொஞ்சம் சிந்தித்து பார்த்தால் நான் சொல்வது புரியும்... விரதம் என்று சிலர் ஊரை ஏமாற்றலாம் கடவுளை ஏமாற்ற முடியுமா? முதல் நாள் உண்ட மச்சம் வயிற்றில் இருக்கமிச்ச கறியும் பிரிஜ்ஜில் இருக்க மச்ச சட்டியிலே மரக்கறியை சமைத்து மூக்கு முட்ட பிடிப்பது விரதமாகுமா?

ஊரிலை கோவிலுக்கு போவதால் நல்லூர் அம்மன் கோவில் பிள்ளையார் கோவில் திருவிழாக்கள் நடக்கும் நாட்களில் வீடுகளில் சைவமாக இருந்து கோவிலுக்கு போவது வழக்கம் அதாவது மாமிச உணவுகளை சாப்பிட்டபின் கோவில்களுக்கு போக கூடாது என்பது ஒரு வழக்கத்திலிருந்தது அப்படியிருக்க அங்கு ஊரிலை பக்கத்து வீட்டு அன்ரி ஒருவர் மீன் வாங்கி கொண்டு போவதை நாங்கள் கண்டிருக்கிறோம் அவ மாமிசம் சாப்பிட்டு போட்டு நல்லூர் திருவிழாவுக்கு தினமும் போவா மீன் சமைத்து சாப்பிட்டு போட்டு கோவிலுக்கு போறீங்களே என்று ஒரு நாள் கேட்டதற்கு அவ சொன்னா சாமிக்கு என்ன மணக்கவா போகுது? என்று, அப்படி சில பேரு!

வெளிநாட்டுக்கு வந்து 35 அல்லது 40 வருடமாகியும் ஊர் கோவில்களில் திருவழா நடக்கிற நாட்களில் விரதம் அனுஸ்டிக்கிற ஆட்களும் இங்குள்ளார்கள் அது நாடு விட்டு நாடு வந்தாலும் ஊரிலை விரதம் இருந்தது அதை விட்டால் ஏதாச்சும் தீங்கு நடக்குமோ என பயந்து அந்த நாட்களில் விரதம் பிடிப்பவராக சில பேரு!

விரதம் என்பது சைவ சாப்பாட்டிலும் தினம் குளிப்பதாலும் இல்லை மனதிலை ஆசைகளை துறக்க முடிந்தால் அதுவே விரதம் என்பேன்

(நித்தம் நித்தம் நீராடில்
நெடுமால் அருளை பெறலாமேல்
தத்தும் தவளை மீன்களும் அத்
தனிபேறடைய வேண்டாவோ?)

ஊரிலை காகம் வந்து தொல்லை பண்ணுது என்று சொல்லி காகங்களை சூ சூ என்று துரத்துவோரும் தடி கொண்டு அடிப்போரும் தினமும் காகத்தை வெறுபவர்கள்தான் புரட்டாதி சனிகிழமைகளிலும், விரத நாட்களிலும் மட்டும் வடை பாயசத்தோடு வாழை இலையில் சோறு படைத்து கா கா என்று காகத்தை வருந்தி அழைத்து உணவு இடுவர் மற்றநாட்களில் அதே காகங்களை விரட்டுவதும், விரத நாட்களில் மட்டும் தாம் செய்த

பாவங்கள் தீர சனீஸ்வரனின் வாகனம் காகம் என்று சொல்லியும், பிதுர்கள் என்று சொல்லியும் விருந்து படைப்பது எந்த விதத்தில் நியாயமாகிறது?ஒரே காக்கைகளுக்கு இவர்கள் கொடுக்கும் மரியாதை நாளுக்கு நாள் வேறு படுகிறது.

தங்கள் தேவைகளை பொறுத்து மனிதர்களை ஏமாற்றுவது போலே காகங்களையும் ஏமாற்ற நினைப்பதுக்கு பேரு விரதமா? இதை விட மோசமான கதைகள் இன்னமும் இருக்கு சொல்ல இங்கை ஒரு பெண்மணி கந்தசஸ்டி விரதம் கௌரி நோன்பு எல்லாம் விரதம் என்று சொல்லுவா ஒரு நாள் நான் கண்டது என்னவெனில் கையிலை நூலும் கட்டினபடி விரத நாளிலை புருஷன் கொலண்ட் மீன் மாக்கெற்றுக்கு போய் வாங்கி வந்த மீன் வகை எல்லாம் எடுத்து குளிர்சாதனப் பெட்டியில் அடுக்கி கொண்டிருந்தா, அப்ப நான் கேட்டன் விரதம் எண்டு சொல்லிப் போட்டு மீன் எல்லாம் அளையுறீரே என, அதுக்கு அவ சொன்னா இன்னும் 2 நாளில் விரதங்கள் முடியுது அப்ப சமைக்கதான் அவரு மீன் வாங்கி வந்தது என்று..

அப்ப மனசெல்லாம் மீனை பற்றிய சிந்தனை இதிலை விரதம் என்று யாரை ஏமாற்றுகிறாய் நீ என்று கேட்கத்தானே தோணும் இதை விட சிரிப்பு என்னவென்றால் ஒரு நண்பி ஒரு நாள் என்னுடன் ஒரு சேச் வளவில் நடந்த ஒரு கொண்டாட்டத்துக்கு வந்தா அங்கு இறைச்சி எல்லாம் வாட்டிக்கொண்டு இருந்தார்கள், நான் வாங்கிச் சாப்பிட நண்பி சொன்னா தான் விரதம் என்று, சரி என்று கிழங்குப் பொரியலை வாங்கி கொடுத்தன் கொஞ்சத்தாலை அவ சொன்னா தனக்கு இறைச்சியை பார்க்க வாய் ஊறுது என்று, தனக்கும் வாங்கித் தரச் சொல்லி தான் எனக்கு பின்னாலை ஒளிச்சு இருந்து சாப்பிடுறதாக காரணம் புருஷனும் மற்ற தமிழ் ஆட்களும் காணாமல் என் பின்னாலை ஒளிச்சு நின்று அவ இறைச்சிப் பொரியலை சாப்பிட்டதை என்னால் இன்று வரை மறக்க முடியலை.

அதே பெண் ஒவ்வொரு வெள்ளிகிழமையும் இரவு சாப்பாட்டை இரவு 12 மணிக்கு பிறகுதான் சாப்பிடுவாவாம் ஏன் என்று கேட்டதற்கு ஒரு நாள் சொன்னா பிரிஜ்ஜிலை ஆட்டு இறைச்சி கறி இருக்கு அதோடை இடியப்பம் சாப்பிடலாம் 12 மணி என்றால் வெள்ளி கிழமை முடியுதுதானே என்று, இந்த கெடு பிடிச்ச சனங்களுக்கு விரதம் ஒரு கேடா? சொல்லுங்கோ, அம்மட்டு ஆசை நெஞ்சிலை இருந்தால் யாருக்காக அல்லது யாரை ஏமாற்ற இந்த விரத நாடகம்?

இது போச்சா இன்னொரு பெண்மணி நடக்க முடியாத வருத்தத்திலை இருக்குது என்று சொல்லி நான் எனது பிறந்தநாளன்று சாப்பாடு கோழிப் பிரியாணி கொண்டு போய் கொடுக்க அவ சொன்னா தனக்கு செவ்வாய் தோஷம் இருபதால் செவ்வாய் கிழமை விரதம் 40வருடங்களாக

விரதம் பிடிப்பதாக தான் அன்று சாப்பிட மாட்டன் மச்சம் என்று சொன்னா சரி என்று நான் திரும்பி வந்து யோசித்தன்...

இந்த மனுசிக்குத்தான் புருஷன் செத்து 6 அல்லது 7 வருடமாகி போச்சே இனி யாருக்காண்டி இந்த செவ்வாய் கிழமை விரதம் பிடிக்குது என்று செவ்வாய் தோஷம் சாதகத்திலிருந்தால் கன்னி பெண்கள் நல்ல கணவன் கிடைக்க வேணும் கல்யாணம் கைகூட வேணும் என்பதற்காகவும், கல்யாணமான பெண்கள் கணவனுக்கு எந்த ஆபத்தும் வரகூடாது என்றும் செவ்வாய் கிழமையும் ஆடிசெவ்வாயும் விரதம் இருபது ஒரு நம்பிக்கை, ஆனால் புருஸன் செத்த பிறகும் செவ்வாய் தோஸம் என்று விரதம் பிடிக்கும் இந்த பெண்மணி போன்றோரின் அறியாமையை என்ன சொல்ல?

விரதம் எனற பேரிலை இப்படி பல சுத்துமாத்துக்களும் அறியாமையும் நிறைந்திருப்தோடு மட்டுமல்லாமல் மதம்மாறி சனம் வேறே யேசுவின் பெயரால் உபவாசம் இருபதாகச் சொல்வார்கள் பின்பு பார்த்தால் 10 நாள் சாப்பாட்டை ஒரு நேரத்தில் சாப்பிடுவார் கள்கத்தோலிக்க மதத்தவரும் 40 நாள் உணவுகளை குறைத்து அல்லது இறைச்சிவகைகளை அல்லது இனிப்பு வகைகளை விட்டு விரதம் இருபதாக சொல்வார்கள் பின்னர் ஈஸ்டருக்கு ஆடு மாடு முயல் கோழி தொட்டு வான்கோழி வரை பொரித்து வைனும் குடிச்சு ஒரு வெட்டு வெட்டு வார்கள் பாருங்க, இதுக்கு பேரு விரதமா?

மனதிலை உள்ள ஆசைகளை ஒவ்வொன்றாக துறந்து, வறுமையில் வாடுவோருக்கு இயன்ற உதவியை செய்து, அடுத்தவன் பொருளுக்கு ஆசை படாது பிறர் துணைக்கு இச்சை கொள்ளாது, உன் கடமையை செய்து நேர்மையாக உழைத்து வாழ முடிந்தால் ஆலயங்கள் செல்லாமலே கடவுளின் அருள் கிடைக்கும் என்பதே ஆன்றோர் வாக்கும் எனது கருத்துமாகும்
விரதம் என்று சொல்லி மற்றவர்களை ஏமாற்றுவதும் கோவில் சேச் என்று அலைவதும் உண்மையான பலனை ஒரு நாளும் தராது, கடவுள் இருபது நமக்குள்ளே அவனுக்கு நாம் உண்மையாக நடப்பதே மேல் இதைதான் திருமுறையும் சொல்கிறது

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே

( நாலாம் திருமுறை)

# அன்னை திரேசாவின் பொன்மொழிகள்...

-உன் வெற்றி அல்ல, முயற்சியே கடவுளுக்குத் தேவை.

-நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை நாமே முதற்கண் புரிந்து கொள்வது அவசியம்.

-உண்மையான அன்பு வலிக்கும், வதைக்கும், வெறுமையாக்கும்.

-அவமானங்களின் வழியேதான் தாழ்ச்சியைக் கற்றுக் கொள்கின்றோம்.

-ஒரு சிறு புன்முறுவலின் ஆற்றலை யாராலும் புரிந்து கொள்ள முடியாது.

-வாழ்க்கை என்பது நீ சாகும்வரை அல்ல பிறர் மனதில் வாழும் வரை.

-உனக்கு உதவியோரை மறக்காதே உன்னை நேசிப்பவரை வெறுக்காதே உன்னைநம்பியவரை ஏமாற்றாதே.

-சிறியவற்றில் நம்பிகைக்கு உரியவராய் இருப்பதே உன் பேராற்றல்.

-நோய்களிலே மிகக் கொடிய நோய் அடுத்தவர்மீது அக்கறையற்று இருப்பதே.

-இறக்கத்தான் பிறந்தோம் அது வரை இரக்கத்தோடு இருப்போம்!

-இந்த உலகில் நாம் நம் கண் முன்னால் காணும் ஒருவரையும் நேசிக்க இயலவில்லை என்றால் கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் அன்பை செலுத்த முடியாது.

-உங்களுடைய கனவுகளோ வாழ்க்கை லட்சியங்களோ மிகவும் விரிவானவையாக சிக்கலானவையாக இருந்தால் அவற்றை எட்டிப்பிடிப்பது மிகவும் சிரமமாகிவிடும்.

-பிறருடைய துன்பத்தை நீக்கும் வல்லமை உங்களுக்கு வரவேண்டுமானால் அத் துன்பத்தை நீங்களும் அனுபவித்து உணர வேண்டும்.

-எதுவுமே நிரந்தரம் இல்லாத இவ்வுலகில் உங்கள் கஷ்டங்கள் நிரந்தரம் இல்லை .

-அமைதியின் பலன் பிரார்த்தனை, பிரார்த்தனையின் பலன் நம்பிக்கை, நம்பிக்கையின் பலன் அன்பு, அன்பின் பலன் சேவை, சேவையின் பலன் அமைதி.

-தலைவன் ஒருவனுக்காக காத்திருக்காதீர்கள்.உங்களுக்குரிய பாதையை அமைத்து உங்களை நீங்களே வழிநடத்திச்செல்லுங்கள்.

-கொடுப்பது சிறிது என்று தயங்காதீர்கள் பெறுபவருக்கு அது பெரிது. எடுப்பது சிறிது என்று திருடாதீர்கள் இழந்தவருக்கு அது பெரிது.

-சேவை செய்யுங்கள் கடவுள் உங்கள் அருகே வருவார்.

-இரு கை கூப்பி கடவுளை வணங்குவதை விட ஒரு கை நீட்டி உதவி செய்யுங்கள்

-அன்பு தான் உங்கள் பலவீனம் என்றால் இந்த உலகின் மிகச்சிறந்த பலசாலி நீங்கள் தான்.

-தண்டனை கொடுப்பதற்கு தாமதம் செய்யுங்கள் ஆனால், மன்னிப்பு கொடுப்பதற்கு யோசனை கூட செய்யாதீர்கள்.

# மாலதி பள்ளிக்குப் போறாள்!...

(சிறுகதை)

கொங்கா ஸ்ரான்லி

அது அது ஒரு சிறிய கிராமம். அங்கு ஒரு குடிசையில் தங்கம்(பாட்டி)வசித்து வந்தாள். அவளுக்கு ஒரு மகள் தனம். கணவன் மணி. இவர்களுக்கு ஒரு சிறு காணித்துண்டு. அதில் சிறிய தோட்டம் செய்து தங்கள் வாழ்க்கையை நடத்தினர். தங்கம் பாட்டி கடவுள் நம்பிக்கை உடையவள்.முன்னோர் வழி நடப்பவள்.அவளுடைய இந்த நம்பிக்கையை மூட நம்பிக்கை என்று சொல்லுவார்கள்.இருந்தாலும் அவள் தன் கோட்பாடுகளில் இருந்து பின் வாங்கியதில்லை.

பழைய நாட்டுப்புறம் என்ற பாணியில் வளர்த்திருந்தாள். தனம் பாடசலைக்கு போகும்போது முழுப்பாவாடை சட்டை போட்டு,இரட்டை பின்னல் பின்னிக் கட்டி விடுவாள் தங்கம்.ஆனால் தனத்திற்கு இது பிடிப்பதில்லை. என்ன செய்வது பாடசலையில் எல்லோரும் பட்டிக்காடு வருகிறது எனக் கேலி பண்ணுவார்கள். தனம் அழுவதைத் தவிர ஒன்றும் செய்ய முடியாது.

அவர்கள் வகுப்புப் பிள்ளைகள். நாகரிக உடையணிந்து,குதிக்கால் செருப்பு அணிந்து நடிகைகள் போல் வருவார்கள். இவர்களைப் பார்த்து தனமும் அவள் நண்பிகளும் ஏங்குவதுண்டு.ஆனால் படிப்பிலே தனமும் அவளுடைய நண்பிகளும் தான் நல்ல புள்ளிகள் பெறுவார்கள். ஏனெனில் இவர்கள் படிப்பதில் மட்டும் தான் கவனம் செலுத்துவார்கள். இது தான் கிராமத்து பெற்றாரின் உபதேசம் என்றும் சொல்லாம். இப்படி இருக்கும் போது நகரத்தில் வாழும் பெண்கள் தாங்கள் எல்லாத்திலும் உசத்தி எனும் மனப் பாங்குடன் பெருமை தட்டிக் கொள்வார்கள்.

இப்படியிருகையில் தனத்தில் நண்பி மாலதி கிராமத்திலிருந்து நகரத்திற்கு படிப்பதற்காகச் செல்கிறாள்.மாலதியின் பெற்றார் முற்போக்குவாதிகள்.அதனல் மகளை நன்றாகப் படிப்பித்து ஒரு டாக்டர் ஆக்கவேண்டும் என்ற ஆவலில் அவளை நகரத்தில் ஒரு பாடசாலையில் சேர்த்து அங்கேயே தங்குமிடமாகிய ஹாஸ்டல் இல் இருக்க விட்டனர். கிராமத்திலிருந்து நகரத்திற்கு வந்த மாலதிக்கு ஓரிரு மாதங்களில் நகரவாழ்க்கை பிடித்துவிட்டது.

யோசித்துப் பார்க்கையில் ஆகா இந்தநகர வாழ்க்கை எவ்வளவு அழகானது.இதைவிட்டு எங்கள் கிராமத்தில் வயலையும் வாய்க்காலையும் தவிர வேறு மாஞ்சோலை, பூஞ்சோலை தானே. என நினைத்தாள்.

காலம் கரைய மாலதியும் நன்றாக டெவலப் ஆகிவிட்டாள். ஆரம்பத்தில் விடுமுறைக்கு கிராமம் செல்பவள். இப்போது கிராமம் செல்வதை தவிர்த்துக் கொள்வாள். பெற்றாரும் மகள் படிக்கிறாள் என நம்பி விட்டு விட்டனர்.

இந்த வேளையில் தனம் 10 ம் வகுப்பு மட்டும் படித்து முடிக்க,தங்கம் பாட்டி தனத்திற்கு திருமண ஏற்பாடு செய்தாள். தனத்திற்கு மேலும் படிக்க வேண்டும் என்ற ஆசை. ஆனால் அம்மா சொல்லிவிட்டாள். படித்தது போதும் வாழ்க்கை வாழ இந்தப் படிப்பு போதும், என்று சொல்லி விட்டாள். அவ்வூரிலேயே ஒரு நல்ல பையனாகப் பார்த்துத் திருமணம் செய்து வைத்தனர். தனத்தினுடைய திருமணத்திற்கு கூட மாலதி வரவில்லை.எல்லோரும் எதிர்பார்த்தனர்.

மாலதியின் வருகையை ஏனெனில் தனமும், மாலதியும் உயிர்தோழிகள். ஆனாலும் சில மாதங்களாக மாலதியிடமிருந்து கடிதத் தொடர்பில்லை .தனம் நினைத்தாள் மாலதிக்கு படிப்புக்கூட என மனதில் நினைத்துக் கொண்டாள்.

தனமும் இல்லறவாழ்வில் இணைந்து மகிழ்வாக வாழ்க்கை நடத்தினாள். தங்கம் பாட்டிக்கு பெரிய மகிழ்ச்சி தன் பெண்ணை தான் மூட நம்பிக்கை என்று சொன்னாலும் நன்றாக வளர்த்து நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுத்த நிம்மதி. பேரக்குழந்தையும் கண்டது இன்னும் மிகுந்த மகிழ்ச்சி.

இப்படி இருக்கையில் ஒரு நாள் மாலதி கிராமத்திற்கு வருகிறாள்.ஆச்சரியம் அவளுடன் ஒரு ஆண் குழந்தையும் வருகிறது பெற்றார் ஏங்கிவிட்டனர்.இது என்ன மாலதி ? யார் இந்தக் குழந்தை எனக் கேட்டாள்.மாலதி அழுதாள். மகனோ அம்மா ஏன் அழுகிறீர்கள் என்றதும். மாலதியின் அம்மா மயக்கமே போட்டு விட்டாள்.மாலதி வந்து விட்டாள் என்று அயலவர் அவளைப் பார்க்க வந்தனர்.

மாலதியின் குழந்தையைக் கண்டதும் வாயில் கைவைத்தனர். எப்ப மாலதி திருமணம் செய்தாள். என்று தெரியாத அயலவர்கள், கிரமத்து மக்கள்,பண்பாடு மாறாதவர் அடுத்தடுத்த கேள்விகள். மாலதியின் அம்மாவால் பதில் சொல்ல முடியவில்லை.

நகர வாழ்வின் மோகம், போலி வாழ்க்கை முறையும் மாலதியை சேற்றுக்குள் தள்ளிவிட்டது .போலியை உண்மையென நம்பி சோடை போய்விட்டாள். கல்வி கற்க சென்றவள், காதலெனும் மாயவலையில் சிக்கி கிராமத்து உண்மை வாழ்வை மறந்து நகரத்தின் போலி வாழ்க்கைக்குள் அமிழ்ந்து விட்டாள்.

காதல் தவறல்ல. ஆனால் காதல் கிராமத்தில் தெய்வீகம், நகரத்தில் நாகரிகம். அதை உணராத மாலதி தன்னை இழந்தினால் கிடைத்தது. அவளுக்கு ஒரு மகன்,புத்திர


பாக்கியம் நேர்மையானது தான் ஆனால் இவளுக்கு இது ஒரு அவமானச் சின்னமாக மற்றவர்கள் பார்க்கும் போது நரகவேதனையாக இருந்தது.அது குழந்தை என்ன செய்யும். எல்லோரும் தன்னை ஒரு விதமாக பார்க்க அது அக் குழந்தைக்கு விளங்குமா என்ன?

தனமும் ஒரு நாள் மாலதியைப் பார்க்க வந்தாள். மாலதி தனத்தைக் கண்டதும் கோவென அழத் தொடங்கி விட்டாள்.தனமும் அவளைத் தேற்றி ஆறுதல் படுத்தினாள். மாலதி சொன்னாள் நான் கிராம வாழ்க்கையை வெறுத்தேன் . போலி வாழ்க்கையை நம்பினேன்.இப்போது தலை கவிழ்ந்து நிற்கிறேன்.நான் ஒருத்தரைக் காதலித்தேன்.அவருடன் எல்லா இடமும் சுற்றினேன். அங்கு என்னைக் கேட்க ஒருவருமில்லை, சுதந்திரமாக இருந்தேன்.இங்கு என்றால் அம்மா,அப்பா கண்டிப்பு. அதனால் நாம் எந்தத் தவறையும் செய்ய மாட்டோம்.உன்னைக் கூட எல்லோரும் பட்டிக்காடு என்று சொல்லும் போது சிரிப்பு வரும். ஆனால் உனது அன்னை வளர்ப்பு மூடக்கொள்கை . என்றாலும் மானம் காக்கப்பட்டிருக்கிறது.பண்பாடு காக்கப் பட்டிருக்கு.

நானும் ஏளனமாக நினைத்ததுண்டு. ஆனல் அது இப்போ எவ்வளவு சிறப்பானது என உணருகின்றேன்.மக்கள் கிராமத்தாரை மூடக் கொள்கை உள்ளவர் எனக் கூறு கின்றனர்.ஆனால் அதற்குள் எவ்வளவு கண்ணியம், கட்டுப்பாடு,பண்பு இருக்கு. இதை சிலர் புரிந்துகொள்வதில்லை.

ஆனால் போலி வாழ்வைக் கண்டு புளங்காகிதம் அடைவோர் கடைசியில் மூடக்கொள்கைக்குள் தான் தஞ்சம். அது மூடக்கொள்கையல்ல, முன்னைய தார்ப்பரியம் பண்பு மாறாதது. போலி வாழ்க்கை நாகரிகம் அது நாளுக்கு நாள் மாறும்.அதனால் அது மனிதரையும் மாற்றும். மூடக்கொள்கை என்று கூறுவது கடல் போல அப்படியே இருக்கும். ஆனால் போலி வாழ்க்கை முறை கடலில் வந்து போகும் கப்பல் வள்ளங்கள்போல மாறி மாறி வருவது. எனவே மாலதியைப் போல் மானம் கெட்டு வாழாது தனத்தைப் போல் தரமாக வாழவேண்டும்.

**சிறுவர் சுடோக்கோ முடிவு..**

(1) 


**கணக்குப்புதிர் போட்டி முடிவு..**

(2)

Magisches Zahlenquadrat

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | 18 | 2 | 21 | 15 |
| 17 | 1 | 25 | 14 | 8 |
| 5 | 24 | 13 | 7 | 16 |
| 23 | 12 | 6 | 20 | 4 |
| 11 | 10 | 19 | 3 | 22 |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| போ | ரா | ட் | ட | ம் | ட | க |
| க் | கோ | ப | ம் | ட | ட் | தி |
| கு | ணி | ஆ | ப | ட் | டை | ர் |
| வ | யா | னி | வு | வ | ட் | கா |
| ர | ல் | த | கா | ட் | ற | ம |
| த் | க | ல் | வி | டி | கு | ம் |
| து | ப | ள் | ரு | பொ | ரி | எ |

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| க | ல் | வி | ரை |
| ம் | ட | ட் | தி |
| ப | ட் | ட | ம் |
| கோ | மா | ம் | அ |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 2 | 8 | 3 | 1 | 7 | 9 | 6 |
| 1 | 9 | 8 | 6 | 7 | 4 | 3 | 5 | 2 |
| 6 | 3 | 7 | 5 | 2 | 9 | 8 | 4 | 1 |
| 7 | 1 | 4 | 3 | 9 | 6 | 5 | 2 | 8 |
| 2 | 5 | 3 | 4 | 8 | 7 | 6 | 1 | 9 |
| 8 | 6 | 9 | 1 | 5 | 2 | 4 | 3 | 7 |
| 4 | 2 | 5 | 7 | 1 | 8 | 9 | 6 | 3 |
| 9 | 8 | 6 | 2 | 4 | 3 | 1 | 7 | 5 |
| 3 | 7 | 1 | 9 | 6 | 5 | 2 | 8 | 4 |

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக் கிறன் ...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க..கோதாரிப்போன கொரோனா வந்து லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கி வருவதை எண்ணி என்னைப் போல நீங்களும் ஆறாத்துயரில்தான் இருப்பீர்கள். முதற்கண் அனைத்து உயிர்களுக்கும் அஞ்சலி.. மாதம்மாதம் அஞ்சலி செய்யவேண்டிக்கிடக்குது பாருங்கோ.. சினிமா தொடர்நாடகம் போல 1, 2, 3, 4 வெளியீடு மாதிரியல்லோ கொரோனாவும் 1,2,3,4எனத்தொடருது. இதைக் கட்டுப்படுத்துவதும் எங்கட கையில்தான் இருக்குது பாருங்கோ!.

இல்லை?.. இல்லை!.. நாங்கள் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்க மாட்டோம்?.. கொண்டாட்டங்கள் வைப்போம்?.. கோவில் திருவிழாக்கள் நடத்துவம்?.. கண்டபடி எல்லா இடமும் பாதுகாப்பு இல்லாமல் திரிவம் என்று நடந்தால் எப்படி இந்தக் கிருமித்தொற்றிலிருந்து விடுபடமுடியும். எல்லாரும் கொஞ்சம் யோசியுங்கோ..தவறினால் கண் மூடவேண்டியதுதான்... நீங்கள் கண்மூடுவதுடன் மற்றவர்களின் கதையையும் முடிக்கப் போகிறீர்கள் என்பதைக் கொஞ்சம் கவனியுங்கோ ராசாக்கள்!..ராசாத்திகள்!..

இனி கோடை வெய்யிலும் வந்து சிலருக்கு அலர்ஜி, வேறுசில வியாதிகள் வந்து வாட்டி எடுக்கப் போகுது. இது ஒரு புறம் இப்ப புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் பலர் இந்தக் கோடைக்கு தாயகம் சென்றுவர பல திட்டங்கள், விமானச்சீட்டுகள் பதிவுக்கு அல்லோலப்படுகிறார்கள். .

இனி விடுமுறைக்கு ஊருக்குப்போகப் பலர் திட்டம்போட்டிருக்க.. இந்த நாசமாய்போன கொரோனா ஒழியிதில்லை நாட்டுப்பிரச்சனையும் நாளுக்குநாள் கூடிக்கொண்டு போவதால் கவலை பெருகிவிட்டுது பாருங்கோ.. ஊருக்குப்போய் கண்டதெல்லாத்தையும் ஆசையோடு வேண்டி உண்ணலாம், ஊரெல்லாம் சுற்றித்திரியலாம், கோயில் குளம் எல்லாம் பார்க்கலாம், கடற்கரையில தண்ணியடித்து, விளையாடிப் படுத்து உறங்கிப் பொழுதைப் போக்கலாம், பலவிதமாகப்போட்டோ எடுத்துப் பேஸ் புக்கில் போட்டு லைக் வாங்கலாம் என்றெல்லாம் ஆசை..எல்லாஆசையும் எப்படி நிறைவேறும் என்று பல்லாயிரம் பேருக்கு ஒரே கவலைதான்பாருங்கோ!..

சரி..சரி.. என்ன கவலைகள் இருந்தாலும இந்தமுறை ஊருக்குப் போய்த்தீரவேண்டும் எனப் பலருக்கு ஆசைபாருங்கோ. வெளிக்கிட்டாச்சுது என்ன நடந்தாலும் பறவாயில்லை என்று பலர். ஆனால் சிலர் புக்பண்ணின ரிக்கட்டையும் கான்சல் பண்ணிப்போட்டு அடுத்தமுறை பார்ப்பம் என்று கிடக்கினம் பாருங்கோவன்.

இப்படிச் சங்கதிகள் போய்க்கொண்டிருக்க தற்போது எங்கள் நாட்டில் நடைபெறும் அகோரமான விடையங்களை அறிய..அறிய இந்த மயிலனுக்குத் தலை வெடிக்குது .அதாவது நாட்டில் நடைபெறும் சங்கதிகளோ ஏராளம். அதில் ஒரு சங்கதியைத்தான் உங்களோடு அலசலாம் என நினைக்கிறான் இந்த மயிலன். என்ன இந்த எண்ணெய் சங்கதிதான். இன்று எங்குபார்த்தாலும் மண்ணெய், டீசல், பெற்றோல் பிரச்சனைதான். உண்மைதான் இந்த எண்ணெய்கள் இல்லாவிட்டால் இந்த உலகமே இயங்காதுதான்.

கொரோனா,உக்ரைன்-ரஷ்ஷியா நெருக்கடிகளோடு நமது நாட்டின்: பொருளாதார சீர்கேடுகள், உற்பத்தி இல்லை, இறக்குமதி அதிகரிப்பு, தேயிலை றப்பர் வருமானம் குறைந்தது, சுற்றுலாப்பயணிகள் வருமானம் குறைந்தது எல்லாம் ஒன்றுசேர்ந்து இலங்கையை ஓட்டுமொத்தமாக ஒரு பிடி பிடித்தபடியால் நாட்டில் இந்தநிலை வந்திருக்கிறது. இதை இந்த மயிலன் சொல்லி நீங்கள் தெரியத்தேவையில்லை என்று நினைக்கிறன் பாருங்கோ..

பலநெருக்கடிகளோடுமக்கள் வாழ இந்த எண்ணெவியாபாரிகளின் அடாவடிகளோ சொல்லமுடியாது.. பதுக்கல், விலைகூட்டி விற்பது, இறக்குமதி இன்மை, தட்டுப்பாடு, கள்ள வியாபாரம் என நாடெங்கும் வியாபித்து விட்டபடியால் மேலும் ஏழைமக்கள் வாழ்க்கை துன்பத்தின் மேல் துன்பம்தான். இன்று பணம் இருந்தாலும் இந்த எண்ணெய் வேண்டுவதென்றால் முடியாத காரியம்தான் பாருங்கோ.

நாட்டில் தினமும் இந்த கியூவரிசை மைல் கணக்காக நீண்டுவிட்டது. எண்ணெய்காக நீண்டநேரம் வரிசையில் நின்று மயங்கி விழுந்தவர்கள் அடிபிடி சண்டை என இதுவரை 15 பேர் அளவில் இறந்துவிட்டதாகவும் இந்த மயிலன் அறிகின்றான். இதனால் எங்குபார்த்தாலும் தட்டுப்பாடு, பிரச்சனை..பிரச்சனை என்று வாழ்வு மாறிப்போய்விட்டது. உணவு, மருந்து, அத்தியாவசியப்பொருட்கள், காய்கறி, இறைச்சி, மீன் என அனைத்தும் பத்துமடங்கு அதிகரித்துவிட்டது. இன்னும் அதிகரிக்கும் என கணிக்கப்படுகின்றது. அந்தளவுக்கு நாட்டின் பொருளாதாரம் ஆதள பாதாளத்தில் விழுந்துகிடக்கின்றது.

இதற்கு கோட்டா - ரணில் தீர்வு கொண்டுவருவார்கள் என்றால் எப்படிக் கொண்டுவரமுடியும். அரசு மாறினாலோ அல்லது யார் அட்சிக்கு வந்தாலோ உடனடியாக எந்த மாற்றமும் வந்துசேராது என்பது

உண்மை பாருங்கோ. இந்தப் பொருளாதார நெருக்கடிகள் இன்று நேற்று வந்ததல்ல.. மாறி மாறி வந்த அரசுகளின் சரியான பொருளாதாரக் கொள்கை, திட்டமிடல் இன்மையும் எதற்கும் வெளிநாடுகளின் இறக்குமதியைக் கடைப்பிடித்தமை, இராணுவச் செலவுகளுக்கு அதிக பணம் செலவிட்டமை போன்ற பல காரணங்களை இப்போ அடுக்கிக்கொண்டு போகலாம் பாருங்கோ. ஆனால் தற்போது இதிலிருந்து மீளுவதற்கு வழிசொல்வோர்தான் மிக.. மிகக் குறைவு. அரசியல்வாதிகள் நாடு எப்படிப்போனாலும் பறவாயில்லை ஆட்சியைப் பிடித்துவிட்டால் சரி என்ற போக்கு. கடத்தல்காரரும் முதலாளிமாரும் பணம் குவிந்தால் காணும் என்ற போக்கு எழை எளிய, கூலி மக்களைப் பற்றிச் சிந்திப்பார் கிடையாது பாருங்கோ...

போகிற போக்கைப் பார்த்தால் தட்டுப்பாடு, கள்ளச்சந்தை, பதுக்கல் விலைஏற்றம், என எண்ணெய் மாத்திர மல்ல எல்லாப் பொருட்களும் கிடைக் காமல் வறுமை தாண்டவமாடி,கொலை, கொள்ளை, வழிப்பறி போன்றவை மேலும் அதிகரிக்கும் எனக்கணிக்கப்படு கின்றது. இன்னும் என்ன?..என்ன?.. கொடுமைகள் நிழப்போகின்றதோ யார்? அறிவர்..

வெளிநாடுகளின் உதவிகள், கடன்கள் பெருவாரியாகக் கிடைத்து வந்தாலும் இந்த எண்ணெய் மற்றும் பொருட்களின் இறக்குமதி ஒழுங்காகக் கிடைக்குமா என்பது சந்தேகம்தான் பாருங்கோ. வெளிநாடுகளிலிக்கும்

தமிழ் மக்கள் ஆங்காங்கே சிறு.. சிறுஉதவி களைச் செய்துவருகிறார்கள் உண்மை தான். ஆனால் பலர் எங்கே கிடக்கிறது. என்ன நடக்கிறது என்று அலட்சியப்போக்கோடும் பல (புலன்) புலம்பெயர்ந்த வெளிநாட்டுக் குடியுரிமைபெற்ற (ட) தமிழர்களையும் அன்றாடம் இந்த மயிலன் கண்டு வருகின்றான்.

இப்படியான நெருக்கடிகளை அறிந்த இந்த மயிலன் சென்ற வாரம் யாழ்ப்பாணத்திலுள்ள தனது நண்பனுக்கு ரெலிபோன் எடுத்து விசாரித்தான் இந்த எண்ணெய் சங்கதி எப்படி இருக்கிறது என்று கேட்க, அங்கிருந்தவன் சொன்னான் மச்சான் நான் எல்லா இடமும் ஓடி இரண்டு மூன்று மாதத்திற்குரிய பெற்றோல் சேர்த்து பதுக்கி ஒளித்து வைத்திருக்கிறன். எனக்கு ஐந்து கண்டங்களிலுமுள்ள பிள்ளைகள் காசு அனுப்புதுகள்.. என்ன கவலை என்றால் தினமும் குடிக்கும் வெளிநாட்டுச் சரக்குதான் மச்சான் விலை ஏறிவிட்டது. இதுதான் பெரிய கவலை என்றான். மற்றும்படி ஒரு பிரச்சனையும் இல்லை என்றான்.

இந்த அறுவான் சொன்ன சங்கதியைக் கேட்ட எனக்கு மண்டை விறைத்துவிட்டது. நாட்டில ஆஸ்பத்திரிக்காரர், அரசாங்க உத்தி யோகத்தர்கள் மற்றும் ஏழைகள் விவசாயிகள் எண்ணெய் இல்லாமல் தெருத்தெருவாய் போராட, இந்த அறுவான் இப்படி இருக்கிறானே. இவன் மட்டுமல்ல இவனைப்போல ஏராளம்பேர் இப்போ நாட்டில.. அப்ப நாட்டு நிலமை எப்படி மாறும்?..நீங்களும் ஒருக்கா யோசியுங்கோ!..அடுத்தமுறையும் இன்னொரு விசயத்தோட இந்த மயிலன் வருவான்..அப்ப வரட்டே!..

# உலககிண்ண உதைபந்தாட்டப்போட்டி - 2022

FIFA - Fußball Weltmeisterschaft 2022 in Katar

காலம்: 21. Nov. 2022 – 18. Dez. 2022

பங்குபற்றும் நாடுகள் : 32 விளையாட்டுகள் : 64

நடைபெறும் நாடு : Katar, மத்தியகிழக்குநாடான கட்டார்.

விளையாட்டரங்குகள் :

| | |
|---|---|
| Khalifa International Stadium. | Al-Bayt Stadium. |
| Al-Janoub Stadium. | Education City Stadium. |
| Al-Rayyan Stadium. | Al Thumama Stadium. |
| Doha Port Stadium. | Lusail Iconic Stadium |

உலககிண்ண உதைபந்தாட்ட வரலாற்றில் முதன்முறையாக மத்தியகிழக்கு அரபு நாடான கட்டாரில் 2022 கார்த்திகை மார்கழி மாதங்களில் விமரிசையாக நடைபெறவுள்ளது. போட்டியில் பங்குபற்றும் நாடுகளின் விபரங்களை இங்கே காணலாம். 8 குழுக்களாக நடைபெறும் இப்போட்டியில் எந்தநாடு வெற்றிபெறும் என்று பொறுத்திருந்து பார்ப்போம். இந்தப் போட்டிபற்றிய முழு விபரங்களும் எமது அடுத்த இதழில் வெளியாகும்....

FIFA WORLD CUP
Qatar2022

| GROUP A | GROUP B | GROUP C | GROUP D |
|---|---|---|---|
| QATAR | ENGLAND | ARGENTINA | FRANCE |
| ECUADOR | IRAN | SAUDI ARABIA | AUSTRALIA |
| SENEGAL | UNITED STATES | MEXICO | DENMARK |
| NETHERLANDS | WALES | POLAND | TUNISIA |

| GROUP E | GROUP F | GROUP G | GROUP H |
|---|---|---|---|
| SPAIN | BELGIUM | BRAZIL | PORTUGAL |
| COSTA RICA | CANADA | SERBIA | GHANA |
| GERMANY | MOROCCO | SWITZERLAND | URUGUAY |
| JAPAN | CROATIA | CAMEROON | SOUTH KOREA |



# டாக்டர் நர்மதாவின் அறிவுரைகள்...

பிள்ளைகள் அனைவரையும் திருமணம் முடித்துக் கொடுத்த பணியிலிருந்து ஓய்வு பெற்ற மூத்த குடிமக்கள் கீழ்கண்ட பத்து கட்டளைகளை பின்பற்றினால் வாழ்வின் கடைசி பக்கங்கள் மிகவும் சுவாரசியமாகவும் இனிமையாகவும் இருக்கும்.

1- எந்த நிலையிலும் உங்கள் வாழ்வின் கடைசி பகுதியில் உங்க பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ நினைக்காதீர்கள். (உங்கள் சுதந்திரம் அனைத்தும் பறிபோகும்)
2- உங்க பேரக்குழந்தைகளின் மேல் உங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதை மறக்கவேண்டாம். குழந்தை வளர்ப்பில் மகனுக்கோ மகளுக்கோ எவ்வித அறிவுரையும் சொல்லாதீர்கள்.
உங்கள் அறிவுரை மற்றும் அனுபவங்களை அவர்கள் மதிக்க மாட்டார்கள். (மதிக்கத்தெரியாது)
3- விலகியே இருங்கள் உறவுகள் இனிமையா இருக்கும். என் பிள்ளை என்பிள்ளை என பதறாதீர்கள். சிறகு முளைத்த பறவைகள் அவர்கள் என்பதை நினைத்து அமைதியா இருங்கள்.
4- பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை . கையில் பணம் இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் வீட்டில் வளர்க்கப்படும் நாய்க்கு இருக்கும் மதிப்பும் மரியாதையும், உரிமையும் உங்களுக்கு நிச்சயம் இருக்காது. சேமிப்பு மற்றும் உங்கள் சுய சம்பாத்திய சொத்துக்களை உயிருடன் இருக்கும் வரை யாருக்கும் பகிரவேண்டாம். முழுவதும் பகிர்ந்தால் நீங்கள் நிற்க வேண்டியது நடுத்தெருவில்தான்.
5 - காலம் முழுதும் அவர்கள் உயர்வுக்காக பாடுபட்டு பல இழப்புகளை சந்தித்து இருப்பீர்கள் அவற்றை சொல்லி காட்டவேண்டாம் உங்கள் கடமையை செய்தீர்கள் அவ்வளவே.

6 -கூட்டு குடும்ப வாழ்வு சிதைந்துபோன தலைமுறையில் வாழ்கிறோம் என்பதை மறவாதீர்கள் தேவைபட்டால் வருடம் ஒருமுறை சென்று பேரன் பேத்திகளுடன் சந்தோஷமா இருந்து வாருங்க .அங்கே அதிகம் தங்க வேண்டாம்.

7- எந்த நேரத்திலும் உங்கள் மருமகள் முன் உங்கள் மனைவியை - கணவனை விட்டுக்கொடுத்து பேசாதீர்கள் உங்கள் இருவரில் ஒருவரை யார் குறைத்து பேசினாலும் எதிர்குரல் கொடுங்கள். பிள்ளைகள் வீட்டிற்கு சென்றால், கூடவே உங்களுக்குத் தேவையான மருந்து மாத்திரை, எண்ணெய், பவுடர், சீப்பு, சோப், போன்றவற்றை எடுத்து செல்லுங்கள்.

8- அவர்களின் ஆடம்பர வாழ்வை விமர்சிக்கவேண்டாம். சேமிப்பின் அவசியம் பற்றி சொல்லி அவமானபடவேண்டாம்.

அவர்கள் வாழ்வது உங்க வாழ்க்கை போல் போராட்ட வாழ்க்கை இல்லை நவீன கார்போரேட் வாழ்க்கை நீங்கள் 1000 ரூபா பெரிதாக நினைத்தவர்கள் அவர்கள் லட்சங்களை புரட்டி பார்ப்பவர்கள் எனவே சூரியனுக்கு டோர்ச் அடிக்காதீர்கள்.

9- அதிக பாசம் ஆசை வைத்தால் அது மோசம். அவர்கள் குழந்தையை அவர்கள் கவனித்துக் கொள்வார்கள் உங்க அறிவுரைகளை தவிருங்கள்.

10-உங்களை விட அறிவிலும் திறமையிலும் அவர்கள் சிறந்தவர்கள் என்பதை ஏற்று கொள்ளுங்கள். அல்லது நீங்கள் முட்டாள்களாகவே நடியுங்கள். அப்பொழுதுதான் பிழைப்பீர்கள்.

அதிக அறிவுரைகள் இக்கால சந்ததியினருக்கு அறவே பிடிக்காது.நீங்கள் நன்கு படித்திருந்தாலும் நல்ல பதவியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும் அவர்கள் முன் தற்குறிகளே. தலையாட்டும் பொம்மைகளே.


---

## Corona Top Ten.... To 09.07.2022

| நாடு | தொற்று | இறப்பு |
|---|---|---|
| United States | 90,273,079 | 1,045,740 |
| India | 43,604,394 | 525,386 |
| Brazil | 32,833,596 | 673,400 |
| France | 32,115,604 | 150,017 |
| Germany | 29,022,265 | 141,862 |
| United Kingdom | 22,883,995 | 180,718 |
| Italy | 19,259,037 | 168,969 |
| South Korea | 18,491,435 | 24,624 |
| Russia | 18,455,274 | 381,499 |
| Turkey | 15,180,444 | 99,057 |
| Spain | 12,973,611 | 108,730 |



# எலுமிச்சை



அளவுக்கு அதிகமாக எலுமிச்சை சாப்பிட்டால் இந்த பிரச்சினையை ஏற்படுத்துமாம்! ஜாக்கிரதையாக இருங்கள். ஒவ்வொரு வீட்டிலும் எலுமிச்சையின் பங்கு மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. இது உடலின் உள் பகுதியில் உள்ள நோய்களை குணப்படுத்துவதோடு உடலின் மேல் பகுதியையும் பாதுகாப்பாக வைப்பதில் எலுமிச்சைக்கு நிகர் வேறெதுவும் கிடையாது.

இதில் எலுமிச்சையில் கலோரி 24%, புரத சத்து 0.92 கிராம், நார்ச்சத்து 2.4 கிராம், இரும்பு சத்து 0.5 மில்லி கிராம், கால்சியம் 11 மில்லி கிராம், சோடியம் 2 மில்லி கிராம், பொட்டாசியம் 138 மில்லி கிராம், சர்க்கரை 2.5 கிராம், வைட்டமின்கள், மினரல்ஸ் போன்றவை அடங்கியுள்ளன.

இவ்வளவு சத்து நிறைந்த எலுமிச்சையை அதிகளவு எடுத்து கொள்ள கூடாது. இது ஒரு சில பக்கவிளைவுகளை ஏற்படுத்தும். தற்போது அவை என்ன என்பதை தெரிந்து கொள்வோம்.

-அதிகப்படியான எலுமிச்சை சாறு வயிற்றை சீர்குலைக்கும், மேலும் இது செரிமான செயல்முறையையும் குறைக்கும், இது வயிற்று வலியையும் ஏற்படுத்தும்.

-எலுமிச்சை சாற்றில் அதிக அமிலத்தன்மை உள்ளது. எனவே ஒரு எலுமிச்சையில் சாறு அதிகமாக இருக்கும்போது, அது உங்கள் பற்களில் கூச்ச உணர்வை ஏற்படுத்தும். மேலும் இது காலப்போக்கில் பல் சிதைவையும் ஏற்படுத்தும்.

-உங்களுக்கு தோல் காய்தல் இருக்கும் பட்சத்தில், லெமன் வாட்டர் லெமனேட்டை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், அது உங்கள் உடலில் மேலும் அதிக வறட்சியை ஏற்படுத்தும்.

-அதிகப்படியான எலுமிச்சை உங்கள் சிறுநீர்ப்பையை பெரிதாக்கும். எனவே, எலுமிச்சையை அடிக்கடி உட்கொள்ளும் போது நீங்கள் நிறைய தண்ணீர் குடிப்பதையும் உறுதி செய்து கொள்ளவும்.
எலுமிச்சையின் அமிலத்தன்மை, உங்கள் தலைமுடி தொடர்பான சிக்கலை இன்னும் மோசமாக்கலாம்....

................................................................................................................................

# முந்திரி

-வெறும் 5 உலர்திராட்சை செய்யும் அற்புதம்: தூங்கும் முன்பு இப்படி சாப்பிட்டாலே போதும்
-உலர் திராட்சையானது பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. தினமும் உலர்ந்த திராட்சை சாப்பிட்டால் மலசிக்கல் பிரச்சினை தீரும்.
-உலர் திராட்சையை சர்க்கரை நோயாளிகளும் தாராளமாக சாப்பிடலாம். ஏனெனில் இதில் நார்ச்சத்தும் இருப்பதால், உடலில் உள்ள கொழுப்பைக் குறைக்கவும் இரத்தத்தில் உள்ள சர்க்கரையைக் கட்டுக்குள் வைக்கவும் திராட்சை உதவுகிறது.
-உலர் திராட்சையில் தாமிர சத்துக்கள் உள்ளதால் ரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும். இதை சாப்பிடுவதால் எலும்பு மஜ்ஜைகள் வலுப்பெறும்.
-தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இதய துடிப்பு சீராகும். தினமும் படுக்கச் செல்வதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு 5 காய்ந்த திராட்சையை பாலில் போட்டு காய்ச்சியோ அல்லது அப்படியே சாப்பிட்டு வந்தால் சுகமான தூக்கம் வரும்.
-இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு குறைவாக இருப்பவர்கள் உலர் திராட்சையை உட்க்கொண்டால் இரத்தசோகை குணமடையும்.





# நடப்பதால் ஆயுள் நீடிக்கும்!.

Keep your Legs Active and Strong !!!

முதுமை பாதத்திலிருந்து மேல் நோக்கித் தொடங்குகிறது! உங்கள் கால்களை செயல்பாட்டிலும் வலுவாக வைத்திருங்கள் !! தினசரி வயதாகிக்கொண்டே இருக்கும்போது, நம் கால்கள் எப்போதும் சுறுசுறுப்பாகவும் வலுவாகவும் இருக்க வேண்டும். நாம் தொடர்ந்து வயதாகும்போது, நம் தலைமுடி நரைத்து (அல்லது) சருமம் தளர்ந்து (அல்லது) முகத்தில் சுருக்கங்கள் வருவதற்கு நாம் பயப்படக்கூடாது.

நீண்ட ஆயுளின் அறிகுறிகளில், பிரபலமான அமெரிக்க பத்திரிகை "வருமுன் தடுப்பு" (prevention) மூலம் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு, வலுவான கால் தசைகள் அனைத்திற்கும் மேலே மிக முக்கியமான மற்றும் இன்றியமையாத ஒன்றாக பட்டியலிடப்பட்டுள்ளன. தயவுசெய்து தினமும் நடந்து செல்லுங்கள்.உங்கள் கால்களை இரண்டு வாரங்களுக்கு அசைக்கவில்லை என்றால், உங்கள் உண்மையான கால் வலிமை 10 வருடங்கள் குறையும். நடந்து செல்லுங்கள்..

டென்மார்க்கில் உள்ள கோபன்ஹேகன் பல்கலைக்கழகத்தின் ஒரு ஆய்வு, முதியவர்கள் மற்றும் இளைஞர்கள், இரண்டு வாரங்கள் செயலற்ற நிலையில் இருந்தால் கால் தசை வலிமை மூன்றில் ஒரு பங்கு பலவீனமடையலாம் என்கிறது. இது 20-30 வருடங்கள் முதுமையடைவதற்கு சமம் !! எனவே நடந்து செல்லுங்கள்.. கால் தசைகள் பலவீனமடைவதால், நாம் மறுவாழ்வு மற்றும் உடற்பயிற்சிகள் செய்தாலும், மீட்க நீண்டகாலம் பிடிக்கும். நடவுங்கள். அதனால், நடைபயிற்சி போன்ற வழக்கமான உடற்பயிற்சி மிகவும் முக்கியமானது.

நமது முழு உடல் எடை சுமையை கால்களே தாங்குகிறது. கால்கள் ஒரு வகையான தூண்கள் , மனித உடலின் முழு எடையையும் தாங்கும். தினமும் நடைபயிற்சி... சுவாரஸ்யமாக, ஒரு நபரின் எலும்புகளில் 50% தசைகளில் 50% இரண்டு கால்களிலும் உள்ளன. நடந்து செல்லுங்கள்... மனித உடலின் மிகப்பெரிய மற்றும் வலுவான மூட்டுகள் மற்றும் எலும்புகளும் கால்களில் உள்ளன.

10,000 அடிகள் / நாள்வலுவான எலும்புகள், வலுவான தசைகள் மற்றும் நெகிழ்வான மூட்டுகள் உடலின் இரும்பு முக்கோணத்தை உருவாக்கி மனித உடலைச் சுமக்கிறது. ஒருவரின் வாழ்க்கையில் 70% மனிதசெயல்பாடு மற்றும் ஆற்றல் எரித்தல்(burning the calories) இரண்டு கால்களால் செய்யப்படுகிறது. இது உங்களுக்கு தெரியுமா?

ஒரு நபர் இளமையாக இருக்கும்போது, அவருடைய தொடைகள் 800 கிலோ எடையுள்ள ஒரு சிறிய காரைத் தூக்கும் வலிமை கொண்டவை! கால் உடல் நடமாட்டத்தின்(locomotion) மையம் இரண்டு கால்களும் சேர்ந்து மனித உடலின் 50% நரம்புகளையும், 50% இரத்தக் குழாய்களையும், 50% இரத்தத்தையும் அவற்றின் வழியே பாய்கிறது. இது உடலை இணைக்கும் மிகப்பெரிய சுழற்சி நெட்வொர்க். எனவே தினமும் நடந்து செல்லுங்கள்...

கால்கள் மட்டும் ஆரோக்கியமாக இருக்கும்போது, இரத்த ஓட்டத்தின் வளமையான மின்னோட்டம் சீராக செல்லும். எனவே வலுவான கால் தசைகள் உள்ளவர்கள் கண்டிப்பாக வலுவான இதயத்தைக் கொண்டிருப்பார்கள். ஒருவரது வயது, பாதத்தில் இருந்து மேல் நோக்கித் தொடங்குகிறது. ஒரு நபர் இளமையில் இருப்பது போலல்லாமல் வயதாகும்போது, மூளை மற்றும் கால்களுக்கு இடையே நடைபெறும் ஆணைகள் பரிமாற்றத்தின் துல்லியம் மற்றும் வேகம் குறைகிறது. தயவுசெய்து நடந்து செல்லுங்கள்...

கூடுதலாக, எலும்பின் உரமான கால்சியம் என்று அழைக்கப்படுவது விரைவில் அல்லது பின்னர் காலப்போக்கில் இழக்கப்படும், இதனால் வயதானவர்கள் எலும்பு முறிவுகளுக்கு ஆளாகிறார்கள். ஆகவே நடவுங்கள். வயதானவர்களில் எலும்பு முறிவுகள் தொடர்ச்சியான சிக்கல்களைத் தூண்டும், குறிப்பாக மூளை த்ரோம்போசிஸ் போன்ற ஆபத்தான நோய்கள். பொதுவாக வயதான நோயாளிகளில் 15%, தொடை எலும்பு முறிவு ஏற்பட்ட ஒரு வருடத்திற்குள் இறந்துவிடுவார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? தவறாமல் தினமும் நடந்து செல்லுங்கள்...

கால்களுக்கு உடற்பயிற்சி செய்வது, 60 வயதிற்கு பிறகும் கூட தாமதமல்ல. நம் கால்கள் படிப்படியாக வயதாகிவிட்டாலும், நம் கால்களுக்கு உடற்பயிற்சி செய்வது வாழ்நாள் முழுவதும் வேலை. 10,000 அடிகள் நடக்க எப்பொழுதும் கால்களை அடிக்கடி வலுப்படுத்துவதன் மூலம், ஒருவர் மேலும் வயதானதை தடுக்கலாம் அல்லது குறைக்கலாம்.

365 நாட்கள் நடைபயிற்சி உங்கள் கால்களுக்கு போதுமான உடற்பயிற்சி கிடைப்பதற்கும், உங்கள் கால் தசைகள் ஆரோக்கியமாக இருப்பதை உறுதி செய்வதற்கும் தயவுசெய்து தினமும் குறைந்தது 30-40 நிமிடங்கள் நடக்க வேண்டும். இந்த முக்கியமான தகவலை உங்கள் 40 வயது கடந்த நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் பகிர வேண்டும், ஏனெனில் ஒவ்வொருவரும் தினமும் வயதாகி வருகிறார்கள் நல்லதை யார்சொன்னாலும் கேட்டு நடவுங்கள்!.... நடவுங்கள்!.. நடவுங்கள்!..

# தாயகத்தின் அரசியல் பொருளாதார நெருக்கடி-1

-திரேஸ் மரியதாஸ் - லண்டன் -

"ஆட்சியாளரின் அறிவுக் கூர்மையால் நகர்கட்டியெழுப்பப் படும்"தாயகத்திலுள்ள அனைத்து அரசியல் ஆன்மீகத் தலைவர்களின் தூரநோக்கற்ற சிந்தனைகளும் ஒற்றுமையின்மையும் அர்ப்பணிப் பின்மையுமே அரசியல்ப்பொருளா தார இன்னலெனும் அதலபாதாளத் திற்க்குள் ஓட்டு மொத்த மக்களையும் மீளமுடியாமல்வீழுத்தி யுள்ளது நிதர்சனம்

அரசியல்த்தலைவர்கள் ஒவ்வொருவரையும் மக்கள்தெரிந் தார்கள் அவர்களுடையஒவ்வொரு வாக்குந்தான்அரசியல்வாதிகளுடைய சொகுசு வாகனங்களும்உல்லாச வாழ்க்கையும் ஆனால் எத்தனை கிராமங்களுக்கு ஒவ்வொருவரும் சென்று ஆகக் குறைந்தது நல மாவது விசாரித்தார்களா!

கோவித்தொன்றும் எம்மை முடக்குமளவுக்குகுறிப்பாகத் தமிழர் வாழப்பழகவில்லை எத்தனை வருடப்போர் நாம் ஒருவரும் பட்டினிச் சாவால் இறக்கவில்லையே!அன்று பொருளாதாரத்தடைபோக்குவரத்துத் தடை என்று எத்தனை "தடா"நாம் மனம்சோரவில்லை நிமிர்ந்து நின்றோமே! இன்று!?? செயல்ப் பாட்டில்மீண்டும் இறங்குவோம்

ஆரோக்கியத்தோடு அனைவரும் அவரவர் வீட்டைத் தோட்ட மாக்குவோம்வசந்தமான வாழ்வை வாழ்வாக்கலாம்மக்களே நீங்கள் ஊர் அரசியல் ஆன்மீகத்தலைவர்களை அறிந்தீர்களா!ஆலயத்திற்கு எவ்வளவு பணத்தைக் காணிக் கையாக ஒவ்வொருவரும் கொடுக் கிறீர்கள் வறுமை நோய் போன்ற பிரச்சனைகளுக்கு அவர்களை அணுகினோமா? பூசையோடு கண்ணீரோடு கடந்துபோகிறீர்கள் வாடிக்கையாகவே!

நாங்கள் மாறாதவரை கேள்விகேட்காதவரை எதுவுமே மாறப்போவதில்லை.அப்பப்ப வீதிக்கு வராமல்அவர்களின் வீட்டுவாசலை அன்றாடந் தட்டுங்கள், ஊடனமுள்ள மனக்கண்களைத் திறக்க உரத்துக் குரல்கொடுப்போம்..

மனிதநலனைக் கருத்தில் கொண்டுசெயல்ப்படாமல் மனச் சாட்சிக்குப் பயப்படாமல் மனிதர் களை வெறுக் கக்கூடாதெனப் பலர் கேள்விகள் கேட்க மறந்து எங்களைத் தொலைத்தவர்களாய் அடுத்தவர்களை மரணிக்க வைத்து வாழ்கின்றோமா!ஆபிரகாம் லிங்கன் தேர்தலில் தோற்றுத் தோற்று வெல்லவே வேண்டுமென தொடர்ந்து முயற்சிசெய்து ஜெயித்தாராம் காரணம் அந்த மக்களுக்காக உழைக்கவேண்டு மென்ற அர்ப் பணிப்பு இதை இன்றைய சூழ் நிலையில் நிலை நிறுத்தி அனைவரும்சிந்திக்க என்மனம் ஏங்குகிறது தூர நோக்குடன் தானே முன்பு நாம் வாழ்ந்தோம்.

எங்கள் வீட்டில் மா பலாத் தென்னை பனை வாழை முருங்கை கொய்யா என்று பயிரிட்டோமா !நெற்செய்கை செய்கிறோமா!மாடு ஆடு கோழிகளை வளர்த்தோமா?அதனுடைய பசளையை மரங்களுடைய இலைகுளைகளைப் பசளையாக்குகின்றோமா?

பதநீர் பனங்கட்டி பனாட்டுப் பழையசோறு உண் கின் றீர் களா ?சீனி இல்லை என்றாலென்னபனங்கட்டியைவிட ஆரோக்கியமான இனிப்பை எதுவும் கொடுத்துவிட முடியுமா? இன்றுபனங் கொட்டைப் பாத்தி போட்டுப் புழுக் கொடியல் ஒடியல் ஏன் ஓடியல்ப்பிட்டு உண்ணுவதுபோடுவது வெகுவாகக் குறைந்துவிட்டதை நான் என்காதுபடக் கேள்விப்பட்டேன்.பனங்கொட்டைகளை தேடுபவர்கள் இல்லையாமே! வீணாகப் போகிறதாமே!

எரிவாயு இல்லை எனஏங்குகிறோம் மரங்களை வெட்டியது யார்! மாடிக் கட்டுடங்களைக் கட்டியது யார்? விறகு பணங்கொடுத்தும் வாங்க முடியாத நிலையை உருவாக வைத்தது யார்! எறும்பைப் பார்ப்போம் கோடைகாலத்தில் உணவைச் சேர்த்துவைக்கும் அறுவடை காலத்தில் தானியங்களைச்சேகரிக்கும் "நன்றே செய் அதை இன்றேசெய்" கிராமங்கிராமமாய் இந்து கிறிஸ்தவ ஆன்மீகத்தலைவர்கள் பூசைகளும் திருப்பலிகளும் நடாத்து கின்றார்கள், இதற்குள்ளே இந்தமக்கள் ஒவ்வொரு வருடனும் அந்நியோன்ய உறவு இணைப்பு இருக்கின்றதா!அரசியல் ஆன்மீகத் தலைவர்கள்மக்களின் தேவைகளை அறிந்து அவரகளுக்கான சுய தொழிகளை மேம் படுத்த முடியாதா! தலைவர்கள்மக்கள் பிரதி நிதிகளைத் தெரிவு செய்து மேற்ப்பார்வைசெய்தாலே போதும் , மக்கள் நிறைவோடு வாழ்வர்தங்கள்காலில் நிற்ப்பார்கள்

இன்று புலம்பெயர் மக்கள் எவ்வளோ உதவியைத் தாயகத் திற்குச் செய்தும் தேவையில் உள்ளோரேஅதிகம் அதனை நெறிப்படுத்த அரசியல் வாதிகளை விட்டாலும் ஆன்மீகத் தலைவர்கள் நினைத்தால் ஒழுங் கமைத்துஒன்றுகூட்டமுடியாதா!இது கவலையும் வேதனையுமாக ஆன் மீகமும் அரசியலை விஞ்சியதாய்ப் போயிற்றே என்ற கோபமாயும் உள்ளதேஆன்மீகத்தை வளர்க்க முதலில் உடலின் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமே!உண்ண உணவில்லை உள்ளத்தைச் சீராக்கி இறைவனைக்காண வைப்பது யதார்த்தமா!

மக்களேவிழிப்படையுங்கள் தலைவர்களே மக்களின் நலனில் அக்கறையோடு செயல்ப்பட திட சங்கற்பம் பூணுங்கள் வாழுவது அறுபதோ எழுபதோ !ஏனிந்த அச மந்தப்போக்கு அசட்டை!தலை வர்களே இல்லாத ஒரு புதிய பூமி வேண்டுமெனவிழித்தெழுவோம் புதுவிதி வரைவோம்நம்மைநாமே ஆளுவோம்"கடந்தவை நல்ல வையாக நடக்காவிடினும்கடக் கின்றவை நன்றாக நடக்க உழைப் போம்"கடக்க இருப்பவை நன்றாக கடக்க சுயநல முடக்கத்தை உடைப்போம்!..

# தாயக அரசியல் பொருளாதார நெருக்கடி - 2

கொங்கா ஸ்ரான்லி

அரசியல் என்று வந்தாலே எல்லாம் வியாபாரம் தான்.அதாவது மக்களாட்சி என்று கூறிக் கொண்டு மக்களைச் சுறண்டுவது தான். மக்கள் வாக்குகளைப் பெற்று,பதவி பெறுகிறார்கள். அந்தப் பதவியினால் அவர்களுக்குப் பெரிய லாபம் கிடைக்கிறது. வசதியான பங்களா, வாகன வசதி, இப்படிப் பலவிதமான ஆடம்பர வாழ்க்கையில் நீந்தும் அவர்கள் மக்களை பற்றியோ அன்றேல் நாட்டைப் பற்றியோ சிந்திப்பதில்லை.

எப்படி பணம் ஈட்டலாம் என்று நினைப்பார்களே தவிர மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று நினையாதலால் மக்கள் பஞ்ச நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அதன் எதிரொலிதான் இப்போது நடக்கும் போராட்டங்கள். அதன் பிரகாரம் ராஜபக்ஷ பதவி துறந்தார். இருந்தாலும் இது ஒரு கண்துடைப்புத்தான்.

ஆனால் இங்கே ஒருசிறப்பு இந்தப் போராட்டத்தில் தமிழ், முஸ்லீம்.சிங்கள மக்கள்இணைந்து செயல்பட்டது. நாம் இணைந்து வாழ்வோம் என முழக்கமிட்டது. இலங்கை எவ்வளவு வளம் பொருந்திய நாடு. இந்தநாட்டைச் சரியாகக் கொண்டு சென்றால் ஏன் மற்றவர்களிடம் கையேந்தும் நிலை வரவேண்டும். நம் நாட்டில் நல்ல நிலவளம், நீர்வளம் உண்டு.

அதில் விளையும் பொருட்கள் அதனால் மக்களின் தேவையை பூர்த்தியாக்கலாம். பெரும் ஆதாயம் காணலாம்,கஷ்டப்படதேவையில்லை. ஆனால் அரசாங்கம் அப்படி செய்யவில்லை. வெளிநாட்டில் கடன்பட்டு தாமது சொகுசு வாழ்க்கை, அவர்களுடைய கல்லாப்பெட்டி நிறைந்தது. கடன் பட்டவர்கள் அந்தப் பணத்தை என்ன செய்தார்கள். மக்கள் இதைப் பற்றி யோசிக்கத்தொடங்கினர்.

கடன் தொல்லையால் நாடே இழக்கும் நிலை வந்து விட்டது என விமர்சனம் வந்தது. அதனால் தமிழரிடம் உதவி கேட்கிறர்கள். எந்தத் தமிழரை ஊதாசீனம் செய்து சிறுபான்மையாக்கி விட்டு தமிழரிடமே கடன் கேட்கிறார்கள் என்றால் இவர்களுக்கு வெட்கமே இல்லையா . சரி இவர்கள் இப்படி இருக்கட்டும் அவர்களுக்கு அதைப்பற்றி கவலையும் இல்லை கஷ்டமும் இல்லை. ஆனால் பாமர மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறர்கள். ஒன்று அண்மையில் கொரோனாவின் பாதிப்பு தீரவில்லை. அதற்குள் பொருளாதார நெருக்கடி வந்து மக்களைப் பஞ்சத்தில் தள்ளிவிட்டது.

எரிபொருள் தட்டுப்பாடு. அரிசி முதற் கொண்டு எல்லாப் பொருட்களும் விலையேறி விட்டது. பணம் உள்ளவர்கள் அதை வாங்கலாம். ஆனால் அன்றாடம் காய்ச்சிகள் எப்படி வாங்க முடியும். அரிசி கூட ஒரு கிலோ ஆயிரம், ஆயிரத்துஇருநூறு ரூபாயெனில் என்ன செய்ய முடியும். ஒரு நேரம் கஞ்சி குடிக்கும் ஏழைகள் என்னசெய்யமுடியும்.

சரி வடக்கு கிழக்கில் எரிவாயு இல்லை என்றால் விறகால் சமைக்கின்றார்கள். ஆனால் கொழும்பு பகுதியில் என்ன செய்வது. இதெல்லாம் சிந்திக்க வேண்டிய விடயம். மக்கள் இதனால் ஏமாற்றம் அடைந்த நிலையில் வெம்பி எழுவது சகஜம் தானே. எரிபொருள் இல்லாத காரணத்தால் போக்குவரத்து மிகவும் நெருக்கடியை சந்தித்துள்ளது. இதனால் மக்கள் எவ்வளவு துன்பப்படுகிறார்கள்.

மக்களிடம் கேட்டால் எல்லாம் விலையேறிவிட்டது. அன்றாட வாழ்க்கையே அவல நிலையாகிவிட்டது எனப் புலம்புகின்றனர்.வெளிநாட்டில் சொந்தம் உள்ளவர்கள் அனுப்பும் காசில் அவர்களது உறவுகள் கஷ்டமின்றி வாழலாம். ஆனால் வேலை வாய்ப்பு இலாத மக்கள் என் செய்வர்.

எரிபொருள் தட்டுப்பாட்டால் போக்குவரத்துத் தடையாக இருக்கிறது. அதனால் தூரப்பாடசாலை செல்லும் ஆசிரியர்கள் 3 நாள் தான் போகிறார்கள். அப்படி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் மாணவர்களின் நிலை யோசிக்கவேண்டியுள்ளது. முச்சக்கர வண்டிகள் கூட தூரம் அதிகமில்லை என்றாலும் பயணக்கட்டணம் கூட்டி விட்டால் உழைக்கும் பணம் அதற்கே செலவு என்றால் வாழ்க்கை செலவுக்கு எங்கே போவது.

ஆனால் அரசியல் வாதிகளோ தமது பிரச்சனைகளுக்குள் இருக்க மக்கள் என்ன செய்வது வெளிநாடுகள் உதவி செய்கிறோம் என்கிறது,இல்லை என்கிறது. இதன் அர்த்தம் தானென்னே! பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்படுவது பொதுமக்கள்தான். இந்த நெருக்கடி தீர்ப்பதற்கு அரசாங்கம் என்ன செய்யப் போகின்றார்கள்.

பதில் தெரியாத நிலையில் ,தினசரி சொல்லும் செய்திகள் இதோ அங்கிருந்து உதவி இங்கிருந்து உதவி. ஆனாலும் ஒன்றுமில்லை,ஏதோ இந்திய சில உதவி செய்கிறதாம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட சேவை களின் கட்டணம் கடுமையாக உயர்வடைந்துள்ளன. இந்த நிலையில் அத்தியாவசியப் பொருட்களுக்குக்கான தட்டுப்பாடும் பாரிய அளவில் நாட்டில் காணப்படுவதுடன் மருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் பல உயிர்கள் பலியாகும் நிலை ஏற்பட்டுள்ளது

எப்போது பஞ்சம் தீரும் மக்கள் நிம்மதியாக வாழ்வது என்ற கேள்வியுடன்....

# இலங்கைச் செய்திகள் சில...

-கடந்த 9.5.2022ல் இலங்கையில் இடம்பெற்ற அரசுக்கெதிரான போராட்டங்களில் 9 பேர் பலி. 88 வாகனங்கள், 40 பஸ்வண்டிகள், 250 மோட்டர் சைக்கிள்கள் 64 வீடுகள் தீயிடப்பட்டன. 74 எம் பிக்களின் சொத்துக்கள் எரிப்பு, 400 பேர்வரை காயம். 2.000 பேர்வரை கைது சுமார் 2.000 கோடி ரூபா இழப்பு.

-நாட்டில் 2021ம் ஆண்டில் 410 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம். தற்போது இலங்கையில் 3.700 நோயாளிகள் காணப்படுவதாக சுகாதாரப் பகுதியினர் அதரிவித்துள்ளனர்.

-தற்போது இந்தியாவில் இலங்கை அகதிகளாக 108 முகாம்களில் சுமார் 60.000 பேரும் வெளியே சுமார் 30.000 பேரும் வசிக்கிறார்கள்.

-இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு 2021ல் 4.170 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாம்.

-நாட்டில் பல்வேறு காரணங்களால் 2021ல் ஆண்கள் 2.632, பெண்கள் 647 மொத்தம் 3.279 பேர் தற்கொலை செய்தனர் என பொலிசார் அறிவிப்பு.

-நாட்டில் நிலவும் அசாதாரண நிலைமைகளால் 2021ல் கல்விபயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 33.000 பேரால் வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த வருடம் பாடசாலைகளில் கல்வி பயின்ற மாணவர்களின் தொகை 42.38.760.

-2021ல் வேலைவாய்ப்புக்காக 1.21.795 பேர் வெளிநாடு சென்றுள்ளனர். இந்த வருடம் கடந்த 4 மாதங்களில் மட்டும் ஒரு லட்சம்பேர்வரை வெளிநாடுகளுக்குச் சென்றனர். அந்தளவுக்கு நாட்டின் பொருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்துள்ளது.

-வெசாக் பண்டிகையையொட்டி நாடுமுழுவதிலுமுள்ள சிறைக்கைதிகளில் 244 பேருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார்.

-உலகின் முதல் பெண் பிரதம் கொண்டநாடு சனத்தொகையில் 51 வீதம் பெண்கள் அப்படிப்பட்ட நாட்டில் பெண்கள் எம் பிகளாக அரசியலில் 5 வீதமாகத்தான் காணப்படுகிறார்கள்.

-இலங்கையின் வறுமை, பொருளாதார மீட்சிக்காக தமிழக அரசு 560 கோடி பெறுமதியான அரிசி, உபஉணவுப்பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் என அன்பளிப்பா வழங்கியுள்ளது. பல் வேறு மாவட்டங்களுக்கு இவை பகிர்ந்தளிக்கப்பட்டது.

-க.பொ.த சாதரணப் பரீட்சைகள் இலங்கையில் 4.000 நிலையங்களில் நடைபெற்றது. 5.17.496 மாணவர்கள் பரீட்சை எழுதியுள்ளனர்.

-அவுஸ்திரேலிய பாராளுமன்றத் தேர்தலில் இலங்கையைப் பூர்வீகமாகக்கொண்ட இரண்டு பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். (மிச்சேலா ஆனந்தராசா, ராஞ்ச் பெரேரா)

-வட-கிழக்கில் காணாமல்போனோரைத் தேடி அலைந்து போராட்டம் நடாத்திவருவோரில் இதுவரை 115 பேர் உயிழந்துள்ளனர்.

-புகைத்தலால் நாள்தோறும் சராசரியாக 55 பேர்வரை உயிரிழப்பதாகவும் வருடத்திற்கு சுமார் 20.000 பேர்வரை இறக்கிறார்கள் என சுகாதாரப்பகுதியினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.
-கொழும்பு நகரப்புறம் முழுவதும் ஒருநாள் ஏற்படும் போக்குவரத்து நெரிச்சலால் 400 - 500 மில்லியன் ரூபாவரை நட்டம் ஏற்படுவதாக போக்குவரத்துப் பொலிசார் அறிவித்துள்ளனர்.
-சிகரட், மதுபானம் தயாரிப்பதற்கு வருடாந்தம் 600 பில்லியன் மரங்கள் வெட்டப்படுவதாகவும் இதனால் இலங்கையின் சுற்றுச்சூழல் வெகுவாகப் பாதிக்கப்படுவதாகவும் வெப்பவளிமட்டல அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
-நாட்டின் கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் சென்ற ஆண்டு இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 3.4 பில்லியன்ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.
-நாட்டின் பொருளாதார வீழ்ச்சியால் சுமார் 3500 பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன.
-பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊழியர்களுக்காக உணவு, சிற்றுண்டி, குடிதண்ணீர், மின்சாரம், தொலைபேசி, நிர்வாகச் செலவாக வருடம் 35 கோடி செலவிடப்படுவதாக பாராளுமன்ற நிர்வாகப்பிரிவு தெரிவித்துள்ளது.
-நாட்டின் பொருளாதார நெருக்கடியால் ஒருவருட காலத்திற்குச் சம்பளம் பெறாமலே கடமையாற்ற அமைச்சர்கள் முடிவு எடுத்துள்ளனர்.
-நாட்டின் பொருளாதார நெருக்கடியால் 3 லட்சம் அரச உத்தியோகத்தர்களை குறைக்கும் நிலை தோன்றியுள்ளது. தற்போது 12 லட்சம் அரச சேவையாளர்கள் கடமை புரிகின்றனர்.
-கடந்த 66 வருடங்களில் 45 எம் பிக்கள் படுகொலை செய்யப்பட்டனர். பண்டாரநாயக்கா முதல் 2022ல் இறுதியாகக் கொல்லப்பட்ட அமரகீர்த்தி அத்துகொறளை வரை இந்தப் படுகொலைகள் நிகழ்ந்துள்ளன.
-நாட்டின் பொருளாதாரம் எரிபொருள் நெருக்கடியால் 3.500 பேக்கரிகள், 70 வீதமான எரிபொருள் நிலையங்கள் மூடப்பட்டன. எரிபொருள் இறக்குமதிக்கு அரசாங்கம் தனியாருக்கு அனுமதி வழங்கியுள்ளது.
-பொருளாதார நெருக்கடியால் 10 குடும்பங்களில் 7 குடும்பங்கள் தாம் அன்றாடம் உட்கொள்ளும் உணவுகளின் அளவைக் குறைத்துவிட்டார்கள் என ஐ.நா. சபையின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.
-1.7.2022 தொடக்கம் மீண்டும் பலாலி விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
-சட்டவிரோதமாகக் கடல்வழியாக அவுஸ்திரேலியா செல்லமுற்பட்ட இருவேறு இடங்களில் 54 பேரும் 47 பேரும் என இலங்கைக் கடற்படையினரால் கைது.
-இலங்கைச் சிறார்களுக்கு உணவளிக்கும் நடவடிக்கைகளுக்காக 20 மில்லியன் டொலர்களை மேலதிகமாக வழங்க அமெரிக்க ஜனாதிபதி ஒப்புதல் அளித்துள்ளார். இத்தகவலை யேர்மனியில் நடைபெற்ற G 7 நாடுகளின் தலைவர்கள் மாகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

# உலகச் செய்திகள் சில...

-பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் மைக்ரோன் வெற்றிபெற்றார்.
-ஒவ்வொரு ஆண்டும் மலேரியா நோயால் உலகில் 24 கோடி பேர் பாதிப்பு, 6.27 லட்சம்பேர் மரிணிப்பு என உலக சுகாதார தாபனம் அறிவித்துள்ளது.
-உக்ரைன் - ரஷ்ஷிய மோதலால் உலகில் 2024 வரை உணவுப்பொருள் தட்டுப்பாடு, விலைஏற்றம் நிலவும் என உலக வங்கி எச்சரித்துள்ளது.
-உக்ரைன் - ரஷ்ஷிய மோதலால் 30-4-2022 வரை 1 கோடியே 40 லட்சம் பேர் உக்ரைனைவிட்டு வெளியேறியுள்ளனர். 2 லட்சம் சிறுவர்கள் ரஷ்ஷியாவுக்குள் இடம்பெயர்ந்துள்ளனர். 400 சிறுவர்கள்வரை பலியாகியுள்ளனர்.
-மே 3ம் திகதி உலக பத்திரிகை சுதந்திர தினமாகும். கோவிட் தாக்கத்தால் சுமார் 300 ஊடகவியலாளர்கள் உயிரிழந்ததாக அந்தத்தாபனம் அறிவித்துள்ளது.
-தமிழகத்தில் இன்னும் 445 கிராமங்களில் சாதியப்பாகுபாடுகள் கடுமையாக நிலவுவதாக சமூக அமைப்பு ஒன்றின் புள்ளிவிபரங்கள் தெரிவித்தது..
-கடந்த 6 ஆண்டுகளில் 9 லட்சம் இந்தியர்கள் தமது குடியுரிமையை இழந்து வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றுள்ளனர். 106 நாடுகளில் இவர்கள் இந்த உரிமையைப் பெற்றுள்ளனர். அமெரிக்கா, கனடா, அவுஸ்த்திரேலியா, இங்கிலாந்து ஆகியநாடுகளில்தான் மிக அதிகம்பேர் குடியுரிமை பெற்றுள்ளனர்.
-வடகொரியாவில் நிலவிய மர்மக் காய்ச்சலால் 4 லட்சம்பேர் பாதிப்பு.
-உலகக் கொரோனா, ரஷ்ஷியா-உக்ரைன் நெருக்கடியால் உலகில் 69 நாடுகள் கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருப்பதாக உலகவங்கி அறிவித்துள்ளது.
-அவுஸ்திரேலிய பொதுத்தேர்தலில் தற்போதயை பிரதமர் மொரிசன் தோல்வி. தொழிற்கட்சித்தலைவர் அந்தோனி அல்பனிஸ் வெற்றி 31வது பிரதமராகத்தெரிவு.
-அமெரிக்காவில் 18 வயதுப் பள்ளி மாணவனால் 19 மாணவர்கள் 2 ஆசிரியர்கள் சுட்டுக்கொலை. இப்படியான சம்பவங்கள் அதிகரிப்பு.
-உலக சுகாதார அமைப்பின் தலைவராக 2வது தடவையாக எந்தியோப்பிய முன்னாள் அமைச்சர் டெட்ரோஸ் மீண்டும் தெரிவானார்.
-ஆப்கானிஸ்தானில் என்றுமில்லாதவாறு உணவுப்பஞ்சம். 5 வயதிற்குட்பட்ட சுமார் 11 லட்சம் குழந்தைகள் பாதிப்பு..
-நைஜீரியாவில் தேவாலயம் ஒன்றில் உணவு வழங்கலில் ஏற்பட்ட சனநெரிச்சலில் சிக்குண்டு 40 பேர்வரை இறப்பு.
-பிறேசிலில் கடும்மழை, மண்சரிவு அனர்த்தம் 130 பேர்வரை பலி.
-இங்கிலாந்து, கனடா,ஸ்பெயின், அமெரிக்கா உள்ளிட்ட 27 நாடுகளில் குரங்கு அம்மைநோய் பரவல் 100 பேர்வரை பலி.1000 பேர்வரை நோய் பரவல்.

31.5.22வரை ரஷ்ஷியாவின் கட்டுப்பாட்டில் 20 வீத உக்ரையின் நிலப்பகுதி வந்துள்ளதாம். 4கோடி 30 லட்சம் சனத்தொகையில் நாட்டைவிட்டு வெளியேறியவர்களைவிட தற்போது சனத்தொகை 3 கோடி 70 லட்சம் பேராக உள்ளதாம். போலந்து நாட்டில்தான் கூடுதலான உக்ரையினர் தஞ்சம்.

-பங்களாதேஷில் கொள்கலன் கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தால் 50 பேர் பலி 450 பேர்வரை காயம்.

-மத்திய சீனாவில் கடும்மழை வெள்ளம் 3 லட்சம்பேர் பாதிப்பு, இடம்பெயர்வு 3.000 வீடுகள் அழிவு.

-இந்திய குடியரசுத் தலைவர் தேர்தல் 18.7.2022 அன்று நடைபெறும். தற்போதய தலைவர் ராம்நாத் கோவிந்தனின் பதவிக்காலம் 24.07.2022 முடிவு.

-தொடரும் ரஷ்ஷியா-உக்ரைன் நெருக்கடியால் உலக நாடுகளில் பசி, பட்டினி நெருக்கடி. இதனால் உலகில் இடம்பெயருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்போது உலகில் சுமார் 100 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என ஐ.நா.சபை அகதிகள் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

-கொரோனா மற்றும் பொருளாதாரம் மற்றும் பல் வேறு நெருக்கடிகளால் தந்போது உலகில் சுமார் 100 கோடி மக்களுக்கு மன அழுத்தம் காணப்படுவதாக ஐ.நா. சபையின் சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

-போர், வன்முறை, காலநிலை மாற்றம் போன்ற காரணிகளால் 2021வரை உலகில் 3.6 கோடி சிறுவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்று ஐ.நா. சபையின் சிறுவர் அமைப்பு அறிவித்துள்ளது.

-பங்களாதேஷ் நாட்டில் கடும் மழை வெள்ளப் பெருக்கு 200 பேர்வரை பலி. 2 மில்லியன் மக்கள் பாதிப்பு.

-எந்தியோப்பியாவில் இனக்குழுவினரிடையே தாக்குதல்கள் 230 பேர் பலி. ஆபிக்கா நாடுகளின் சனத்தொகையில் இந்தநாடு 2வது இடத்தில் உள்ளது.

-கொலம்பியா நாட்டின் முன்னாள் கொரில்லாப் போராளியான குஸ்டாவோ பெட்ரோ அந்த நாட்டின் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார். தற்போது தென்னமெரிக்க நாடுகளின் முதல் இடதுசாரித்தலைவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

-ஆப்கானிஸ்தானில் 6.1 அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 1000 பேர்வரை இறப்பு. 250 பேர்வரை காயம். பசி, பட்டினி, வறுமையை எதிர்கொண்டுவரும் நாடுகளில் இந்தநாடும் ஒன்றாகும்.

-20.06.2022வரை கொரானாவால் உலகின் உயிரிழப்பு 63.41 லட்சம்பேர். பாதிப்பு 55 கோடிபேர்.

-20.6.2022 வரை 77 லட்சம் உக்ரையினர்கள் அயல் நாடுகளில் தஞ்சம்.

-உலகில்வாழும் மக்கள் தொகையில் 8 பேரில் ஒருவருக்கு மனநோய் காணப்படுகின்றது. பசி, பட்டினி, வறுமை, தற்கொலை அதிகரித்திருப்பதாக ஐ.நா.சபையின் அறிக்கை தெரிவித்துள்ளது.

# யேர்மனி தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்...

-தொகுப்பு:- சாந்தினி துரையரங்கன்-

## யேர்மன் தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சி - 13



Dr.Subashini Kanaga Sundaram - **சுபாசினி கனகசுந்தரம்**
Profession: Enterprise Architect, DXC Technologies, Germany.
**தலைவர், நிறுவனர்: தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு**

முனைவர் க.சுபாஷிணி - மலேசியாவின் பினாங்கில் பிறந்து, பள்ளிக் கல்வியைப் பினாங்கிலும், பின் கணினி இயந்திரத்துறையில் உயர்கல்வியை ஆஸ்திரேலியா மற்றும், ஜெர்மனியிலும், முனைவர் பட்ட ஆய்வை இங்கிலாந்திலும் முடித்தவர். ஜெர்மனி பாடன் ஊர்ட்டென்பெர்க் மாநிலத்தில் வசிக்கின்றார். DXC Technologies என்ற நிறுவனத்தின் ஐரோப்பிய பகுதிக்கான பொறியியலாளராகப் பணியாற்றுகின்றார். சர்வதேச தமிழ் மரபு அறக்கட்டளை என்ற அமைப்பின் தோற்றுனர்களில் ஒருவராகவும் அதன் தலைவராகவும் செயல்படுகின்றார்.
தமிழ் மரபு அறக்கட்டளையின் இணையக் கல்விக்கழகமான "கடிகை" அமைப்பின் இயக்குநர்.

- தமிழகம் மற்றும் உலகில் பல்வேறு நாடுகளில் உள்ள கல்விக் கழகங்களில் 600க்கும் மேற்பட்ட வரலாற்றுப் பாதுகாப்பு உரைகள்
- உலகளாவிய அளவில் ஏறக்குறைய 900க்கும் மேற்பட்ட அருங்காட்சியகங்களுக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டுள்ளதோடு அவை பற்றிய 100க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார்..

- தமிழக அரசின் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் ஐரோப்பிய பொறுப்பாளராக, ஆறு ஐரோப்பிய ஆய்வு மாணவர்களை வழிநடத்தியுள்ளார். www.tamilheritage.org மின்தமிழ்மேடை காலாண்டு ஆய்விதழின் ஆசிரியர்.

- மலாயா பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேராய்வு ஆய்விதழின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகிக்கின்றார்.

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் என்ற அமைப்பின் இயக்குனர் குழுவில் அங்கம் வகிக்கின்றார்.

## எழுதிய நூல்கள்:

1.உ.வே.சாவுடன் ஓர் உலா, ஆழி பதிப்பகம் - 2017
2.ஜெர்மானிய தமிழியல் - நெடுந்தமிழ் வரலாற்றின் ஒரு திருப்புமுனை, காலச்சுவடு பதிப்பகம், 2018 (தமிழக அரசின் சிறந்த ஆய்வு நூல் பரிசு பெற்ற நூல்)
3.Tiruwalluwer Gedichte und Denksruche aus der Tamulichen Sprache (Thiruvalluvar's Prose) Edited and published with Introduction in English> 2019.
4. Der Kural des Tiruvalluvar – Ein Gnomisches Gedicht Ueber die drei Strebeziele des Menschens Edited and published with Introduction in English> 2019.
5. உலக அருங்காட்சியகங்களினூடே ஒரு பயணம் - தொகுதி 1 ஆழி பதிப்பகம், 2020
6. உலக அருங்காட்சியகங்களினூடே ஒரு பயணம் - தொகுதி 2 ஆழி பதிப்பகம், 2021
7. கீழடி - வைகை நாகரிகம் (குழந்தைகளுக்கான வரலாற்று அறிமுகம்), பயில் பதிப்பகம் 2021
8. என் வாசிப்பில் சில பக்கங்கள் - நூல்களின் மதிப்பாய்வுகள், எழிலினி பதிப்பகம் 2021
9. மெட்ராஸ் 1726, காலச்சுவடு பதிப்பகம், 2021
10. சித்திரக் கதைகள் - கையெழுத்து ஆவண அச்சுப்பதிப்பாக்கம், எழிலினி பதிப்பகம் 2021 (இணைந்து எழுதியவர் முனைவர்.ஆனந்த் அமலதாஸ்)
11. வீரமாமுனிவர், எழிலினி பதிப்பகம் 2021, (இணைந்து எழுதியவர் முனைவர்.ஆனந்த் அமலதாஸ்)

## மின்னூல்கள்...

-Robert Langdon is back இன்ஃபெர்னோ என் வாசிப்பில்
-பயணங்கள் தொடர்கின்றன தென்கொரியா

## விருதுகள்...

-வட அமெரிக்கா, FETNA 2016, நியூ ஜெர்சி தமிழ்ச்சங்க விருது - 2016
-வட அமெரிக்கா, டல்லாஸ், சாஸ்தா தமிழ் அறக்கட்டளையின் விருது2017

-வட அமெரிக்கா, வாஷிங்டன் தமிழ்ச்சங்க விருது -2018
-தமிழக அரசின் 2016ம் ஆண்டிற்கான மொழியியல் விருது - 2018
-அக்கினிக்குஞ்சு வாழ்நாள் சாதனையாளர் ஆஸ்திரேலியா, மெல்பர்ன்-2018
-தமிழக அரசின் சிறந்த ஆய்வு நூலுக்கான விருது (ஜெர்மானிய தமிழியல்
-நெடுந்தமிழ் வரலாற்றின் ஒரு திருப்புமுனை )- 2020

## தமிழ் மரபு அறக்கட்டளையின் செயல்பாடுகள்..

-இங்கிலாந்தில் உள்ள பிரித்தானிய நூலகத்துடன் இணைந்து 2003ம் ஆண்டு அரிய தமிழ் நூல்களின் மின்னாக்கச் செயல்பாடு.
-2010ம் ஆண்டு தமிழ்ப்பல்கலைக்கழகத்துடன் இணைந்து தமிழகமெங்கும் ஓலைச்சுவடி தேடும் திட்டச் செயல்பாடு.
-ஐரோப்பாவில் டென்மார்க்,கோப்பன்ஹாகன் நகர அரச நூலகத்தின் அரிய தமிழ் ஆவணங்கள் மின்னாக்கம், பிரான்சின் பாரிஸ் நகரிலுள்ள அரச நூலகத்திலுள்ள அரிய தமிழ் ஆவணங்கள், ஜெர்மனி ஹாலே ஃப்ராங்க நிறுவனத்தின் ஆவணங்கள் மின்னாக்கம்.
-டிஜிட்டல் மெட்ராஸ், தமிழகத்தில் இஸ்லாம், தமிழகத்தில் குடைவரைக் கோயில் கட்டுமானம், தமிழகத்தில் சமணம், தமிழகத்தில் கல்வெட்டுக்கள் பற்றிய பதிவுகள் தொடர்பான செயல்பாடுகள்
-கொரோனா காலத்தில் ஏப்ரல் 1ம் தேதி தொடங்கி 200க்கும் மேற்பட்ட இணைய வழி ஆய்வுரைகள்.
-வாய்மொழி இலக்கியங்களை ஆவணப்படுத்தி தமிழகத்தின் மக்கள் இலக்கியத் தொகுப்புக்களாகக் கணினி ஊடகத்தின் வழி மின்பதிப்பாக்கிய செயல்பாடு.
-தமிழர் வரலாற்றுச் செய்திகளைத் தாங்கிய 500க்கும் மேற்பட்ட வரலாற்று விழியப்பதிவுகளைத் தயாரித்து வெளியிட்டுள்ளது.
-ஜெர்மனி பாடன் உர்ட்டெம்பெர்க் மாநிலத்திலுள்ள ஸ்டுட்கார்ட் லிண்டன் அருங்காட்சியகத்தில் 4.12.2019 அன்று 2 ஐம்பொன் திருவள்ளுவர் சிலைகளை நிறுவும் பணியை நிறைவேற்றியது.
-பள்ளி மற்றும் கல்லூரிகளில் அருங்காட்சியகங்கள் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள்

Social Network:

E-Mail: ksubashini@gmail.com
FaceBook: Subashini Thf, Tamil Heritage Foundation
URL: http://www.subaonline.net ; http://www.tamilheritage.org
News and Media: http://suba-in-news.blogspot.com/

# யேர்மன் தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சி - 14



பெயர் - **திருமதி வசந்தா ஜெகதீஸ்வரன்**
பிறப்பு - புங்குடுதீவு
தந்தை தாய் - அமரசிங்கம், பொன்மலர்
கல்வி - ஆரம்பக் கல்வி வேலணை சரஸ்வதி வித்தியாலயம்
உயர்தரக்கல்வி- வேலணை மத்திய மாகா வித்தியாலயத்தில் (சேர்.வையித்திலிங்கம் துரைச்சாமி)
தொழில் -வேலணை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தில் லிகிதர்.
வாழ்விடம் - ஹயிலென்கேசன் ( Geilenkirchen - Germany)
எழுத்துத்துறை - கவிதை, கட்டுரை, சிறுகதை

இவர் ஈழத்தில் ஆசிரியப்பணி கிடைத்தவேளையில் ஜேர்மனிக்கு இடப்பெயர்வு. வானொலி கேட்டல், எழுதுதல் பத்திரிகைக்கு எழுதுதல் என்பவற்றில் அதிக நாட்டம் உடையவர்.
ஜேர்மனியில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார். கணவர் ஜெகதீசன், பிள்ளைகள் மூவரென இவரது வாழ்வு தொடர்கிறது.

இலண்டன் தமிழ் வானொலியில் ஆரம்பக்காலம் முதல் கடந்த இருபத்தியைந்து ஆண்டுகளாக எழுத்துடன் தொடர்ந்து வருகின்றர். கவியரங்குகள், இவர் மேடைநிகழ்வுகளை நெறிப்படுத்தி நிகழ்த்தி இளையவர்களை முன்னிலையாக்குவதில் ஆர்வம் அதிகம் செலுத்துபவர். ஆண்டு தோறும்

லண்டன் வானொலியின் பொன்மாலை பொழுது நிகழ்ச்சிகளை மிக அழகாக நெறிபடுத்திவருகின்றார்.

ஜேர்மனியில் வெளியாகும் மண்சஞ்சிகைக்கு கவிதை, கட்டுரை,சிறுகதை எழுதி வருகிறார். மண்சஞ்சிகை நாடாத்தும் போட்டிகளில், மகளிர் அமைப்பு நடாத்தும் கவிதைப்போட்டிகளில் பங்கேற்று பல பரிசில்களை இவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். வேறு பல இலக்கியப் போட்டிகளுக்கும் தன் ஆக்கங்களை அனுப்பி எழுத்தாளுமையை வளர்ப்பவர். இவரது எழுத்துப்பாணி தனித்தன்மை உடையது. மற்றவர்களை கவரும் தன்மையுடையது.

யேர்மனி தமிழருவி வானொலியில் கவிதை நிகழ்ச்சியில் இவரது படைப்புகளும் இடம்பெறுகின்றன. ஆரம்பகாலத்தில் கலைவிளக்கு சஞ்சிகையிலும் இவரது எழுத்தாக்கங்கள் பிரசுரமாகியிருந்தன.

யேர்மனி தமிழ்க்கல்விக்கழகத்தில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்க்கல்வி கற்பித்து "தமிழ்வாரிதி" என்னும் பட்டத்தைப் பெற்றுள்ளார். அனைத்திற்கும் தன் தந்தை தாய் காட்டிய வாசிப்பு பழக்கமே ஒளிவிளக்கு என தன்னடக்கத்துடன் கூறுகின்றார். கற்பித்தலில் இணைந்த ஆசிரியர்கள், இலண்டன் தமிழ் வானொலி (பாமுகத்தொலைக்காட்சி) தரும் உராய்வும் உரமும் பெருவிளக்கு என்கின்றார் எங்கள் படைப்பாளி. வாழ்வில் இன்னும் பல படைப்புக்களை உருவாக்கி உயர வாழ்த்துகின்றோம்.

**"அறிவின் சுடரில் அமுதமொழி அன்னைத் தமிழே ஆயுள்வழி"**

இவர் தனது பிள்ளைகளைத் தமிழோடு வளர்த்தெடுத்தபடியால் தாய்மொழியாம் இன்பத்தமிழை உயர்வகுப்புவரை கற்றிருக்கிறார்கள். அத்தோடு **"மலரும் அரும்புகள்"** என்னும் சிறுவர் மலரையும் இப்பிள்ளைகள் தமது சொந்த முயற்சியில் எழுதி வெளியிட இவரே காரணகர்த்தாவாகவும் இருந்திருக்கிறார்!...வாழ்த்துக்கள்!...





# திருமதி கோசல்யா சொர்ணலிங்கம் மறைந்தார்

- 23.05.2022

**"கவிதா ஞானவாரிதி " "கவிதா வித்தகி" "கவிதா வாணி"**

யேர்மனி "மண்" சஞ்சிகையோடும் நீண்டகாலம் பயணித்த எழுத்தாளர்..

மண் சஞ்சிகை 1990ம் ஆண்டு ஆரம்பித்தபோது எம்மோடு இணைந்து பல ஆக்கங்களைப் படைத்தவர். நல்லதொரு கவிஞை, படைப்பாளி, பன்முக ஆளுமைகொண்ட படைப்பாளி. சுமார் 35 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் , எழுத்து, கல்வித் துறைகளில் புலம்பெயர் தமிழினத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்தவர். பண்பாளர் பல மேடைகளில் தமிழோடு கலந்து பவனிவந்த தமிழ் ஆசான் நம்மவிட்டு 23.05.2022 அன்று பிரிந்த செய்தியானது நம்மால் நம்பமுடியாமல் போய்விட்டது. என்ன செய்வது பிறந்த எல்லோரும் ஒருநாள் இந்தப் புவியைவிட்டு நீங்கத்தானே வேண்டும். யாரும் விதிவிலக்கல்லவே!..

இவரின் தமிழ் மற்றும் கவி, சமயம் , இலக்கியம் சமூகப்பணிகளை உலகிற்கு அறிவிக்கும்பொருட்டு இவரின் திறமைகளையும் தமிழுலகம் கண்டுகொண்டு புலம்பெயர் தமிழர் வரலாற்றில் பதியப்படவேண்டும் என்ற நல் நோக்கில் இவரை "மண்" சஞ்சிகையின் 211 வது இதழில் (தை - மாசி 2022) பிரசுரித்து, கௌரத்திருக்கின்றோம் என்பதும் சிறப்பாகும்.

இவர் பிறந்த இடம் - நெடுந்தீவு, தந்தை, தாய் பெயர் - அதிபர்,எஸ். என்.கந்தையா,ஜே.பி, தாய் இலட்சுமி. வாழ்ந்த இடம் - யேர்மனி - முல்கைம், கல்வி கற்ற பாடசாலைகள் - நெடுந்தீவு இராமநாதன் வித்தியாசாலை, நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாசாலை, நெடுந்தீவு மகாவித்தியாலயம் யாழ் இந்துமகளீர் கல்லூரி. கணவன் - அமரர் சொர்ணலிங்கம்.

எழுத்துத்துறை - கவிதை, இலக்கியம்
எழுதிய புத்தகம் - கோசல்யா கவிதைகள் 1 - 1990
- கோசல்யா கவிதைகள் 2 - 2000
கோசல்யா கவிதைகள், கதைகள் 3 - 2003
சொர்ணாஞ்சலி - 2004
( 30 இற்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள்
தொகுப்பு ) காலச்சுடர் - 2018
1984 தொட்ட கவியரங்க நிகழ்வுகள் தொட்டு, 2015 மே மாதம் வரை தமிழர் பன்முக விழாக்களும் இவரது கவியரங்கமாக ,கவிதா நிகழ்வு சுமார் 500க்கும் மேற்பட்ட கவித் தலைமை கண்டது.

வீட்டில் தமிழ் கற்பிக்க 1987 ஆரம்பித்து முல்கைம் ஜேர்மன் தமிழ் ஒன்றிய பாடசாலை தனி ஆசிரியராய் வாரத்தில் இரண்டு நாள் வகுப்பு ஆரம்பித்து. அதைத் தொடர்ந்து 1992 இராட்டிங்கன் , ஒபகௌசன் அறிவாலயம்,ஆசிரியராகவும்.. பின்னால்"1997ஒபகவுசன் ,முல்கைம், டுயுஸ்பேர்க் ஆசிரியராகி, இணைய வழி ஆசிரியராகத் தொடர்ந்தார்.. மொத்தமாக 35 வருடம் ஆசிரிய தொடர்பில்,."தமிழ்வாரிதி" சிறப்பு ஆசிரிய பட்டயம் பெற்றுள்ளார்.

இவற்றோடு சமூக ஆர்வலராக, மனித நேய உறுப்பினர் பதவியையும் வகித்தார். "கவிதா ஞான வாரிதி" பட்டம் அதைத் தொடர்ந்து. (அவுத்திரேலியாவில்,) ஐரோப்பாவில் ,கவிதாவித்தகி,கவிதாவாணி. விருதுகள் கிடைக்கப்பெற்றார்.
2004 ஆண்டு சர்வதேச புலம்பெயர் எழுத்தாளர் ஒன்றியம் ..ஜேர்மனி அரிய செயற்பாட்டில் ,அதன் பதிவான ஊடகவியலளராக 2009 மே மாதம் வரை பணியாற்றினார். "ரேடியோ அன்ரென்னா றூக "சர்வதேச ஒலிபரப்பு சேவையில் தமிழ் செய்தி,நிகழ்ச்சி தொகுப்பு,தயாரிப்பு,அறிவிப்பாளராகவும், 1990 - 1997 வரை பணியாற்றினார்..

கோசல்யா கவிதைகள் நூல்.1,2,3, 4வதாக சொர்ணாஞ்சலி சொர்ணச்சுடர்-பெண்ணியம், என நூல்களை எழுதி வெளியிட்டார். லண்டன் - பாமுக இணைய தொலைக்காட்சியில் இவரது பணி சில ஆண்டுகள் தொடர்ந்தன. இறுதியாக கடந்த சில வருடங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தபடியால் 23.05.2022 அன்று காலமான செய்தி எம்மை நிலைகுலைய வைத்துவிட்டது. அன்னாரின் பிரிவால் துயருறும் உடன்பிறப்புக்கள், நண்பர்கள் யாவருக்கும் ஆறுதல் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல அனைத்து இறைவர்களையும் வேண்டி நிற்கின்றோம்!...

பிரதமஆசிரியர் - மண் சஞ்சிகை



# சாகித்திய ரத்னா தெணியான் மறைந்தார்.. 80 வயது

வடபுலத்தின் மூத்த எழுத்தாளர்.. (06.01.1942 - 22.05.2022)
யேர்மனி மண் சஞ்சிகையாலும் கௌரவம் பெற்றவர்..
(மண் இதழ் இலக்கம் 211 தை + மாசி 2022)

கீழ்நிலை, ஒடுக்கப்பட்ட மக்களின் துயரங்களை உலகிற்குஎடுத்தியம்பி ஆசான்..வடபுலத்தின் ஆத்மாவை இலக்கியமாக்கிய எழுத்தாளர் தெணியான்... சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான இவரின் எழுத்துலகப் பணிகளைப் பாராட்டுமுகமாக எழுத்தாளர்கள் வாழும்போதே கௌரவிக்கப்பட வேண்டும் என்னும் மண் சஞ்சிகையினரின் நல் நோக்கில் இந்தவருடம் 2022 தை-மாசி மண் இதழில் முன் அட்டைப்படத்தில் பிரசுரித்துக் கௌரவித்திருக்கின்றோம்..

கந்தையா நடேசன் என்ற இயற்பெயரைக் கொண்டவரான எழுத்தாளர் தெணியான் அவர்களுக்கு 80 வயது. (6.1.2022) வடமராட்சி பொலிகண்டியில் கந்தையா - சின்னம்மா தம்பதியருக்கு 06-01-1942 இல் பிறந்த அவர் 22.05.2022 அன்று காலமானார் என்ற செய்தியை துயரத்துடன் பகிர்ந்து கொள்கின்றோம்...

இலக்கிய உலகில் பிரவேசித்ததும் தெணியான் என்ற பெயரில் எழுதத்தொடங்கியவர். தான் கல்வி கற்ற கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியிலேயே நீண்டகாலம் ஆசிரியராக பணியாற்றி ஓய்வுபெற்ற தெணியான், மூத்த எழுத்தாளர் கே. டானியலின் வாரிசு எனவும்வர்ணிக்கப்பட்டவர்.நூற்றியம்பதிற்கும் மேற்பட்ட சிறுகதைகள், பலநாவல்கள் உட்பட சில விமர்சனக் கட்டுரைத் தொகுதிகளையும் தமிழ் இலக்கியத்திற்கு வரவாக்கியிருக்கும் தெணியானின் "பாதுகாப்பு" என்ற சிறுகதை யாழ்ப்பாணம் "ஜீவநதி" சஞ்சிகையில் வெளிவந்தது,

இலங்கைப் பாடசாலைகளில் 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான தமிழ்ப்பாட நூலிலும் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து முன்னர் வெளியான "விவேகி" இதழில் 1964 இல் தெணியானின் முதல் சிறுகதை

"பிணைப்பு" வெளியானது. அதனைத் தொடர்ந்து, "மல்லிகை", "ஞானம்", "யாழ்". "முரசொலி," "வீரகேசரி", "தினக்குரல்" , "ஜீவநதி" உட்பட பல சஞ்சிகை இதழ்களில் அயராமல் தொடர்ந்து எழுதியிருப்பவர் இவருடைய "கழுகுகள்"
(நாவல்) "சொத்து" (சிறுகதைத்தொகுதி) "குடிமைகள் (நாவல்) என்பன தமிழ்நாட்டில் பிரபல பிரசுர நிறுவனங்களான "நர்மதா பதிப்பகம், என்.சி.பி.எச் மற்றும் கருப்பு பிரதிகள் வெளியீடுகளின் ஊடாக தமிழக வாசகர்களையும் சென்றடைந்துள்ளன.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இயங்கிய காலத்தில், யாழ்ப்பாணக்கிளையின்செயலாளராகவும் ஆக்கபூர்வமாக செயற்பட்ட தெணியான், தமது படைப்புகளுக்காக இலங்கை தேசிய சாகித்திய விருது, வடகிழக்கு மகாண அமைச்சுப்பரிசு, யாழ். இலக்கிய வட்டத்தின் பரிசு, இலங்கை தேசிய கலை இலக்கியப்பேரவை - தமிழ்நாடு "சுபமங்களா" இதழ் ஆகியன இணைந்து வழங்கிய பரிசு, மற்றும் தமிழ்நாடு கு. சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது, கொடகே விருது, கலாபூஷணம் விருதுஆகியனவற்றுடன் இலங்கை அரசின் உயர் இலக்கிய கௌரவமான "சாகித்திய ரத்னா" விருதும் பெற்றிருப்பவர்.

இலங்கை வானொலிக்காக முன்னர் பல நாடகங்களும் எழுதியிருக்கும் தெணியான், பேராசிரியர் கா. சிவத்தம்பி, மல்லிகை ஜீவா ஆகியோர் பற்றியும் விரிவான நூல்களை வரவாக்கியிருப்பவர். தான் கல்வி கற்ற, ஆசிரியப்பணியாற்றிய தேவரையாளி இந்துக்கல்லூரியின் இரண்டு வெளியீடுகள் மற்றும், மல்லிகை ஜீவாவின் ஈழத்திலிருந்து ஓர் இலக்கியக்குரல் நூல் ஆகியவற்றினதும் தொகுப்பாசிரியருமாவார். கனடாவில் வதியும் தெணியானின் தம்பி க. நவம் நடத்திய நான்காவது பரிமாணம் இதழின் சார்பில் வெளியான"மரக்கொக்கு" நாவல் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வடபிரதேசத்தில் அடிநிலை மக்களுக்காக ஓயாது குரல் கொடுப்பதற்காகஎழுதிவந்திருக்கும் தெணியான், அம்மக்களின் ஆத்மாவை வெளிப்படுத்தும் அதிகமான சிறுகதைகளையும் எழுதியிருப்பவர். அதேசமயம் ஆலயங்களில் பூசகர்களாக பணியாற்றும் அந்தணர்களின் உரிமைகளுக்காகவும் எழுதியவர். அம்மக்களின் துயரம் தோய்ந்த கதையை "பொற்சிறையில் வாடும் புனிதர்கள்" என்ற தலைப்பில் நாவலாக்கியிருக்கும் தெணியான், "ஏதனம்" என்ற நாவலையும் வித்தியாசமாக படைத்திருப்பவர். தமிழ் நாவல் இலக்கியத்தில் தெணியானின் ஏதனம் கவனத்திற்குரிய படைப்பாகும். இதனை இலங்கையில் பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியிட்டுள்ளது.

1964 முதல் ஏறக்குறைய ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக அயராமல் இலக்கியப் பிரதிகளை எழுதிவந்த தெணியானுடைய மணிவிழாக்காலத்தில் ( 2003 ஆம் ஆண்டில் ) பல இலக்கிய ஆளுமைகள் இவர் பற்றி எழுதியிருக்கும் மணிவிழா சிறப்பு நூலும் வெளிவந்திருக்கிறது.

"ஜீவநதிச்சிறுகதைகள் " ஆகியனவற்றை யாழ். ஜீவநதி கடந்த 2013 இல் இவரது பிறந்த தினத்திலேயே விழா எடுத்து வெளியிட்டமை குறிப்பிடத்தகுந்தது. அத்துடன் 2017 இல் ஜீவநதி, தெணியான் பவளவிழா சிறப்பிதழும் வெளியிட்டது. இலங்கையில் "மல்லிகை", "ஞானம்", கனடா "காலம்" யேர்மனி "மண்" சஞ்சிகை முதலான கலை, இலக்கிய இதழ்கள் தெணியானை அட்டைப்பட அதிதியாகவும் பாராட்டி கௌரவித்துள்ளன. இலக்கிய உலகின் மூத்த சகோதரன் தெணியானின் . பல்துறை இலக்கிய ஆற்றல்களை மதிப்பீடு செய்யும். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற இலக்கிய ஆர்வலர்கள் தெணியானின் எழுத்துக்களை நேசித்துவந்துள்ளார்கள்.

சில ஆண்டுகள் நோய்வாய்ப்பட்டிருந்த எழுத்துலக ஜாம்பவான் 22.05.2022 அன்று தனது இல்லத்திலேயே இயற்கை எய்தினார். அன்னாரின் குடும்பத்தவர்கள் மற்றும் எழுத்தாள நண்பர்களுக்கு ஆறுதல் தெரிவிப்பதுடன் எமது இரங்கலையும் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவர்களை வேண்டி நிற்கின்றோம்!..

பிரதம ஆசிரியர் - "மண்" சஞ்சிகை

.....................................................................................................................................

## வாழ்க்கையில் சில விடயங்கள்..

1-வாழ்க்கையில் கொஞ்சம் சுயநலமாகவும் வாழத்தெரிந்திருக்க வேண்டும்.

2-தனிமையை நண்பனாகத் தெரிந்து இருக்க வேண்டும். இல்லை என்றால் அது உங்களுக்குத் துரோகமாக மாறிவிடும்.

3-நன்கு நடிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும். நடிக்கத் தெரியாதவர்களுக்கு இந்தப்பூமியில் இடமில்லை.

4-வெற்றியைப் போலவே தோல்வியையும் ஏற்றுக்கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும். வெற்றி கண்ணை மறைக்கும்... தோல்வி பாடம் புகட்டும்...

# முகமறியாத கனடா உறவின் மனிதநேய உதவி

# 50.000-00 ரூபா....

## 80வது பிறந்த நாளில் தாயகத்துக்கான அன்பளிப்பு!.. மண் சஞ்சிகையின் தொடர் பணியில்... வாசகர்...

கடந்த 32 வருடங்களாக யேர்மனியில் இயங்கிவரும் "மண்" சஞ்சிகையானது, கல்வி, கலை, இலக்கிய, எழுத்துப் பணிகளுடன் தாயகத்தில் அல்லல்படுவோருக்கு நீண்டகாலமாக உதவி வருவதை நீங்கள் அறிவீர்கள்.

அந்த வகையில் எமது தாயகத்துக்கான மனிதநேயப் பணிகளை அறிந்த முகமறியாதா உறவான கனடாவில் வசிக்கும் திருமதி கொன்ஸி அருட்பிரகாசம் குடும்பத்தினர் தமது தாயாரின் 80 வது பிறந்தநாளுக்காக (50.000-00) ரூபாவை எமக்கு வழங்கினர். இச்சந்தர்ப்பத்தில் அவர் குடும்பத்தவர்களுக்குப் பெரு நன்றிகள்..

திருமதி மேரி றோஸ் அருட்பிரகாசம் அவர்களின் 80வது பிறந்த நாள் சென்றவாரம் 28.05.2022 அன்று கனடாவில் எளிமையாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் மனிதநேய உதவியாக முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் - மல்லாவியில் அமைந்துள்ள "ஒளிரும் வாழ்வகம்" அமைப்பினரின் ஊடாக முதியோர்கள் இல்லம் மாற்றுத்திறனாளிகள் இல்லம் என வசிப்போருக்கு சிற்றுண்டி, மதியஉணவு, பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டன. எமது சஞ்சிகையின் அனுசரணையோடு இப்பணிகள் மேற்கொண்டமை சிறப்பான விடையமாகும். அதற்கான நிழற்படங்கள் இந்தச் சஞ்சிகயின் உள் அட்டைப்படத்தில் பிரசுரமாகியுள்ளன.

80வது பிறந்தநாள் கொண்டாடிய அம்மாவிற்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்துடன் மனிதநேயம் படைத்த இந்த நல்லுள்ளத்தின் குடும்பத்தவர்களை பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம். இது போன்ற மனிதநேய உதவிகளை நீங்களும் செய்ய முன்வரலாம். எம்மோடு தொடர்புகொண்டு உங்கள் அன்பளிப்புகளை வழங்கி மனிதநேய உதவிகளைச் செய்யலாம்!.. மனிதம் காப்போம்!.. நன்றிகள்!...

ஆசிரியர் -"மண்" சஞ்சிகை






# ஜோகன்னாஸ் - நட்ஜா திருமண பந்தத்தில்!..

## Johannes + Nadja Wedding 07.07. 2022

வவுனியா "அன்பகம்" சிறுவர் இல்லத்தில் ஒரு பிள்ளையைத் தத்தெடுத்தவர்!..மனிதநேயப் பணியாளனுக்கு திருமணம் 7.7.2022அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்தத் தம்பதிகள் இருவரும் யேர்மனியர்கள்..மணமகன் ஜோகன்னாஸ் அவர்கள் சிறுவயது தொடக்கம் உயர்வகுப்புவரை எனது மகன் சிவாஸ்கருடன் ஒன்றாகப் படித்துப் பட்டம் பெற்றவர். எங்கள் குடும்பத்தோடு நீண்டகாலம் நட்பாய் இருப்பதுடன், மண் சஞ்சிகையின் மனிதநேயப் பணிகள் பற்றியும் அறிந்தவராவர்.

எமது சஞ்சிகை ஊடாக தாயகத்தின் வடகிழக்குப் பகுதிகளின் இல்லங்களில் வாழும் ஆதரவற்ற பிள்ளைகளில் ஒன்பது பேரை எமது வாசகர்கள் தத்தெடுத்து ஒவ்வொருவரும் வருடாவருடம் 480-00 யூரோக்களை (ஒரு லட்சத்துக்கும் அதிகம்) அன்பளிப்பாக அவர்களுக்கு அனுப்பி வருகின்றோம். திருமண பந்தத்தில் இணைந்த ஜோகன்னாஸ் அவர்கள் இந்த ஒன்பது பிள்ளைகளில் வவுனியா அருளகத்தில் வசிக்கும் செல்வி கபிசா என்ற சிறுமியை பொறுப்பெடுத்து கடந்த ஐந்து வருடங்களாக வருடாவருடம் 480-00 யூரோக்களை உதவிவருவதுடன் மேலும் பல நிதி உதவிகளை வன்னி நிலப்பரப்பிற்குச் செய்து வருகின்றார்.

எங்கள் நாட்டுச் சிறுவர்கள்மீது அக்கறைகொண்டு உதவிவரும் மனிதநேயம் படைத்த இந்தத் தம்பதிகள் சீரும் சிறப்புடன் பல்லாண்டுகாலம் நீடுழிவாழ வாழ்த்துகின்றோம்!.வவுனியாவிலிருந்து கிடைத்த வாழ்த்தையும் இங்கே காணலாம்...நன்றி..நட்புக்களே!..உங்கள் வாழ்த்துகளையும் அன்போ வழங்குங்கள்!.

.ஆசிரியர் - மண் சஞ்சிகை -

# கிலிபிடித்த தாயக மக்களும்.. ஊடகங்களும்...

(கலைவாணி ஏகானந்தராசா)

கடந்த வைகாசி மாதம் நாம் தாயகம் சென்றடைந்தோம். கட்டுநாயக்காவிலிருந்து மருதானைக்கு தனியார் வாகனத்தில் சென்றோம். ஜேர்மனியில் ஊடகங்களில் வெளிவந்த செய்திகளாலும் எம்மை பயமுறுத்திய நண்பர்கள் வட்டத்தினராலும் சற்று பயத்துடன் தான் கொழும்பு சென்று இறங்கினோம். கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதாயும் கடைகள் எதுவும் திறக்கவில்லை. பொருட்கள் இல்லை என்பதும் நாம் அறிந்த செய்தி. ஒரு வாரம் கொழும்பில் நின்று மலேசியா செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டோம். பயணச்சீட்டு, விசா போன்றவற்றை நேரடியாக முகவர்களிடம் சென்றும் அவர்கள் வீட்டிற்கே வந்தும் செய்தும் தந்தனர். ஒரு வாரத்தில் எல்லாம் சுமுகமாகவே நடைபெற்றது. வீதிகளில் எந்த கஷ்டமும் இருக்கவில்லை. போக்குவரத்து செலவு மட்டும் முன்னைய ஆண்டைவிட மூன்று அல்லது நான்கு மடங்காகி இருந்தது. ஆங்காங்கே சில வேளைகளில் வீதியில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களின் சத்தம் மட்டும் கேட்கும்.

கொழும்பு கோல்பேஸ்( Gallface) பகுதியில் மட்டுமே தீவிரமாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஆயினும் பதட்டம் எதுவும் இருக்கவில்லை. முக்கியமாக கடைகளில் பொருட்கள் எல்லாம் கிடைத்தன. பிறந்தநாள் விழாக்களும் கொண்டாட்டங்களும் வழமைபோல் நடைபெற்றன. எரிபொருள் தட்டுப்பாட்டினால் போக்குவரத்து செலவு மட்டும் அதிகமாயிற்று. ( யூரோவின் மாற்றீடு 400 ரூபாவாக உயர்ந்திருந்தமையால் அதுகூட எம்மை பாதிக்கவில்லை .)

ஆனி மாதம் மீண்டும் மலேசியாவிலிருந்து கொழும்பு வந்து இறங்கினோம். அதே எரிபொருள் தட்டுப்பாடு பற்றிய பயமுறுத்தல். விலை அதிகரிக்கப்போகிறது அடுத்த வாரத்திலிருந்து எரிபொருள் இறக்குமதி இல்லை அதனால் கடைகளில் பொருட்கள் கிடைக்காது என்றெல்லாம் தினம் பத்திரிகையில் செய்திகள். விலை சற்று அதிகரித்தாலும் பங்கீட்டளவில் எரிபொருள் வழங்கப்பட்டேவந்தது. மேலதிகமாக பதுக்கும் மக்களே இரவு பகலாக வீதிகளில் உறங்கி வீதிகளில் கிடைப்பதை உண்டு காத்திருந்து எரிபொருள் வாங்கி சேகரித்தனர். வீடுகளில் அரிசி, மா எண்ணை என்று அவைகளை வேண்டி பதுக்கிவைத்தனர்.

பணம் இல்லாதவன் அன்றாடத் தேவைக்கான பொருட்களை மட்டும்தான் வாங்குகிறான். மேலதிகமாக சேர்ப்பவர்களுக்கு மட்டுமே தட்டுப்பாடு. அடிக்கடி ஊடகங்கள் மக்களிடையே பீதியைக் கிளப்பிவிடுவதாலேயே மக்கள் கிலிபிடித்து வீதிகளில் கிடக்கிறார்கள். கடந்த மாதம் எரிபொருள் விலை ஏறப்போகிறது இறக்குமதியே இல்லையாம் என்று ஊடகங்கள் பிரசுரித்தன.

காலையில் அச்சுவேலியிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு ஆட்டோவுக்கு 2.000 ரூபா கொடுத்தோம். மாலை நைனாதீவு சென்று திரும்பியபின்

ஆட்டோக்காறர் 2.500 ரூபா கேட்டார். ஏனப்பா காலையில் 2.000 தானே கொடுத்தோம் இப்போ 2.500 கேட்பது ஞாயமா என்று கேட்டேன். அதற்கு ஆட்டோக்காறர் இன்று மதியத்திலிருந்து எரிபொருள் விலை அதிகரித்துவிட்டதாக கூறினார். சரி விலை அதிகரித்ததினால்தானே அதிகப்படியாக பணம் கேட்கிறார் என எண்ணி பணத்தைக் கொடுத்துவிட்டோம். அடுத்தநாள் காலை செய்தித்தாளைப் பார்த்து அதிர்ந்து விட்டோம். எரிபொருள் விலை ஏறப்போகிறது என்ற செய்தியை வைத்தே எம்மை ஏமாற்றிப் பணம் பெற்றுவிட்டார். இவரைப்போல் எத்தனைபேர் ஊடகச் செய்தியை வைத்தே பிழைக்கிறார்கள்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போகும்போதும் திரும்பும்போதும் பஸ் பிரயாணத்துக்கு தலைக்கு 4.000 ரூபாவே அறவிட்டார்கள். அனேகமாக கொழும்பு யாழ்ப்பாணம் பிரயாணிகளை ஏற்றி இறக்குபவர்களிடம் மேலதிகமான எரிபொருள் சேமிப்பில் உள்ளது என்பது உண்மை. வேலைக்குச்செல்லும் தினக் கூலிகளுக்குத் தான் சேமிப்பில் எரிபொருள் வாங்கி வைப்பதற்க்கு பணமும் இல்லை கையூட்டுக்கொடுத்து பதுக்குவதற்கும் வழியில்லை. இரண்டு நாட்கள் இரவும் பகலும் வீதியில் கிடந்து கஸ்டப்பட்டு பெறும் பெற்றொல் எத்தனை நாளுக்கு போதும்?

நான் கண்ணால் பார்த்த சம்பவம் ஒன்று ஒரு குழந்தையின் தந்தை முச்சக்கரவண்டி ஓட்டுனர். இரண்டு நாட்களாக வீட்டுக்கு வரவில்லை. முச்சக்கரவண்டிக்குப் பெற்றோல் கிடைத்தால் தான் ஏதாவது இரண்டுபேருக்கு வாடகைக்கு ஓடி வரும் பணத்தில் வீட்டுச்செலவுக்கு பணம் கொடுக்கமுடியும். மூன்றாவது நாள் வீட்டுக்கு தொலைபேசி எடுத்த ஓட்டுனர் தனக்கு குழந்தையைப் பார்க்வேணும்போல இருக்கிறது தன்னால் இந்த நீண்ட வரிசையை விட்டு வர முடியவில்லை என்று கூறினார்.

உடனேயே மனைவி குழந்தையை தூக்கிக்கொண்டு புறப்பட்டார். அவர் கையில் கணவருக்கு உணவும் தேநீர் போத்தலும் இருந்தது. மிக வருத்தமாக இருந்தது. இப்படி எத்தனை குடும்பங்கள் சீரழிகின்றன. ஊடகங்கள் மக்களை பயமுறுத்திக்கொண்டிருக்கின்றன. அரிசி, மா, சீனிதட்டுப்பாடு வரப்போவதாக ஊடகங்ளில் செய்தி வந்த அடுத்த நாளே இந்தப் பொருட்கள் காணாமல் போகின்றன. பணம் உள்ளவர்கள் பதுக்கிவிடுகின்றனர். "என்னிடம் 40 லிற்றர் பெற்றோல் கைவசம் இருக்கிறது கைக்குள்ள ஆள் வைத்திருக்கிறேன். போத்தலோடை போனால் டாங்கை நிரப்பிக்கொண்டு வருவன்" என்று வீராப்பு பேசியவர்கள் எத்தனைபேரை பார்த்திருக்கிறேன். இதுவரை இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியின் பின் இந்தியா கொடுத்த எரிபொருளை மக்களுக்கு பங்கீட்டளவில் மோசடி செய்யாது (பதுக்கி வைக்காது) வழங்கியிருந்தால் நாட்டில் நிலமை இவ்வளவு தூரம் பாதிப்படைந்திராது என்பது என் கருத்தாகும்!..

# மண் சஞ்சிகையின் மனிதநேயப் பணியில் உருவான சாதனைப் பெண்!..

(கலைவாணி. ஏகானந்தராஜா)





தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களுக்கு வாழ்நாள் செலவை பொறுப்பேற்று உதவும் மனிதநேயப்பணியில் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக மண் சஞ்சிகையுடன் இணைந்து வவுனியா அருளகத்தில் வளரும் பிள்ளைகளுக்கு கரம்கொடுத்துவரும் உறவுகளில் யேர்மனி- டியூஸ்பேக் நகரத்தில் பிறந்து வளர்ந்த சிவதர்ஷினி. சிவராஜா (தற்போது திருமதி.சிவதர்ஷினி.பிராங்ளின்) அவர்களும் ஒருவர். இவர் வவுனிய "அருளகம்" இல்லத்தில் வசிக்கும் செல்விதட்சாயினிக்கு சிறு வயதிலிருந்து கல்விக்காகவும் பிற செலவுகளுக்காகவும் மாதா மாதம் பணம் அனுப்பி வந்தார்.

செல்வி தட்சாயினி 10 ஆம் ஆண்டு கல்வியை சிறப்பாக கற்று முடித்ததுடன் தனக்கென ஒரு தொழிலையும் தேடிக் கொண்டார். கை வேலைப்பணியில் ஆர்வங்கொண்ட இவர் மிக நேர்த்தியாக அழகான கைப்பைகள் ஆவணப்பத்திர உறைகள் பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள் வைக்கும் உறைகள் என பல்வேறுபட்ட பொருட்களை தானே அனைத்துமாக செய்து வைத்திருந்தார். மிக சுத்தமான தரமான வேலைப்பாடு. கடந்த 19.06.2022 அன்று நான் நேரில் பார்த்து வியந்தேன் . அவரிடம் பேசியபோது தான் தனித்துவமான தொழில் செய்ய விரும்புவதாகவும் மேற்கல்வியை தொடராது சொந்தமாக இப் பொருட்களை செய்து சந்தைப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை தன்னிடம் இருப்பதாகவும் கூறினார் அருளக அதிபர் இந்த மாணவியை ஊக்கப்படுத்தி இவரது கைவேலைப் பொருட்களை பணம் கொடுத்து வாங்கியதுடன் மாணவிக்காக தனி வங்கிக் கணக்கும் ஆரம்பித்து வைத்துள்ளதாக அறிந்தேன்.. நானும் சில பொருட்களைப் பெற்றுக்கொண்டு பணம் கொடுத்து ஊக்கப்படுத்தினேன்.

(73ம் பக்கம்)

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- வவுனியா) - 480-00
02. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவுதிருகோணமலை - 480-00
03. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- மன்னார் - 480-00
04. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00
06. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - மட்டக்களப்பு - 480-00
07. திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா
08. திரு. Johannas Gruendler - ஜேர்மன் - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா
09. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி - 200-00
10. செல்வன் பிரணவன் யோகராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 240-00

72ம் பக்கத் தொடர்ச்சி...

கல்வி என்பது உயர் தொழிலுக்காக மட்டுமல்ல. அறிவுக்காகவும் தான். எல்லோருமே டாக்டராகவும் எஞ்சினியராகவும் வரவேண்டியதில்லை. செல்வி.. தனக்கான சுய தொழிலை தேர்ந்து கொண்டார். யார் முன்னாலும் கை கட்டி நிற்கவேண்டியதில்லை. இவருக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது.ஆகவே என் மனம் நிறைந்த வாழ்த்துகளை செல்விக்கு தெரிவிப்பதுடன் இவருக்கு கைகொடுத்து உதவிவரும் திருமதி.சிவதர்ஷினி. பிராங்ளின் அவர்களையும் வாழ்த்துகிறேன்.இதுபோல அருளகம் (வவுனியா) பல ஆளுமையுடைய சிறார்களை உருவாக்க இறைவன் துணை நிற்பாராக.

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-05-2022 + 130-73

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா நஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

................

480-00 + 480-00

09. செல்வி ஸ்ரெவ்வானி மகாலிங்கம் -Oberhausen + 600-00
(பிறந்தநாள் அன்பளிப்பு) (2.00.000-00 ரூபா)
10. திரு, திருமதி ஜெகான் தாரணி - London + 172-82
(தாயாரின் நினைவுநாள்அன்பளிப்பு)(48.833-87 ரூபா)
10. திருமதி கொன்ஸி அருட்பிரகாசம் - Canada + 170-00
(தாயாரின்80வது பிறந்தநாள்அன்பளிப்பு)(50.000-00 ரூபா)
11. திரு பாலா காந்தரூபன் - Neuss + 20-00
12. திரு வைரமுத்து சீனிவாசன் - London + 50-00
13. "செஞ்சிலுவைச் சங்கம்" தமிழ்ப்பெண்கள் அமைப்பு
- Hamm + 210-00

..............

1222-82 +1222-82

--------------

**+ 1833-55**

\+ 1833-55

**அனுப்பியது:-**

1-சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை- 300-00
(செல்வி ஸ்ரெவ்வானியால் நேரடியாகக் கொடுக்கப்பட்டது
2022 ஏப்ரல் மாதம் - ஒரு லட்சம் ரூபா (1.00.000-00)
2-"நல்லாயன்" சிறுவர் இல்லம் - மாங்குளம் - 300-00
(செல்வி ஸ்ரெவ்வானியால் நேரடியாகக் கொடுக்கப்பட்டது
2022 ஏப்ரல் மாதம் - ஒரு லட்சம் ரூபா (1.00.000-00)
3-ஒளிரும் "வாழ்வகம் மல்லாவி - துணுக்காய்
18.3.2022 (ரூபா 48.833-87) 172-82
22.5.2022 (ரூபா 50.000-00) 170-00
.............
342-82 - 342-82
4-செபமாலை சிறுவர் இல்லம் பேசாலை- மன்னார் - 480-00
(சஞ்சிகையின் வாசகர் ஒருவரின் வருடாந்த அன்பளிப்பு)
5-"அன்பகம்" சிறுவர் காப்பகம் - வவுனியா - 500-00
(சஞ்சிகையின் வாசகர் ஒருவரின் வருடாந்த அன்பளிப்பு)
..................
\- 1922-82

மண் கணக்கு வங்கி வரி
01.05.2022 -31.5.2022 - 15-42

01.06.2022 -30.06.2022 - 14-81
..............
30-23 30-23
..................
\- 1953-05 - 1953-05
-------------
30.06.2022ல் மீதி கையிருப்பு (மேலதிகச் செலவு) **- 119-50**
.......................................................................................................................---------------

**நன்றிகள்!..**

யேர்மனி கம் (Hamm) நகரிலுள்ள செஞ்சிலுவைச்சங்க தமிழ்ப்பெண்கள் அமைப்பினர் மேற்கொண்ட நிதிதிரட்டலில் சிறீலங்காவின் ஆதரவற்ற பிள்ளைகளுக்காக 210-00 யூரோக்களைச் சேகரித்து எமக்கு அனுப்பி வைத்தனர். இவர்களின் மனிதநேயப் பணிகளுக்காக எமது இதயபூர்வமான நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம். **- ஆசிரியர் -**

வை.சிவராசா

மண் சஞ்சிகை

ஜேர்மனி

நன்றி நவில்கிறோம்

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்தினாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பெண்தலைமைத்துவ குடுபங்கள், நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவினர் மத்தியில் பணியாற்றி வருகிறது. அந்த வகையில் சிவதர்சினி பிராங்ளின் அவர்களின் பிறந்தநாளினை சிறப்பிக்கும் வகையில் அனுப்பி வைத்த 40,000.00ருபா நிதியினை பயன்படுத்தி எமது மகிழ்வு இல்லம் பிள்ளைகள் மற்றும் ஆதரவற்ற முதியோாகளிற்கு (தேறாங்கண்டல் முதியோர் இல்லம்) மதிய உணவு மற்றும் பரிசில்களும் வழங்கி மகிழ்வித்தோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்வதுடன் சமூக நலன்நோக்குடன் இதனை ஏற்பாடு செய்து தந்த தங்களிற்கு ஒளிரும்வாழ்வு அமைப்பு சார்பாக அகம்நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் தங்களது இவ்வாறான செயற்பாடுகள் மேலும் நிறைவான பணிகளைச் செயவதற்கு உதவியாகவும் ஊக்கமளிப்பளிப்பதாகவும் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி

[illegible]
செயலாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

**ஒளிரும் வாழ்வு அமைப்பு - துணுக்காய்**

**Olirumvaalvu Organizaions - Thunukkai**

Gmail:-olirumvaalvu.Thunukkai@gmail.com

T.P:021 206 0620

Reg No: MU/DS/TNK/RVSS/22/2015

பற்றுச் சிட்டை

திகதி: 23 / 05 /2022

பெயர்:- மண் சஞ்சிகை ஊடாக திரு [illegible] ஜொனதன், தொ.இல

முகவரி: [illegible] - ஜெர்மனி

விபரம்:- 80வது பிறந்தநாளினை, முதியோர், மகிழ்வு இல்ல பிள்ளைகளுக்கான மதிய உணவு மற்றும், பரிசுப்பொருட்கள் வழங்கல்.

தொகை எழுத்தில்:- ஐம்பதாயிரம் ரூபா மட்டும். மட்டும்
பெற்றுக்கொண்டேன்.

| ரூபா | 50000/= |
|---|---|

பணம் வழங்கியவர் ஒப்பம்

1671

[illegible]
ஒளிரும்வாழ்வு அமைப்பு
துணுக்காய்

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015
T.P:- 0212060620 Fax:-0774868085
FarmNo:-0213204790 Viber:-0774868085
Mobile:-0774868085

திகதி 30/05/2022

திரு வை. சிவராஜா

மண் சஞ்சிகை

யோர்மனி

நன்றி நவில்கிறோம்

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்தினாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பெண்தலைமைத்துவ குடுபங்கள், நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவினர் மத்தியில் பணியாற்றி வருகிறது. அந்த வகையில் தங்கள் சமூக நலன்நோக்கிய நற்சிந்தனையுடன் திருமதி மேரிறோஸ் அருட்பிரகாசம் அவர்களின் 80வது பிறந்தநாளினை சிறப்பிக்கும் வண்ணம் தங்களால் ஏற்பாடு செய்து தந்த 50,000.00ரூபா நிதியினை பயன்படுத்தி மகிழ்வு இல்லம் பிள்ளைகள் மற்றும் ஆதரவற்ற முதியோர்களிற்கும் (முதியோர் இல்லம் தேறாங்கண்டல்) சிறந்த மதிய உணவினை வழங்கியதுடன் பரிசு பொருள் வழங்கி அவர்களை மகிழ்வித்தோம் என்பதையும் தெரிவித்துக்கொள்வதுடன் தங்களின் இவ்வாறான செயற்படுகள் மேலும் எமது பணியினை ஊக்குவிப்பதாக உள்ளதுடன் தற்கால சூழலில் மிக அவசியமானதாகவும் காணப்படுகிறது. ஆகவே ஒளிரும்வாழ்வு அமைப்பு சார்பாக அகம்நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி

செயலாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

www.olirumvaalvu.com  olirumvaalvuthunukkai2012@gmail.com  olirumvaalvu thunukkai

**UNITED MIND**
Association for Sustainable Community Development
**(Non-profit organisation)**

Date: 10/06/2022

வை.சிவராசா
பிரதம ஆசிரியர் அவர்களுக்கும்,
"மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகைக்கும்,
இதழின் வாசகர் பெருமக்களுக்கும்.

**நன்றிநவில்தல்**

**"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலின் பெரிது"**

**பொருள்:** பயன்கருதாதவர் செய்த உதவியின் நன்மையினை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலையும் விட அளவினால் மிகப் பெரியதாகும். என்பது வள்ளுவன் வாக்கு

இலங்கையில் இரத்தினபுரி மாவட்டத்தில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மலையக தமிழ் மக்களுக்கு, தைப் பொங்கலை கொண்டாடும் முகமாக **யேர்மனி "மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகை** வழங்கிய கொடையளிப்பானது ஏறத்தாள **46** குடும்பங்களுக்கு தைப் பொங்கலை கொண்டாட உதவி இருப்பதை குறித்து பெருமைக் கொள்கின்றோம். நீங்கள் செய்திருக்கும் இக்கைங்கரியமானது காலத்தின் தேவைக்கேற்ற பெரும்புண்ணியமாகும்.

எவ்விதமான பிரதி உபகாரணமும் எதிர்பாராமல் இவர்கள் செய்த உதவி கடலினும் பெரிதாகும். **1,05,055.00** ரூபா பெறுமதியான இந்த பணியானது உண்மையில் வறுமை காரணமாக தைப் பொங்கலை கொண்டாட வழியற்ற பலருக்கு உதவி இருக்கிறது என்பதில் ஐச்சந்தேகமுமில்லை.
உதவிக்கரம் நீட்டிய எம் உறவுகளை ஒரு போதும் மறவோம். எம்மக்கள் சார்பாக **"மண்"** கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகைக்கும், இதழின் வாசகர் பெருமக்களுக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது"**

**நன்றிகள்**

இவண்
க.சிவராஜ்வளவன்
தலைவர்

+94 45 449 4514, +94 766 161 522 | unitedmind.lk@gmail.com
No.72, Reservoir Road, Ratnapura, Sri Lanka.

# பாலு மகேந்திரா திரைப்பட நூலகம்...

Balumahendra Library.

பாலு மகேந்திரா நூலகத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, வளர்ந்துவரும் ஈழத்து எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, சென்ற ஆண்டு போல இம்முறையும் சிறுகதைப் போட்டி ஒன்றினை நடாத்த முன்வந்துள்ளோம்.

பின்வரும் விதிகளுக்கு உட்பட்டு உங்கள் சுயவிபரக்கோவை மற்றும் சிறுகதைகளை எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**போட்டி விதிமுறைகள்:**

ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதைகள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.
ஒருவர் எத்தனை சிறுகதைகளையும் அனுப்பிவைக்கலாம்.
சிறுகதைகள் உங்கள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும். (வேறு கதைகளைத் தழுவியதாக இல்லாதிருத்தல் வேண்டும்.)
சிறுகதைகள் முன்னர் வேறு எங்கும் வெளிவராததாக இருத்தல் வேண்டும்.
சிறுகதைகளை யுனிகோட் (Unicode) முறையில் தட்டச்சு செய்யப்பட்டு, மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும்.
சிறுகதைகள் 1000 வார்த்தைகளுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
சிறுகதைகள் 2022 ஓகஸ்ட் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். E.mail balumahendralibrary.org@gmail.com

**போட்டி தொடர்பான விபரங்கள்:**

எமது தெரிவுக்குழுவினரால் சிறந்த 20 சிறுகதைகள் தெரிவுசெய்யப்பட்டு, அவை மூன்று பேர்கொண்ட நடுவர்களிடம் தனித்தனியாகக் கையளிக்கப்படும்.
நடுவர்களின் வரிசைப்படுத்தலின் அடிப்படையில் இறுதி முடிவு அறிவிக்கப்படும்.
இதில் நடுவர்களின் முடிவே இறுதியானது.
நடுவர்களின் விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.
வெற்றிபெறும் சிறுகதைகள் தொகுப்பாக வெளியிடப்படும்.
சிறுகதை உரிமம் என்றும் எழுத்தாளருடையது.
முடிவுகள் அறிவிக்கப்படும் நிகழ்வில், படைப்பாளர்களின் சிறுகதைகள் தொடர்பிலான பின்னூட்டங்கள் குறித்து நடுவர்களுடனான கலந்துரையாடல்கள் இடம்பெறும்.
முதலாம் பரிசு: 25 000 ரூபா இரண்டாம் பரிசு: 15 000 ரூபா
மூன்றாம் பரிசு: 10 000 ரூபா
10 ஆறுதல் பரிசுகள்: ஒவ்வொரு சிறுகதைக்கும் தலா 5 000 ரூபா
இச்சிறுகதைப் போட்டியினை இணைந்து நடாத்துவோர் "எங்கட புத்தகங்கள்" மற்றும் "பட்டறை"
அனைத்துப் பங்குபற்றாளர்களுக்கும் எமது முற்கூட்டிய வாழ்த்துக்கள்.
இவ்வண்ணம்

**நிர்வாகம் ...பாலு மகேந்திரா திரைப்பட நூலகம் மற்றும் கற்கை வள நிலையம்.**

# தமிழ்ப்பெண் எழுத்தாளர்கள் விபரத்திரட்டு!...
# யேர்மனிய தமிழ்ப்பெண்களுக்கு அரிய வாய்ப்பு!..




யேர்மனியில் வாழ்ந்துகொண்டிருக்கும் பெண் எழுத்தாளர்களின் விபரப்பட்டியல்இதுவரை காலமும் எவராலும் தயாரிக்கப்பட்டு, ஆவணப்படுத்தப்படவில்லைஎன்பது துர்அதிஸ்டவசமே. பெண்களில் திறமைகள், ஆளுமைகள்,கல்விப்பணிகள், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்ப் பணிகள்,சமூகப்பணிகள் எனப்பல்வேறு பொதுப்பணிபணிகளைச் செய்துவரும் தமிழ்ப்பெண்களை உலகம்வாழ் நம்மக்களுக்கு அறியப்படுத்த வேண்டியது காலத்தின்கட்டாயாகும்.

யேர்மனியில் வாழ்ந்துவரும் தமிழ்ப்பெண்களில் பல பெண்கள் கவிஞர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், இலக்கியவாதிகள்,பேச்சாளர்கள், பொதுப்பணியாளர்கள், ஆன்மீகவாதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பல்வகை ஆளுமை மிக்கவர்களாகக் காணப்படுவது சிறப்பான அம்சமாகும்.எனவே இப்பணிகளில் ஈடுபட்டுவரும் தமிழ்ப்பெண்களின் விபரத்திரட்டு ஒன்றைவெளிக் கொண்டுவரும் முயற்சியில்,ஆவணப்பதிவு ஒன்றைத்தயாரித்து நூலாக உருவாக்கும் பணியில் ஈடுபட்வருகிறோம்.

நீங்களும் உங்கள் தகவல்கள், தரவுகளைத் தந்து உதவினால் இப்பதிவில் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம். காலம் தாழ்த்தாது விரைவாகத் தங்கள் தகவல்களை அனுப்பி உதவலாம்...
நன்றி!..

**திருமதி சாந்தினி துரையரங்கன்.** Essen - Germany.
மின்னஞ்சல் niruthiyam@hotmail.de "மண்"சஞ்சிகை" v.sivarajah@arcor.de

(இதுவரை (14) பதின்நான்கு தமிழ்ப் பெண்களின் விபரங்கள் வெளிவந்துவிட்டன)



















"மண்" சஞ்சிகையின் முகமறியாத கனடா உறவுகளான திருமதி கொன்ஸி அவர்களின் தாயார் திருமதி மேரி றோஸ் அருட்பிரகாசம் அவர்களின் 80 பிறந்த நாளையொட்டி 28.05.2022 அன்றையதினம் இவரின் நிதிப்பங்களிப்பில் முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காயிலுள்ள ஒளிரும் இல்லத்தின் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு மண் சஞ்சிகையின் அனுசரணையுடன் சிற்றுண்டி, மதிய உணவு, பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

**MANN**
Germany / Ausgabe 214












சிறீலங்காவில் தொடரும் அரசியல், பொருளாதார நெருக்கடிகளும் மக்களின் வறுமை, தட்டுப்பாடு, விலைஉயர்வு, பசி, பட்டினி அவலவாழ்வும்

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |